# ஞானச்சுடர்




தை 2021

277ஆவது மலர்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்**
**உய்யா விழுமந் தரும்.**

**பொருள் :** தான் முன்பு யாது துன்பமும் செய்யாதிருக்கத் தனக்குத் தீமை செய்தவருக்குத் தானும் எதிர் துன்பம் செய்தால் அது பிழைத்தற்கரிய துன்பத்தைக் கொடுக்கும். (313)

**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்.**

**பொருள் :** தனக்குத் தீங்கு செய்தவரைத் தண்டித்தலாவது, அவர் நாணும்படி அவருக்கு நன்மைகளைச் செய்து அவ்விரண்டையும் மறத்தலாகும். (314)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

### ஆசான் அருள்

**கலிவிருத்தம்**



திங்களுங் கங்கையுஞ் சீறும் பாம்பும்
மங்கையும் மானும் மழுவுஞ் சூலமும்
அங்கியு முடுக்கையும் அரக்கனும் பொலியும்
சிங்காரங் கண்டார் சீவன் முத்தரே. 09

அகரத்தில் உகரமும் மகரமும் சேர்த்து
சிகரமும் வகரமும் யகரமுஞ் செபித்தாற்
பகரவொண் ணாத பாத மணிந்து
தகரா காயத்தில் தனித்து வாழலாம். 10

அகலிடத் தாசான் அருளா லடியேன்
புகலும் பத்தும் போற்றி யேத்துவார்
இயல்சேர் இருவினை இடுக்கண் நீக்கிப்
பகலிர வில்லாப் பதவி யடைவரே. 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 277

2021 **பொருளடக்கம்** தை


| | | |
|---|---|---|
| இன்றைய பண்பாட்டுச் சீரழிவு | செல்வி தி கிஷாந்தினி | 01 - 03 |
| "திருக்கரசை புராணம்"... | செல்வி ச. சரணியா | 04 - 06 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 07 - 09 |
| ஆன்மிக வாழ்வு | கு. சோமசுந்தரம் | 10 - 11 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 12 - 15 |
| குருவும் சிஷ்யனும் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 16 - 17 |
| ஆனந்த வாழ்வளிக்கும்... | வி. செல்வரத்தினம் | 18 - 21 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 22 - 23 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 24 - 25 |
| வீரபத்திர காளியம்மன்... | பா. முருகானந்தன் | 26 - 27 |
| சந்நிதியான் ஆச்சிரமம்... | தொகுப்பு | 28 - 31 |
| சீமானைப் போலிருந்து... | கே.எஸ். சிவஞானராஜா | 32 - 35 |
| மூவாயிரம் ஆண்டுகள்... | கு. சிவபாலராஜா | 36 - 40 |
| நோயற்ற வாழ்வு | முருகவே பரமநாதன் | 41 - 44 |
| அகந்தையை அழித்த... | ஆர்.வீ. கந்தசுவாமி | 45 - 46 |
| அவரச உலகத்தில்... | பு. கதிரித்தம்பி | 47 - 48 |
| மண்ணில் நல்ல... | திருமதி தி. இந்திரா | 49 - 52 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 53 - 54 |
| திரு முறுகண்டிப்... | வே. சேனாதிராசா | 55 - 56 |
| கதிர்காம யாத்திரை | செல்வி சி. நிலா | 57 - 60 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Prited & Published By:

*Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.*

Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பார்கள். ஆனால் நமக்கோ பிறந்துள்ள புத்தாண்டும் - தைப்பிறப்பும் சொல்லொணாச் சோகத்தின் தொடர்ச்சியாய் நீண்டு, மேலும் மேலும் நம்மைச் சோதனைக்குள்ளாக்குகிறது.

நமது இயல்பு வாழ்க்கை - அவரவர் தொழில்துறை சார்ந்த அமைதியான வாழ்க்கை, சீராக்கமுடியாத அளவிற்குச் சிதைந்துபோயுள்ளது.

அன்றாட உழைப்பு - அமைதியான வாழ்க்கை என்றிருந்த சராசரி குடும்பங்கள் அமைதியிழந்து அல்லாடித் திக்குத் திசையறியாமல் திணறித் திண்டாடி நிற்கின்றன.

இத்தனைக்கும் கடந்துபோன ஆண்டினில், எவருக்கும் சொல்லாமல் - எங்கிருந்தோ வந்து எம்முடன் ஒட்டிக்கொண்ட கொரோனாத் தொற்று ஆட்டிப் படைத்து சமுதாய அமைதியையே ஆட்டங்காண வைத்துவிட்டது.

எத்தனை எத்தனை சோதனைகள்.... எத்தனை எத்தனை விதிமுறைகள்.... அத்தனையையும் அச்சொட்டாகக் கடைப்பிடித்தாலும் "அசையமாட்டேன்" என அடம்பிடித்து நிற்கிறது கொரோனா வைரஸ்.

இனிமேலும் என்ன? இவ்வாண்டுதானும் ஏதாவது நல்லது நடக்குமா என ஏங்குகிறது மனம்.

நடக்கும்..... நல்லதே நடக்கும்..... எல்லாம் நமது நடத்தையில் உண்டு.

இன்னும் விதிமுறைகளை இறுகப் பிடிப்போம். கைகளைக் கழுவுவோம்.... முகக் கவசம் அணிவோம்..... சமூக இடைவெளியைப் பேணுவோம். அதன்மூலம் கொரோனாவை விரட்டி வெளியேற்றி விடுவோம்.

அவ்வாறு அமைந்துவிட்டால் நமக்கு வாழ்வுண்டு..... வளமுண்டு..... நிறைவான எதிர்காலமுமுண்டு.

இதன்மூலம் பிறந்துள்ள புத்தாண்டும் - தைப்பொங்கல் திருநாளும் நமக்கு நல்லாண்டாக அமைய சந்நிதி வேலவனைக் கைதொழுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 23. திருச்செந்தில் வகுப்பு



சந்த பந்த முந்து விந்தை செஞ்சொ லின்ப்ர பந்த நந்து
சங்க மங்க லம்பொ ருந்து தமிழ்பாடியே
தஞ்ச மென்று சென்று சென்று நஞ்சு விஞ்சு நெஞ்ச வஞ்சர்
தங்கண் முன்பு நின்று நின்று மெலிவோதியே:,

சிந்தை நொந்து நொந்து நைந்து நைந்து வெம்பி வெம்பி யங்கி
சிந்தி யிந்த வெங்கு டம்பை யழிபோதுமா
சிங்க முன்பு குந்த தந்தி யின்கு லங்கலங்கு பண்பொ
சிந்த துன்ப மென்றொ ழிந்து கரையேறுவேன்:,

அந்த ரங்க ளண்ட ரண்ட மண்ட லங்கு லுங்க நின்ற
சைந்த சைந்து பந்தெ ழும்ப அசுராதியோர்
அங்க டங்க டுண்ட துண்ட கண்ட பந்தி சண்டை வந்த
லைந்து ருண்டு மண்டை சிந்த அடர்கோபனே:,

கந்த சந்த நுங்கு கும்ப கொங்கை யிந்தி ரன்ம டந்தை
கங்க ணம்பு ரந்த வென்றி யணிநேயனே
கம்பு மஞ்ச முந்தி கழ்ந்தி ருந்தி டுந்தி றஞ்செ றிந்து
கஞ்ச நன்ற லர்ந்த செந்தின் முருகேசனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**மக்கள் வங்கி இளைப்பாறிய உத்தியோகத்தர்கள்**

திரு சி. பத்மநாதன்
திரு வ. சண்முகநாதமுதலி
திரு க. சுசீந்திரன்
திரு ந. நாகேஸ்வரன்
திரு இ. யோகராசா
திரு தி. சிவகுமாரன்
திரு க. சண்முகலிங்கம்
திரு இ. சிவஞானசுந்தரம்பிள்ளை
திரு பி. கிருஸ்ணானந்தன்
திரு க. ஞானசீலன்
திரு த. சிவகுமார்
திரு பொ. தங்கராசா
திரு எஸ். இராஜேந்திரம்
திரு க. ஞானச்சந்திரன்
திரு க. ஸ்ரீதரன்
திரு க. அமிர்தலிங்கம்
திரு து. பாலேந்திரா
திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
திருமதி சு. விஜயகுமார்
திரு K. சிவப்பிரகாசம்
செல்வி விமலா கந்தையா
திருமதி கீர்த்திகா சிவதீபன்
திரு த. தவேந்திரராஜா
திரு த.து. ஜெகநாதன்
திருமதி சுகந்தி தயாபரன்
திரு சி. மனோராஜ்

**மக்கள் வங்கி யாழ். பிரதேச காரியாலய உத்தியோகத்தர்கள்**

திரு R. ஆனந்தராஜ்
திரு S. சுரேஸ்குமார்
திரு M. மாலவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி வி. பிரியகாந்தினி
திரு T. ஆனந்
திரு P. உதயணன்
திரு K. கோடீஸ்வரன்
திருமதி B. கஸ்தூரி
திருமதி P ருக்ஷலா
திரு P. தேவநேசன்
திருமதி T. பிரதீபா
திரு S. ஜெயராசா
திரு M. சுதாகரன்
திருமதி S. சிந்துஜா
செல்வி M. மயூரி
திரு K. சந்திரகுமார்

**மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லிவீதி உத்தியோகத்தர்கள்**

திரு ப. பார்த்தீபன்
திருமதி செ. ஞானேஸ்வரி
திருமதி பி. ஜனனி
திருமதி இ. பத்மகலா
திருமதி தி. வானதி
திரு ந. சஞ்சீவ்
செல்வி மு. ஹேமப்பிரியா
திரு ஞா. யுகதாஸ்
திருமதி பி. சிந்துளா
திருமதி த. லோஜினி
திருமதி ஜெ. பகீரதி
திருமதி ப. சுதர்சினி
திரு கு. குலசீலன்
திரு கோ. அஜந்தன்
திருமதி தி. நித்தியா
திருமதி சு. பிரசாந்தினி
திருமதி பி. சிவசொரூபி
திருமதி பி. நீரஜா
திருமதி உ. தனுசுயா
திரு ப. சீராளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் வங்கி யாழ். பிரதான வீதி உத்தியோகத்தர்கள்**

திரு G. விஜயகுமார்
திருமதி S. வனஜா
திரு T. ரஜிந்தன்
திருமதி S. உஷாந்திகா
திருமதி I தட்சிகா
திருமதி S. ஜிரானு
திருமதி ஜெ. சயந்தினி
திருமதி S. லக்ஷாந்தி
திருமதி Y. சுபாஜினி
திரு T. அங்ஷன்

**மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள்**

திருமதி கா. மீரா
திருமதி சு. துவாரகா
திருமதி உ. குகன்யா
திருமதி ஆ. நந்தினி
திரு V. பிரகாஸ்
திருமதி கி. மனஸ்வினி
திரு R. சுகிர்தன்
செல்வி இ. யமுனாவாணி

**மக்கள் வங்கி யாழ். கன்னாதிட்டி உத்தியோகத்தர்கள்**

திரு சி. பகீரதன்
திருமதி இ. சுமணா
திருமதி ச. கிருபாளினி
திருமதி சை. சுமித்திரா
திருமதி S. அனுஷா
திருமதி P. ரம்யா
திருமதி S. சோபிகா
திரு கிருஸ்ணகுமார்

**மக்கள் வங்கி சுன்னாகம் உத்தியோகத்தர்கள்**

திரு சி. மோகனச்செல்வன்
திருமதி தி. புஷாலினி
திரு ம. சுவிற்சன்
திருமதி பு. சாருலதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி ச. சுகிர்தகுமாரி
திரு இ. ஜெயகாந்தன்
செல்வி ச. ஹம்சா
திருமதி கி. நந்திக்குமார்
திரு த. தனரஞ்சன்
திரு சி. பிரதீபன்
செல்வி இ. கீர்த்திகா
திரு தே. இரஜீவன்
திரு த. ஜெயபிரதாப்
திருமதி ல. நிஷங்கா
செல்வி த. கோபிகீதா
திரு ச. ஜனாங்கணன்
திரு கு. வெங்கடேஸ்
திரு தி. பிரதாப்
திருமதி கோ. பிரதக்ஷி
திருமதி அ. சுகன்யா

**மக்கள் வங்கி சங்கானை உத்தியோகத்தர்கள்**

திருமதி S. யாழினி
திரு R. சந்திரகோபன்
திருமதி H. இசைவாணி
திருமதி R. சரண்யா
திரு S. சுஜன்
திருமதி P. ஜிந்துஜா
திருமதி S. மலர்மதி
திருமதி P. ஜசிகா
திருமதி M. அனுஷா
திரு P. புவிராஜ்
திரு K. நிஷாந்தன்
திருமதி K. சசிகலா

**மக்கள் வங்கி காங்கேசந்துறை உத்தியோகத்தர்**

திரு S. சரத்சங்கர்
திருமதி செ. உஷாநந்தினி
செல்வி லி. மயூரி
திரு S. சிவகுமார்
திருமதி க. செல்வமலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் வங்கி சாவகச்சேரி உத்தியோகத்தர்கள்**

திரு A. பிரான்ஸிஸ்
திருமதி சி. தமயந்தி
செல்வி N. கிருஷிகா
திருமதி A. மதுஷா
திரு V. ஜெயமோகன்
திருமதி R. சோபிதா
திருமதி S. அஷாயினி
திரு M. தெய்வேந்திரன்
திரு M. லம்போதரன்
திருமதி I. அனோஜா
திருமதி V. உஷா

**மக்கள் வங்கி கொடிகாமம் உத்தியோகத்தர்கள்**

திருமதி S. பானுஜா
திருமதி K. யாழினி
திருமதி பி. ஜனனி
திருமதி த. லக்ஷி
திரு தா. தவராசா
திரு அ. கோகுலரூபன்

**மக்கள் வங்கி அச்சுவேலி உத்தியோகத்தர்கள்**

திருமதி P. கிருபாளினி
திருமதி S. மாதங்கி
திருமதி K. சசிதா
செல்வி த. லக்கிமாலா
திருமதி S. வித்தியா
திரு G. லதீகரன்
திரு K. ஸ்ரீதரன்

**மக்கள் வங்கி பருத்தித்துறை உத்தியோகத்தர்கள்**

திரு ச. சர்வானந்தன்
திரு P. சஞ்சீவ்
திரு செ. உமாசங்கர்
திருமதி கே. உதயசாந்தி
திரு இ. வாகீசன்
திருமதி கி. பிரசாந்தினி
திரு ஆ. பரணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் வங்கி வல்வெட்டித்துறை உத்தியோகத்தர்கள்**

திரு க. கமலக்ஷன்
திருமதி ஜெ. நிமாலினி
திருமதி த. சங்கீதா
திருமதி A.M. கானப்பிரியா
திருமதி உ. சுபாசினி
திருமதி V. மனோஜா

**மக்கள் வங்கி பரந்தன் உத்தியோகத்தர்கள்**

திரு க. ஜெயகணேசன்
திருமதி ச. சிந்துஜா
திருமதி மோ. தர்சனா

**மக்கள் வங்கி திருமலை மாவட்ட உத்தியோகத்தர்கள்**

திரு அ. ஐங்கரன்
திரு க. மதிவதனன்
திரு ம. பிறேம்குமார்
திரு எஸ். துஷாந்தன்
திருமதி கு. வையெந்தி
திரு N. சுபாகரன்
திருமதி கி. கைலாசினி

**மக்கள் வங்கி வவுனியா பிரதேச தலைமை அலுவலக உத்தியோகத்தர்**

செல்வி வ. கனகசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வி சரண்யா சத்தியநாதன்**
(கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்)
**திருமதி கலைச்செல்வி தயாளன்**
(திருகோணமலை)
**திரு S. திருநாவுக்கரசு**
(அச்செழு, நீர்வேலி)
**திரு E. செல்வேஸ்வரன்**
(பாட்டா பாதணி முகவர், திருமலை)
**திரு த. கணேசமூர்த்தி**
(இளை. நிறைவேற்று அதிகாரி, இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)
**திரு பொ. பாலசிங்கம்**
(காசாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)
**செல்வி ஹரினி ஹரிதரன்**
(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)
**செல்வி ஹம்ஷாலினி ஹரிதரன்**
(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)
**திரு பா. இராசேந்திரம்**
(இளை. கி. சேவகர், உடுப்பிட்டி)
**திரு செ. மதியாபரணம்**
(வளர்மதி புடவை அகம், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்)
**திரு நீ. சுப்பிரமணியன்**
(இளை. உத்தியோகத்தர், ப.நோ.கூ.ச, உடுப்பிட்டி)
**செல்வி தட்சாயிணி செல்வமாணிக்கம்**
(நாவலடி, உடுப்பிட்டி)
**திரு வே. இரத்தினசிங்கம்**
(சிவசக்தி மோட்டோர்ஸ், பருத்தித்துறை)
**திரு சி. கணேசலிங்கம்**
(தமிழ்ப்பூங்கா, நெல்லியடி)
**உரிமையாளர்**
(பெசன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(பெற்றா ஏசென்ஸ் விநியோகத்தர், யாழ்ப்பாணம்)
**செல்வன் செ. ஷஷ்டிகன்**
(மானிப்பாய்)
**செல்வன் செ. சர்வஜன்**
(மானிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையாளர்
(சாரங்கா நகைமாடம், யாழ்ப்பாணம்)
திரு வல்லிபுரம் சிவகுமாரன்
(சங்கானை)
உரிமையாளர்
(வெங்கடேஸ்வரா, யாழ்ப்பாணம்)
திரு இ. இராசநாயகம்
(துர்க்கா மரக்காலை, சண்டிலிப்பாய்)
திரு ஆ. சுந்தரலிங்கம்
(இளை. பிரதம அஞ்சல் அதிபர்)
திரு நா. கந்தப்பு
(தோப்பு, அச்சுவேலி)
திரு க. தர்மலிங்கம் J.P.
(நீர்வேலி)
திரு மு. தர்மலிங்கம்
(சிங்காரராசா வாசா, உடுப்பிட்டி)
உரிமையாளர்
(மலாயன் கபே, யாழ்ப்பாணம்)
திரு ஜெ. இராஜகோபால்
(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)
திரு சேனாதிராசா சற்குணராசா
(பண்டத்தரிப்பு)
திருமதி பாலகிருஸ்ணன் சிவனேஸ்வரி
(முருகமூர்த்தி வீதி, சங்கானை)
திரு க. இராஜதுரை
(நீர்வேலி)
திரு த. சிவசுப்பிரமணியம்
(லீலா வெதுப்பகம், சங்கானை)
செல்வி ஆகித்தியா சயந்தன்
(யாழ்ப்பாணம்)
செல்வன் ப. ஆரணன்
(கொக்குவில்)
செல்வி கு. சோதிநாயகி
(யாழ்ப்பாணம்)
செல்வன் தி. திருநாத்
(சுதுமலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு சிவஞானம் கிருபாகரன்
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திரு மு. சரவணபவான்**
(கலைமகள் விலாஸ், சங்கானை)
**செல்வி நா. ஜெயராணி**
(இளை. அதிபர், சங்கானை)
**திரு இ. கோபாலசுந்தரம்**
(சதா வெதுப்பகம், உரும்பராய்)
**திரு J. பிரபாகரன் மாஸ்ரர்**
(நெல்லியடி)
**திரு இ. சிவசுப்பிரமணியம்**
(சுழிபுரம்)
**திரு இ. சொக்கலிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியர், நாவற்குழி, கைதடி)
**திரு கு. கங்கைவேணியன்**
(உரிமையாளர், வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்)
**திரு ந. சத்தியரூபன்**
(சிறி நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)
**திரு க. சோமசேகரம்**
(மகாராணி புடவையகம், யாழ்ப்பாணம்)
**திரு ஐ. சிவகுமார்**
(சுதுமலை கிழக்கு, மானிப்பாய்)
**திருமதி வ. தபேந்திரன்**
(உப அஞ்சல் அதிபர், குப்பிளான்)
**திரு க. இராசநாயகம்**
(பிள்ளையார் ஸ்ரோர்ஸ், தொட்டிலடி, சங்கானை)
**திரு R.S. தனபாலன்**
(பாலன் மில், வட்டுக்கோட்டை)
**திரு சி. சச்சிதானந்தம்**
(சச்சியா இரும்பகம், வட்டுக்கோட்டை)
**உரிமையாளர்**
(V.M.K. நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
**திரு வே. பொன்னம்பலம்**
(பாக்கியரெத்தினம் இரும்பு விற்பனை நிலையம், சங்கானை)
திரு க. நாகராசா
(காங்கேசந்துறை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பண்பாட்டுச் சீரழிவு

– செல்வி கிஷாந்தினி திருச்செல்வம் அவர்கள் –

"கல தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றியது எம் மூத்தகுடி". இத்துணை பழமை வாய்ந்த எம் இனத்தின் நடை, உடை பாவனை, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், வழிபாடுகள், ஒழுக்கம், கல்வி, சட்டம் என அனைத்துக் கூறுகளும் நன்னிலையிலே வளர்ச்சிபெற்று, பண்பாடு எனும் பேரரணால் பாதுகாக்கப்பட்டு வந்தது. இத்தகைய உயரிய பண்பினைக் கொண்டு விளங்கிய எமது சமுதாயம், நவநாகரிகம் எனும் வலைக்குள் சிக்கி மீளமுடியாமல் சீரழிந்து வருகின்ற நிலை யாவரும் அறிந்ததே.

பண்பாடு என்பது "திரிகரணங்கள் எனப்படும் மனம், மொழி, மெய் என்பவற்றின் அமைதியே" என்று தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் குறிப்பிடுகின்றார். பண்பு என்பதற்கு குணம், தகுதி, விதம் எனப் பல பொருள் உண்டு. "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" என்பது கலித்தொகை. அந்தவகையில் பிறரது இயல்பறிந்து ஒழுகல் பண்பாடு எனலாம்.

Culture (பண்பாடு) எனும் ஆங்கிலச் சொல் இலத்தீன் சொல் அடியிலிருந்து வந்ததாகும். விவசாயம்- மண்ணைப் பண்படுத்தல் எனும் சொல்லிலிருந்து Agriculture என்ற சொல் பிறந்தது. மண்ணைப் பண்படுத்தல் பண்பாடு ஆகும். Culture எனும் ஆங்கிலச் சொல்லுக்கு டி.கே. சிதம்பரநாத முதலியார் பண்பாடு எனும் பதத்தினை முதன்முதலில் பிரயோகித்தார். ஆயினும் பழந்தமிழ் இலக்கியங்களில் சால்பு எனும் பதம் இதனைச் சுட்டுவதாகவே உள்ளது. மேலும் பண்பாடு என்பது நோக்கங்களும் கருத்துக்களும் ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்கு வருகின்ற சிறப்பிற்குரியது. பண்பாடு என்றாலே அதற்கு அடித்தளமாய் இருப்பது தமிழர் சமுதாயமே.

இன்றைய சமுதாயத்தில் நுகர்வுக் கலாசாரமே பண்பாட்டினைத் தீர்மானிக்கின்ற சக்தியாக மாறியிருக்கின்றது. அதைத் தனது சுயலாபத்திற்குரியதாக மாற்றிக் கொண்டிருக்கின்றன வணிக மையங்கள். அதற்குத் துணை புரிகின்றன ஊடகங்கள்.

பண்பாட்டின் சிறப்பியல்புகளை முதன்மைக் கூறுகளை நம்பிக்கைகளை முன்னிறுத்தும் எழுத்தும் இலக்கியமும் சமூக தளத்தில் இரண்டாம் நிலையில் ஒதுக்கி வைக்கப்படுகின்றன. அதிகாலையிலே இறை கீதங்களை ஒலிபரப்புச் செய்து பக்திப் பரவசத்தையும் மன அமைதியையும் பெற்றுக்கொண்ட சமுதாயம் இன்று சினிமாப் பாடல்களை உரத்த சத்தத்தோடு ஒலிபரப்புச் செய்வதைக் கண்கூடே பார்க்கின்றோம்.

ஒவ்வொரு கிராமத்தின் எல்லைக் கற்களாக விளங்கும் திருக்கோயில்களை மையப்படுத்தியே தமிழ்ச் சமூகம் தமது இல்லிடங்களினை அமைத்தார்கள். அதிகாலையில் ஆலயமணி ஓசையே அனைவரையும் துயில்விட்டு எழச் செய்யும். ஆனால் இன்று கையடக்கத் தொலைபேசி அலறும் சத்தமே அனைவரையும் துயிலெழுப்புகின்றது என்றால் எமது சமுதாயம் எங்கே செல்கின்றது.

பொது நிகழ்வுகளில் ஒவ்வொரு இனத்தவர்களையும் தனித்து அடையாளப்படுத்துவது இலகுவானதாகும். தத்தமது

நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதும் மண்டியிடுவது இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நோக்கில் ஆடையலங்காரம் அமைந்திருக்கும். உதாரணமாக ஒரு தமிழிச்சி சேலையணிந்து நெற்றியில் திலகமிட்டு கொண்டையில் பூச்சூடி வீதியில் இறங்கினால் அனைவராலும் மதிக்கப்பெறும் தன்மை காணப்பட்டது. இருப்பினும் இன்றைய சூழலை நோக்கினால், திருமணம் ஆனவர் அல்லது திருமணமாகாதவர் என அடையாளம் காண்பதே சிரமமாக உள்ளது. நெற்றியிலே ஸ்ரிக்கர் பொட்டு தலையிலே வண்ண ஜாலம், ஆடை பாதி ஆள் பாதி என்ற நிலையே அதிகரிக்கின்றது. "குஞ்சி அழகும் கொடுந் தானைக் கோட்டழகும் மஞ்சளழகும் அழகல்ல" என்று சும்மாவா சொன்னது நாலடியார்.

வெளிநாட்டவர்கள் தமது அந்நியச் செலவாணியை அதிகரிப்பதற்காக பல்வேறு வகையான கவர்ச்சிப் பொருட்களினை நாடு எங்கும் சந்தைப்படுத்துகின்றனர். அவற்றை வாங்கி, அவை தமக்கு அழகு என்று எண்ணி அதிலேயே மூழ்கித் திழைக்கிறார்கள். இதனால் அவர்களுடைய பொருளாதாரம் வீழ்ச்சி காண்பதோடு குடும்பத்தில் நிலவிய அன்பு, அரவணைப்பு மற்றும் சந்தோசம் என்பன சிறகடித்துச் செல்வதையும் காண்கிறோம்.

இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்த சமுதாயம் எப்படியும் வாழலாம் என்ற நிலைக்குள் தள்ளப்படுகின்றார்கள். ஒருவனுக்கு ஒருத்தி எனும் நிலைமாறி யாரும் யாரையும் திருமணம் செய்யலாம் என்ற சூழல் இன்று அனைத்து சமூகங்களிலும் காணப்படுகின்றது. இவை கொலை, கடத்தல், துஷ்பிரயோகம் போன்ற சமூகச் சீரழிவுக்கு இட்டுச் செல்கிறது.

5000 ஆண்டு பண்பாட்டுப் பெருமை கொண்ட தமிழ்ச்சமூகம் அதன் வேரிலிருந்து மரபிலிருந்து தன்னைத் துண்டித்துக்கொள்ள எதற்காக இத்தனை அவசரப்படுகின்றது. தமிழ்ப் பண்பாட்டின் முக்கிய அடையாளங்களாக காதல், வீரம், கொடை, பக்தி, விருந்தோம்பல் ஆகிய ஐந்தினையும் குறிப்பிடுவார்கள். இன்று இந்த ஐந்தும் சீரழிந்து போன நிலையில் புரையோடி மாறியிருக்கின்றது.

இலக்கியங்களில் காதலைக் கொண்டாடிய சமூகம் இன்று சாதியை முதன்மைப் படுத்தி காதலர்களைத் துரத்திக் கொல்லத் துடிக்கின்றது. "யாயும் ஞாயும் யாராகியரோ எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்" என்பதெல்லாம் வெறும் இலக்கிய உளறல்கள் என்று சொல்லும் அளவுக்கு தமிழ்ச் சமூகத்தில் சாதிய உணர்வு தலை தூக்கி உள்ளது. இன்னொரு பக்கம் கங்கை கொண்டான், கடாரம் வென்றான் என்று வீரம் பேசிய சமூகத்தில் இன்று மிஞ்சியிருப்பது கூலிப் படைக் கலாசாரம் மட்டுமே. குற்றம் தனி நபரின் செயலாக இல்லாமல் தொழிலாக மாறிவிட்டது நம் காலத்தின் அபாயம்.

இல்லாளானவள் தொழிலுக்குச் சென்ற கணவனின் வரவுக்காகவும் பிள்ளைகளின் வரவுக்காகவும் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்த நிலைமாறி இன்று தொலைக்காட்சி சீரியல் தொடர்களுக்காக காத்திருக்கும் நிலை பெரும்பாலான வீடுகளில் காணப் பெறுகின்றது. யாராவது அவர்களது வீட்டுக்கு வந்தால் அவர்களின் நோக்கத்தைப் பாராது தொலைக்காட்சியே உலகம் என்று எண்ணி வாழும் பேதமைகளை என்னவென்று சொல்வது. தமிழர் பண்பாடு இந்த நூற்றாண்டே மறைந்துவிடுமா?

விளம்பரதாரிகளின் போலியான விளம்பர மோகத்தால் ஒத்துவராத உணவுப் பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகி பல் வேறுபட்ட உடல் உபாதைகளால் அல்லல் உறும் நிலைமை அதிகரித்துச் செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்ப்புறத்தில் ஒரு சிறுவனிடம் "இலைக் கஞ்சி, ஓடியற்கூழ்" சாப்பிட்டதுண்டா? என்று கேட்டுப் பாருங்கள். அந்தச் சிறுவன் அப்படி ஒரு சாப்பாடு உண்டா? என்று மறுவினாவை எங்கள் மேலே வைப்பான்.

ஏன் ஒரு திருமணச் சடங்கை எடுத்துக்கொண்டால் ஆடம்பரமான மண்டபங்களில் வகை வகையான உணவுகள் மற்றும் மேலைத்தேய நடைமுறைகளிலேயே திருமணம் நடைபெறுகின்றது. மணமகள் இல்லத்தில் மாங்கல்ய தாரணம் செய்து, வாழை இலையில் பந்தி பரிமாறுவதற்கு வெட்கப்படுகின்றது இன்றைய சமூகம். அந்நிய தேசத்தவர்களின் பண்பாட்டைப் பேணுவதில் உள்ள அக்கறை எமது பண்பாட்டைப் பேணுவதில் ஏன் இருக்கக் கூடாது. நவீன தொலைத் தொடர்பாடல் சாதனங்களின் பாவனை இன்று முற்றுமுழுதாக பண்பாட்டினைச் சீரழிக்கின்றது. பல்வேறு விதமான ஆபாசக் காட்சிகளைப் பார்ப்பதும் போதைப் பொருட்களுக்கு அடிமையாவதும் இளைய தலைமுறையினரிடம் அதிகமாகப் பாதிப்பை உண்டு பண்ணுகிறது.

பண்பாட்டுக் கருவூலமாக விளங்கிய தமிழர் சமுதாயம் பல்வேறு விதமாகவும் சீரழிக்கப்பட்டு வருகின்றது. நவநாகரிகத்திலும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியிலும் ஊடகங்களின் மோகத்திலும் மூழ்கி, அடிமையாகி வாழும் வாழ்க்கைப் பண்பாட்டுச் சீரகுலைவே அன்றி வேறெதுவுமில்லை.

## சந்நிதி முருகா தொல்லைவினை தீர்த்து அள்ளி அளித்திடு அருளை!

வித்தகக் குமரன் எங்கள் சந்நிதிக்கந்தன்
நஞ்சுண்ட கண்டனின் மைந்தன்
நாமெல்லாம் வணங்கிடும் வடிவேலன்
தஞ்சமெனவந்த தேவர்களைக் காக்க
தேவ சேனாதிபதியான வடிவேல் முருகன்!

புண்ணியஞ் செய்ததினால் சந்நிதிக்கு நாம்வந்தோமே!
பூமாலை தொடுத்துனக்குப் பாமாலை பாடினோமே!
எண்ணிய கருமங்களை நிறைவேற்றிடும் முருகனே
ஏழை எமக்கருள ஏன்இன்னும் தாமதமோ
தொல்லைவினை தீர்த்தருளும் தூயவனே முருகய்யா!

அன்னம்தரும் பதியுறை ஞானக்கந்தனே முருகா!
இல்லையெனாது வரமீந்தருளும் வள்ளி மணாளனே!
ஈசன்உமை பாலகனே நல்வாழ்வு தந்திடய்யா!
சந்நிதியே உன்தாற்பரியம் இயம்பமுடியுமா?
செல்வச்சந்நிதியில் நின்றுபார் முருகனருள் தெரியும்.

*~திருமதி நாகேஸ்வரி கந்தசாமி~*

*கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "திருக்கரசை புராணம்" வெளிப்படுத்தும் பண்பாட்டு அம்சங்கள்

– *செல்வி ச. சரணியா* அவர்கள் –

"இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடிகள்" என்ற கூற்றிற்கு அமைய இலக்கியங்கள் அனைத்தும் ஏதோ ஓர் வகையில் அவை எழுந்த காலத்தை வெள்ளிமலை இடை வெளிச்சமாய் படம்போட்டுக் காட்டிவிடும். அந்த வரிசையில் புராணங்களும் இன்றியமையாதவை ஆகும். இதனை மையமாகக் கொண்டு திருக்கரசை புராணம் வெளிப்படுத்தி நிற்கும் பண்பாட்டு அம்சங்களை பிரித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பண்பாட்டு அம்சங்கள்

பண்பாட்டு அம்சங்களுக்கு பல வரைவிலக்கணங்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றை இலகுபடுத்தும்போது "வாழ்க்கைமுறை" என்று கூறிவிடுவது சாலப் பொருத்தமாகும். இருப்பினும் ஒரு குழுவின் வரலாறு, பொழுதுபோக்குகள், பண்புகள், அறிவு, கல்விமுறை, பரம்பல் வாழ்வியல் முறை, மொழி, நம்பிக்கை, கருவிகள் என்பன போன்ற கட்டமைப்பு பண்பாட்டு அம்சங்கள் ஆகும்.

## திருக்கரசை புராணம்

தல புராணங்களில் ஒன்றான இப்புராணம் எழில் கொஞ்சும் எமது ஈழநாட்டில் சிவபூமி என்று சிறப்பிக்கப்படும் திருகோணமலையில் மகாவலி கங்கைக் கரையில் அமைந்திருக்கும் அகஸ்தியதாபனம் எனும் கரசைச் சிவன்மீது பாடப்பட்டதோர் தலபுராணம் இதுவாகும். இது சூதமுனி அருளிச் செய்த வடமொழி புராணத்தினைத் தழுவிச் செய்யப்பட்டது. இப்புராணம் கடவுள் வாழ்த்து, குரு வணக்கம், புராண் வரலாறு, அவையடக்கம் ஆகிய பாயிரப்பகுதிகளையும் இலங்கை சருக்கம், கங்கைச் சருக்கம், பூசைச் சருக்கம், தாபனச் சருக்கம் ஆகிய நான்கு சருக்கங்களையும் கொண்டமைந்த திருக்கரசை புராணத்தில் மேற் காட்டிய பண்பாட்டு அம்சங்களை எடுத்து நோக்குவோம்.

## திருக்கரசை புராணம் வெளிப்படுத்தும் பண்பாட்டு அம்சங்கள்

### நாட்டுவளம் மற்றும் கல்விநிலை

மதிக்கப்பட்ட நீள்வளமுடைய வயல் சூழ்ந்த இலங்கை வாழ் மக்கள் இனியதான செந்தமிழ்க் கல்வியில் சிறப்புப் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். இவ்வாறு மக்களின் கல்வி, நாட்டு வளம் ஆகிய பண்பாட்டு அம்சங்களை திருக்கரசை புராணத்தின் செய்யுள் வர்ணித்துள்ளது. இதனை, "இதத்த செந்தமிழ் அறிவினால் சங்கரை ஏய்ப்பார்..." எனத் தொடங்கும் செய்யுளும், "குளிர்புனல்மா வலிகங்கைக் குணபாலிற் குறியமைந்த..." எனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கும் செய்யுளிலும் பெரிய மகாவலி கங்கை அழகையும், சூழ்ந்துகொண்ட வயல் செழிப்பையும் வர்ணித்து நாட்டு வளத்தை ஆதாரப்படுத்தப்பட்டுள்ளது.

**உணவு**

கரசைபதி மக்கள் வாழ்க்கை முறையில் பிரதானமான உணவுமுறை பற்றி ஆராயும் போது புராணத்தில்,

"அப்பதியதனிற் பச்சையமணி அபகநாகத்
துப்புறுமுத்தம் வல்சி"

என்றமைந்த செய்யுளிலே பொற்காலத்திலே இலை வகைகள் கறியோடு முத்துகள் போன்று சோறு சமைப்பர் என்றாதாரம் ஆனது. சமையலுக்கு பொற்கலங்கள் பயன்படுத்தப் பட்டளவுக்கு செல்வச் செழிப்பும் மாமிசம் அந்த மரக்கறிகளோடு சோறு பிரதான உணவாக உட்கொள்ளப்பட்டது புலனாகின்றது.

**தொழில்**

அம் மக்கள் பொருளாதாரத்தினை ஈட்டிக்கொள்வதற்காக வேளாண்மையை மேற்கொண்டனர். ஆண்கள் விதைப்பு மற்றும் எருமை வளர்ப்பு மேற்கொண்டதோடு பெண்கள் களையெடுப்பு தொழிலை ஆற்றினர் என்பது புராணம் சான்று பகிர்கின்றது. இதனை, "உலவிய வயல் வாழ் ஒள்ளினமோதி..." மற்றும் "காடுகொண்ட பூக்கருங் சூழற்..." என்ற திருக்கரசை புராணச் செய்யுள்கள் தெளிவுபடுத்துகின்றன.

**கலைகள், பொழுதுபோக்குகள்**

"ஆடகத்தமைந்த பித்தி அகப்புறம் புறப்புறங்கள்" என்ற செய்யுளின் வழியாக பொன்மதில் சூழ்ந்த அகமும் புறமும் பொருந்திய விமான கூடங்கள் என்றெல்லாம் நாட்டு வளத்தை மெச்சியதோடு "நாடகத்தரங்கள் துன்றும்" என்ற வரிகள் நாட்டியப் பெண்களை சுட்டி நிற்கின்றது. இதனூடாக நடனக்கலை பேணப்பட்டதுடன் நடன மாதர்களின் நடனக்காட்சிகள் பொழுதுபோக்காக்கினர் கரசைப்பதி மக்கள் என்பது தெளிவு. மேலும் பிறிதொரு செய்யுளில், "...சிற்பத்தொழிலோர் தமையழைத்துத்..." என்ற வரிகளை மையமாகக் கொண்டு சிற்பக்கலை ஆற்றப்பட்டதுடன் திறமை வாய்ந்த சிற்பிகளும் வசித்திருக்கின்றனர். அத்தோடு முழவு என்ற இசைக்கருவி இசைக்கப்பட்டதற்கான புராண சான்று உள்ளது. இதனை, "விழாவெழு முழவின் ஆர்ப்பும்..." என்ற செய்யுளடிகள் ஆதாரப்படுத்தியுள்ளது. அந்தவகையில் இசைக்கலை, நடனக்கலை, சிற்பக்கலை ஆகிய கலைகள் கரசைபதி மக்களிடையே வழக்கில் இருந்திருக்கின்றன என ஊகிக்கலாம்.

**ஆபரணங்கள்**

"பணிலம் வெண்திரையினார்ப்பப் பவளமும் தவளமுத்தும்
மணிகளும் சாந்துப் பூவும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் "கொஞ்சிய கிள்ளைமென் சொற் கோதையர் சிலம்பி..." என்ற திருக்கரசை புராண செய்யுளடிகள் கரசைபதி பெண்கள் அணியும் ஆபரணங்களை சான்று தருகின்றன. அதாவது பவளம், முத்து, இரத்தினம், மரகதம், பொன் போன்றவற்றினால் ஆன ஆபரணங்கள் அணிந்திருந்தனர். அவற்றுள் சிலம்பு, மேகலை சிறப்பு வாய்ந்த ஆபரணங்களாக திகழ்ந்தன என்பது சான்றாகும்.

**ஆட்சிமுறை, வீரம்**

கரசைபதி மக்களின் அறப்பண்பை தெளிவுபடுத்தும் முகமாக, "...நல்லறப் பகுதியின் தருமனை தருவர்..." என்ற வரிகள் ஊடாக தர்மனுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. இத்தன்மை வாய்ந்த மக்களின் கால ஆட்சிமுறையின்போது கள்ளர்கள் பயமும் இல்லை. அத்துடன் கொடுங்கோல் ஆட்சியும் இல்லை என்பதினூடாக செங்கோலாட்சியே இடம்பெற்றதாக புராண வரிகள் முன்வைக்கிறது. இதனை,

"பற்றுள்ளவர்கள் முதலிய பயங்களும் படிமேல்
எற்று மன்னர்கள் நடாத்துகோற் கொடுமையும் இலவே"

என்ற செய்யுளை ஆதாரப்படுத்தலாம். மக்களும் வீரம் பொருந்தியவர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள் வில்வித்தையும், வாள் யுத்தத்திலும் விற்பன்னர்களாகத் திகழ்ந்தனர். எனவே இவர்களின் வீரத்தை புராண செய்யுள் அர்ச்சுனனுக்கு உவமிக்கின்றது. இதனை,

"உருத்த செந்திலைத் தொழிலாளிற் பார்த்தனை ஒப்பர்
கறித்த செஞ்சுடர் வாளினில் அபிமனைக் கெடுப்பர்..."

என்றான செய்யுள் தக்க சான்று.

**முடிவுரை**

இவ்வண்ணம் பல்வேறுபட்ட பண்பாட்டு அம்சங்களை தன்னகத்தே வெளிப்படுத்தி உள்ளது திருக்கரசைபுராணம். வெறுமனே தலச்சிறப்பை மாத்திரம் பாடிச் செல்லாது அக்கால மக்களின் காலப் பின்னணிக்கும் சிறந்த ஆதாரமாக அமைகின்றது. இவ்வாறாக பண்பாட்டு அம்சங்களை தவிர்ந்த ஏனைய பல விடயங்களையும் புராணங்கள் தாங்கி நிற்கின்றது அதற்கான தனித்தன்மையாகும். மேலும் சைவசமய மக்களாகிய நாம் எமது மரபுகளை பேண புராணங்களை வாசித்து அதன் மேன்மைத்தன்மை கண்டொழுக ஆயத்தமாக வேண்டும்.

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| பெப்ரவரி | 21 | மாசி 09 | ஞாயிறு | கச்சியப்ப சிவாச்சாரியார் |
| பெப்ரவரி | 28 | மாசி 16 | ஞாயிறு | திருவள்ளுவர் |
| மார்ச் | 22 | பங் 09 | திங்கள் | தவத்திரு முருகேசு சுவாமிகள் நல்லைக்குருமணி சுவாமிகள் |
| மார்ச் | 25 | பங் 12 | வியாழன் | யோகர் சுவாமிகள் |
| மார்ச் | 31 | பங் 18 | புதன் | காரைக்காலம்மையார் |

*நம்பிக்கை கடவுளையும் அசைக்கும். பயம் எதிரியையும் செயற்பட வைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# திருச்சதகம்

## நீத்தல் விண்ணப்பம்

### பிரபஞ்ச வைராக்கியம்

(உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

**123. மடங்கவென் வல்வினைக் காட்டைநின் மன்னருட் டீக்கொளுவும்
விடங்கவென் றன்னை விடுதிகண் டாயென் பிறவியைவே
ரொடுங்களைந் தாண்டுகொள் உத்தர கோசமங் கைக்கரசே
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித் தாய்வஞ்சிக் கொம்பினையே.**

**ப-ரை:**

உத்தரகோச மங்கைக்கு அரசே- திருவுத்தரகோச மங்கை என்னும் தலத்துக்கு அரசனே, கொடு கரி குன்று உரித்து- கொடிய கஜன் என்னும் யானையாகிய குன்றினை உரித்து மாதங்காரி என்னும் மூரத்தத்தினால், வஞ்சிக் கொம்பினை அஞ்சுவித்தாய்- வஞ்சிக் கொம்பு போன்ற உமையம்மையை அச்சமுறச் செய்தவனே, என் வல் வினை காட்டை- எனது வலிய வினையாகிய காட்டினை, மடங்க- கீழ்ப்பட்டழியுமாறு, நின் மன் அருள் தீ கொளுவும் விடங்க- நினது நிலைபெற்ற அருளாகிய தீயை இட்டு எரிக்கின்ற சுயம்பு மூர்த்தியே, என்றன்னை விடுதி கண்டாய்- என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாது, என் பிறவியை வேரொடும் களைந்து ஆண்டு கொள்- எனது பிறவியாகிய மரத்தினை அதற்கு வேராகிய அவாவினொடும் நீக்கி ஆட்கொண்டருளுவாயாக.

உத்தரகோச மங்கைக்கு அரசே, கொடுங்கரிக் குன்றினை உரித்து, உமையம்மையை அச்சமுறச் செய்தவனே, எனது வலிய வினையாகிய காட்டினைக் கீழ்ப்பட்டழியும்படி நினது பேரருளாகிய தீயையிட்டு எரிக்கின்ற விடங்கனே, என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாது என் பிறவியை வேரோடுங் களைந்து ஆட்கொண்டருளுவாயாக என்பதாம்.

மடங்குதல்- கீழ்ப்படுதல். வினையென்பது சஞ்சித ஆகாய கன்மங்களை, வினையைக் காடு என்றது மிகுதிபற்றி. வினையைக் காடு என்றதற்கு ஏற்ப அருளைத் தீ என்றார். கொளுவுதல்- மாட்டி எரித்தல். விடங்கன்- உளி முதலிய கருவிகளால் தோற்றுவிக்கப்படாதவன். என்றது சுயம்பு என்றவாறு. பிறவியை வேரொடும் என்றமையால் பிறவி மரம் எனப்பட்டது. இது ஏகதேசவுருவகம்.

"பிறவிவே றறுத்தென் குடிமுழுதாண்ட பிஞ்ஞகா" பிடித்த 6.

"பிறவிவே றறுக்குங் கரும்பினை" சுந் 58:6.

என வருவன காண்க.

*மனம் எதைத் தீவிரமாக சிந்திக்கிறதோ அதுவாகவே மாறிவிடும் தன்மை கொண்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுங் கரிக் குன்று- கொல்லும் கொடுமையும் குன்று போன்ற தோற்றமுமுடைய கயாசுரன் என்னும் யானை, கரிக் குன்று உரித்தமை.

"கருங்கட மூன்றுகு நால்வாய்க் கரியுரித்தோன்" (55)

"உருப் பனையன்ன கைக்குன் றுரித்து" (137)

எனத் திருக்கோவையாரில் வருவனவற்றாலுமறிக. உரித்து அஞ்சுவித்தாய் என்றது யானையை உரிக்கும்போது கொண்ட ஒளியும் உக்கிரமும் மிகுந்த மாதங்காரி என்னும் உத்திரத் திருவுருவினால் உமையை அஞ்சச் செய்தவனே என்றவாறு. கயாசுரன் என்னும் அசுரனை அழித்தபோது இறைவன் கொண்ட திருவுருவைக் கண்டு இறைவி அஞ்சினள் என்பதாம். "அரிவை அஞ்ச வன்பனைத் தடக்கை வேள்விக் களிற்றினை யுரித்த எங்கள் அன்பனை" "உமை யஞ்சவே கொல்லை யானை உரித்தவன்" (நாவு 74:2; 169:5) என வருவன காண்க. வஞ்சிக் கொம்பு ஆறாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய் குறிப்பினால் உமையம்மையை உணர்த்தியது. வஞ்சிக் கொம்பினை மகளிர்க்கு உவமை கூறுதலை "வஞ்சிக் கொம்பனாள்" (சீவ 353) என்பதினாலுங் காண்க.

இதன்கண், வல்வினையைக் கொளுத்தி பிறவியை வேரோடுங்களைந் தாண்டுகொள் என்தன்னை விடுதி கண்டாய் என வருவனவற்றால் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலனாதலறிக.

**124. கொம்பரில் லாக்கொடி போல்அல மந்தனன் கோமளமே**
**வெம்புகின் றேனை விடுதிகண் டாய்விண்ணர் நண்ணுகில்லா**
**உம்பருள் ளாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே**
**அம்பர மேநில னேஅனல் காலொடப் பானவனே.**

**ப-ரை:**

விண்ணர் நண்ணுகில்லா உம்பர் உள்ளாய்- விண்ணுலகத்தவர்களும் அணுகமாட்டாத மேலாகிய சிவபுரத்திலுள்ளவனே; மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே- நிலைபெறும் திருவுத்தரகோசமங்கை என்னும் தலத்துக்கு அரசே, அம்பரமே நிலனே அனல் காலொடு அப்பு ஆனவனே- ஆகாயமும் நிலனும் தீயும் காற்றும் நீருமாயுள்ளவனே, கோமளமே- என்றும் ஒரு பெற்றித்தாய இளமையினையுடையவனே, கொம்பர் இல்லா கொடி போல் அலமந்தனன்- படருதற்குக் கொழு கொம்பு இல்லாத இளங்கொடி சுழல்வது போலச் சுழன்று வருந்தி, வெம்பு கின்றேனை விடுதி கண்டாய்- உலகவாதனையால் வாடுகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

விண்ணுலகத்தவரும் அணுகமாட்டாத மேலான சிவபுரத்தினுள்ளவனே, உத்தரகோச மங்கைக்கரசே, ஆகாயமும் நிலனும் தீயும் காற்றும் நீருமாயுள்ளவனே, கோமளமே, கொம்பரில்லாக் கொடிபோலச் சுழன்று வருந்தி வருகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

கொம்பர்- கொழுகொம்பு. அலமருதல்- சுழலுதல். "அலமர றெருமர லாயிரண்டுஞ் சுழற்சி" என்பது தொல்காப்பியம். (உரி 310:14) ஈண்டு சுழன்று வருந்துதலை உணர்த்தியது.

*கோபத்தால் பிறருக்கு மட்டுமல்லாமல் நமக்கும் தீமையே உண்டாகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலமந்தனன் என்னும் தன்மை ஒருமை இறந்தகால வினைமுற்று எச்சப் பொருட்டாய் வெம்புகின்றேனை என்பதனோடு முடிந்தது. கோமளம்- இளமை. இறைவன் என்றும் மூவா விளநலமுடையனாதலின் "கோமளமே" என்றார்.

"முத்தியர் மூப்பிலார்" 8:2.
"மூப்பும் நீங்கிய முக்கண் மூர்த்தி" 300:6.

என ஆளுடைய பிள்ளையாரும்

"மூவா முதலாய மூர்த்தி தன்னை" 216:3.
"மூவாத மேனி முக்கண்ணினானை" 242:4.
"மூவாத மேனி முக்கண்ணா போற்றி" 269:2.

என ஆளுடைய அரசும் அருளியமை காண்க.

கோமளம்- மென்மையுமாம். வெம்புதல்- வாடுதல். "வேரோடு மரம் வெம்ப" (கலி10:4) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. விண்ணவர் என்றது விண்ணில் வாழும் திருமால் பிரமன் இந்திரன் முதலான தேவர்களை. இவர்கள் சிவஞானம் பெறாமையால் அணுக மாட்டாராயினர். நண்ணமாட்டா- அணுகமாட்டாத "விண்ணகத் தேவரு நண்ணவு மாட்டா விழுப்பொருளே" (திருப்பள்ளி 9) என வருதலுங் காண்க. கில்- ஆற்றலுணர்வதோர் இடைநிலை. உம்பர் என்றது இறைவனது மேலாகிய சிவபுரத்தை உணர்த்தியது. உம்பருள்ளாய்- மேலாகிய சிவபுரத்தினுள்ளவனே. ஊனையுருக்கு முடையானை உம்பரானை "உம்பரா போற்றி" (சத 58:67) என வருவன காண்க. திருமால் முதலிய விண்ணவரும் நண்ணமாட்டாத சிவலோகத் துள்ளாராதலின் அரியராயினும் எம்மனோர்க்கு எளியர் என்னும் கருத்தால் "உத்தரகோச மங்கைக்கரசே" என்றார்.

செய்யுளாதலின் "அம்பரமே நிலனே அனல் காலொடு அப்பானவனே" என ஐம்பூதங்களை முறை பிறழக் கூறினார். அவை தோற்றமுறை பற்றி அம்பரம் கால் அனல் அப்பு நிலன் எனவும் ஒடுக்கமுறை பற்றி நிலன் அப்பு அனல் கால் அம்பரம் எனவும் அமையும். "பரம் பொருளினின்று ஆகாயந் தோன்றி அதனின்றும் காற்றுத் தோன்றி அதனின்றும் தீத் தோன்றி அதனின்றும் நீர் தோன்றி அதனின்றும் நிலந் தோன்றிற்றென்று தேவாரத்துள்ளும் கூறப்பட்டது. என்ற பரிபாடலுரையும் (2:7-12 பரிமேல்) ஈண்டு அறியற்பாலது. காலொடு என்னும் ஒடுவை அனல் அப்பு என்பவற்றோடுங் கூட்டுக. அப்பு- நீர். ஐம்பூதங்களைக் கூறிய உபலக்கணத்தால் உயிரும், செஞ்சுடரும் வெண்சுடரும் கொள்ளப்படும். ஆகவே அட்டமூர்த்தமானவனே என்பது கொள்ளப்படும்.

"இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி யியமானனா யெறியுங்
காற்றுமாகி அருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாச
மா யட்ட மூர்த்தியாகி" திருநாவு 307:1.

எனத் தேவாரத்து வருவன காண்க.

இதன் கண், கொம்பரில்லாக் கொடிபோல் அமைந்தனன் வெம்புகின்றேனை விடுதி கண்டாய் என்பவற்றால் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலனாதலறிக. 20

(தொடரும்...

*நற்செயலில் ஈடுபடுபவர்களை கடவுள் ஒருபோதும் கைவிடமாட்டார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மிக வாழ்வு

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

சைவ மக்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுகின்றனர். சிவம்தான் மெய்ப்பொருள், பரம்பொருள் என்கின்றோம். சிவம்தான் இறை என்பதும் இறைவன் என்பதும் ஆகும். வியாச முனிவர் இறைவனைக் "கர்த்தா" என்று கூறியுள்ளார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இந்த உலகிற்குக் "கர்த்தா" சிவபெருமான் என்று தாம் இயற்றிய சைவ வினாவிடையில் குறிப்பிடுகிறார். இங்கு "கர்த்தா" என்பதன் பொருள், உலகம் உள்ளிட்ட இப் பிரபஞ்சத்தையும், அங்கு வாழுகின்ற சகல உயிரினங்களையும், அவற்றின் வாழ்வுக்குத் தேவையானவற்றையும், மற்றும் வாழ்க்கை வசதிகளையும் படைத்தவன் என்பதாகும். அவ்வாறு படைத்தவனையே இறைவன் என்கிறோம். அந்த இறைவனே சிவபெருமான் என்று சைவநெறி கொள்கின்றது. சிவத்திற்கு நிகராகவோ, மேலாகவோ ஒன்றும் இல்லை என்பது எமது உறுதியான நம்பிக்கை.

பரம்பொருள், கர்த்தா, உண்மைப் பொருள் எனக் கூறப்படுகின்ற இறைவன்; ஒருவனே என அழுத்தம் திருத்தமாகச் சைவம் குறிப்பிடுகிறது. "ஒன்றவன் தானே" என்றும் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்றும் திருமந்திரம் தீர்ப்பு வழங்குகின்றது.

"ஏகம் சத்..." என்பது வேதவாக்கியம். அப்படியானால், விநாயகர், முருகன், வைரவர், விஷ்ணு முதலிய பல தெய்வங்களைச் சைவர்கள் வணங்குகின்றார்களே, என்று வினா எழுப்பப்படக் கூடும்.

உண்மையில், ஒரே இறைவனைத்தான் பல்வேறு உருவ வழிபாடு என்ற பெயரில் சைவர்கள் வழிபாடு செய்கின்றனர் என்று இதற்கு விடை தரலாம்.

*"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே*
*மாதொரு பாகனார் தான் வருவர்"*

இத்தகைய தெய்வ உருவங்கள் இறைவனின் தத்துவ உருவங்கள் என்பர்.

சிவன் வேறு; விநாயகன் வேறு அல்லர். இருவரும் ஒருவரே. சிவன் வேறு; முருகன் வேறு அல்லர். அவர்கள் இருவரும் ஒருவரே.

கர்த்தாவாகச் சிவபெருமான் ஒருவரே இருப்பினும் முத்தொழில்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல் என்பவற்றை நிகழ்த்தும்போது, பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்னும் மூன்று பெயர்களையும் கொண்டு விளங்குகின்றார்.

சிவபெருமான் மேற்கொள்கின்ற முத்தொழில்களுக்கேற்ப வெவ்வேறு உருவங்கள் பெயர்கள் மட்டுமல்ல, வெவ்வேறு இயல்புகளையும் கொண்டுள்ளார்.

பிரமனாகப் படைக்கும் தொழிலை ஆற்றும்போது சிவபெருமான், ராஜச குணத்தையும்; விஷ்ணுவாகக் காத்தல் தொழிலைப் புரியும்போது சாத்வீக குணத்தினையும்; உருத்திரனாக அழித்தலில் ஈடுபடும்போது தாமச குணத்தினையும் மேற்கொள்கின்றார் என்று நூல்கள் கூறுகின்றன.

*பிரார்த்தனைகளை விடவும் மிகவும் உயர்ந்தது பொறுமைதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மூன்று குணங்களும் இறைவனின் இயல்பான குணங்கள் அல்ல. குணம், குறி அற்றவன்தான் இறைவன். அவ்வாறிருந்தும், தேவை கருதியும், செயல்முறை நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டும் இம் மூன்று குணங்களையும் இறைவன் ஏற்றுக் கொள்கின்றார்.

மனிதர்கள் படைக்கப்பட்டவர்கள். அதனால் மூன்று குணங்களையும் இயல்பாகவே பெற்றுள்ளவர்களாக விளங்குகின்றனர்.

எனினும், மனிதன் சாத்வீக குணம் நிறைந்தவனாகவே விளங்கவேண்டும் எனப்படுகிறது. அதற்கு எந்நேரமும் கொந்தளித்துக் கொண்டிருக்கும் மனம் அடங்க வேண்டும். மனம் ஏன் கொந்தளிக்கிறது? மனிதனிடம் மிகுந்து காணப்படுகின்ற இராஜச, தாமச குணங்களின் அதிதீவிர முனைப்புத்தான் மனக்கொந்தளிப்புக்குக் காரணம். மனம், கொந்தளிப்பு இன்றி அடங்கவேண்டுமென்றால், பரம்பொருளாகிய இறைவனின் நினைவினை என்றும் அகலாதபடி நெஞ்சத்தில் நிறுத்துவது தான் ஒரு வழி.

மனித நெஞ்சங்கள், இறைவனின் இருப்பிடம் ஆகிவிட்டால் அந்த இடம் தூய்மை பெற்றுவிடும். அழுக்காறு, அவா, வெகுளி, கர்வம், செருக்கு, எரிச்சல், பொறாமை போன்ற மன அழுக்குகள் அகன்றுவிடும். சாத்வீகம் மலர்ச்சிபெற்று விடுகின்றது. இந்த நிலையில் மனத்தின் கொந்தளிப்பு, அலை மோதல் என்பன ஓய்ந்து மனம் அமைதி பெற்று விடுகின்றது.

மனம் அடங்கி அமைதிபெற்ற நிலையில், இறைவனை நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது. இதனையே ஆன்மிகம் என்பர். ஆன்மிகம் எமது வாழ்வில் முதன்மை பெறுகின்றது. வையத்துள் மனிதர்கள் வாழ்வாங்கு வாழ, ஆன்மிகம்தான் உறுதுணை. ஆன்மிகம், மனிதர்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழும் நிலைக்கு அவர்களை உயர்த்துகின்றது. ஆன்மிக வாழ்வு என்பது அடையமுடியாத தொன்று; இவ்வுலகில் வாழ்ந்துகொண்டு, ஆன்மிகத்துடன் இணைவது என்பது எல்லோருக்கும் கைவரக்கூடியதன்று என்று பலர் எண்ணக்கூடும். அந்த எண்ணம் தவறானது.

உண்மையில் ஒவ்வொரு மனிதனும் ஆன்மிக வளம்கொண்டவன் என்று சைவம் கூறுகிறது. மனிதன் அபூர்வமாகப் பெற்ற ஆன்மிக வளத்தை அலட்சியப்படுத்தாது, தனது வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு முறையாகப் பயன்படுத்துவதற்கு உதவும் முகமாகவே, சைவநெறி வகுக்கப்பட்டு உள்ளது. மனிதர்கள் வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டிய தர்ம நெறிகளை சைவ சமயம் எடுத்துக் கூறுகிறது. சைவம் வழங்கும் தர்மநெறிகளை அறிந்து, தெளிந்து வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுதலே ஆன்மிக வாழ்வு ஆகும். அப்போதுதான் மனித வாழ்க்கைத் தரம் மேன்மையும், மேம்பாடும் அடையும்.

நமது வாழ்வு உயர்வுபெற, ஆன்மிகம் தழுவியதாக அமைய வேண்டும். ஆன்மிக வாழ்வு என்பது தர்மமும், நல்லொழுக்கமும் நிறைந்த வாழ்வு. அதுவே சைவநெறி அமைத்துத்தரும் வாழ்வு. சைவம் சிவ சம்பந்தம் உள்ளது. சிவம் முழுமுதற் பொருள். சிவத்தைச் சிந்தித்தும், முன் வைத்தும், சிவத்தின் கருத்தை அறிந்தும் வாழ்கின்ற வாழ்வே செம்மையான வாழ்வு ஆகும்; ஆன்மிக வாழ்வும் ஆகும்.

---

**நீ ஒருவனை நல்லவனாக்க விரும்பினால் அவனுக்கு உபதேசங்கள் செய்யாதே, அவனைச் சீர்திருத்த முயலாதே. அவனுடன் சென்று வாழ். உன்னிடம் நன்மை என்ற தெய்வீகத் தீப்பொறி இருக்குமானால் அது அவனைப் பற்றிக்கொண்டு நல்லவனாக்கும்.**

*நம்முடன் வாழ்வோரைப் புரிந்துகொள்வதற்கு நம்மை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளையாடற் புராண வசனம்

## (இருபத்தேழாவது)

## அங்கம் வெட்டின படலம்

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

குலோத்துங்க பாண்டியன் செங்கோலோச்சு நாளிலே வேறு தேசத்துள்ள முதிர்ந்த வயசையுடையானொருவன், மதுரையில் வந்திருந்து, வாள்வித்தை பயிற்றிச் சீவனஞ் செய்தான். அவன் நாடோறுஞ் சோமசுந்தரக்கடவுளை அடைந்து, அன்போடு வழிபடும் நியமம் பூண்டான்.

அவனை வழிபட்டு வாள் வித்தை கற்கும் மாணாக்கர்களுள்ளே, உய்வகை அறியாப் பாவியாகிய சித்தன் என்பவன் ஒருவனுளன். அவன் ஊழ்வலியினால் அவ் வித்தையை நிரம்பக் கற்றுக்கொண்டான். அதனால் அவன் செருக்கடைந்து, தன் ஆசிரியனுக்கு மாறாய்த், தானும் ஒரு வித்தியா கூடஞ் சமைத்து, அதில் அநேகருக்கு வாள் வித்தை பயிற்றித் தன்னாசிரியனினும் அதிகமாகிய ஊதியத்தைப் பெறுவானாயினான். இருவருடைய வாள் வித்தையின் ஊதியத்தையுந் தானொருவனே ஒருங்குபெற விரும்பி அவ்விருத்தனை ஊரினின்றும் ஓட்டக் கருதி, அவனிடத்தே கற்கும் மாணவர்களைத் தன்னிடத்து வரும்படி மனந்திரிந்து, நாடோறும் அவனுக்கு இடையூறே செய்வானாயினான். தன்னாசிரியன் இல்லாதபொழுது அவனுடைய மனைவியிடத்தே போய், "இடமுண்டோ? இடமுண்டோ?" என்று அடுத்தடுத்து, அஞ்சாது எப்பொழுதுங் கேட்கக் கேட்க, அவள் சும்மா இருந்தாள். பின்னொரு நாட் போய் அவள் கையைப் பிடித்திழுப்ப, அவள் அவனைத் தள்ளிவிட்டு, உள்ளே போய்க் கதவைப் பூட்டிக்கொண்டு, தன் கற்பைப் பாதுகாத்தாள். சித்தன் காமத்தீ வெதும்பப் போயினான்.

கற்பினிற் சிறந்த அப் பெண்ணானவள், பாவிகளெல்லாருள்ளும் பெருங்கொடும் பாவியாகிய சித்தன் செய்த இழி தொழிலைத் தன் கணவனுக்கும் வெளிப்படுத்தாது உள்ளத்தடக்கிக் கொண்டு, உயிர்க்குயிராகிய சோமசுந்தரக் கடவுளை நினைந்து நொந்தாள். சோமசுந்தரக் கடவுள், வாள்வித்தை பயிற்றும் ஆசிரியனைப்போல வேடங்கொண்டு, சித்தன் இடத்தே போய், "சித்தா! காளையாகிய நீயும், மிகுந்த மூப்படைந்த நாமும், வாட்போர் செய்து, நமது வலிமையை அளந்தறிவோம். பட்டணத்தின் புறத்திலே நாளைக்கு வா, நாமும் வருவோம்" என்றார். அதற்குச் சித்தன் மகிழ்ந்து, "நல்லது" என்று உடன்பட்டான். வாளாசிரியர் மீளும்பொழுது சூரியன் அத்தமயனமடைந்தான். மற்ற நாள், செய்ந்நன்றி கொன்றவனாகிய சித்தன், வீரமடந்தையை வழிபட்டுத் துதித்துக் கச்சுக் கட்டி, வாளும் பரிசையும் எடுத்துக்கொண்டு போய், ஆசிரியர் சொல்லிய போர்க்களத்தை அடைந்தான். வாளாசிரிய வேடங்கொண்ட சிவபெருமானும், விபூதி தரித்துக், கச்சுக் கட்டி, வாளும் பரிசையுந் தாங்கிக்கொண்டு, சித்தனுக்கெதிரே வந்தார். சிவபெருமானுஞ் சித்தனும், எண்ணில்லாத சனங்கள் காண, இருபது நாழிகையெல்லை நின்று, வாட்போர் செய்தார்கள். பின்பு சிவபெருமான், அங்குள்ளார் அனைவரும்

*புத்திசாலி ஒரே ஒரு முறைதான் ஏமாற்றப்படுகிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்க; "உன் குருபன்னியை நினைத்த நெஞ்சையும், குறித்துப் பேசிய நாக்கையும், தொட்ட கையையும், பார்த்த கண்ணையுங் காத்துக்கொள், காத்துக்கொள்" என்று சொல்லிச் சொல்லி, அவ்வுறுப்புக்களுக்கெல்லாந் தண்டஞ்செய்து, தலையை வெட்டி விழுத்தி விட்டு மறைந்தருளினார்.

போர்க்களத்தில் நின்றவர்களுள்ளே, வாள்வித்தை பயிலும் மாணாக்கர்கள், ஆசிரியனைக் காணாது, வீட்டிலே போய்த் தேடி, அவன் மனைவியை நோக்கி, "ஆசிரியர் எங்கே?" என்று வினாவ அவள், "கோயிலுக்குப் போயினார்" என்றாள். என்ற அப்பொழுதே, கோயிலுக்குப் போன ஆசிரியன் திரும்பி வந்தான். அவர்கள் அவனைப் பார்த்து, "நீர் போர்க்களத்திலே சித்தனோடு போர் செய்து, அவனுடைய அங்கங்களை வெட்டினீரே! பின்பு நாங்கள் அந்தப் போர்க்களமெங்கும் உம்மைத் தேடிக் காணாது, இங்கே வந்தோம்" என்றார்கள். அதுகேட்ட ஆசிரியன், "நான் அங்கம் வெட்டினேன் அல்லேன், நீங்கள் சொல்வதென்னை? என் போல் வந்து சித்தனைக் கொன்றவர் யாவர்? அது சோமசுந்தரக் கடவுளுடைய திருவிளையாடல் போலும்" என்றான். மனைவியும் அவனை நோக்கித், தன்னைச் சித்தன் பல நாளும் வந்து கேட்டதும், முதனாள் வந்து தன் கையைப் பிடித்திழுத்தும், தான் அவனைத் தள்ளிவிட்டு உள்ளே போய்க் கதவைப் பூட்டிக்கொண்டிருந்ததுஞ் சொன்னாள். அது கேட்ட மாணாக்கர்கள், "சித்தனை, வாள்வீரர் கொல்லும்பொழுது, இவ்வம்மையார் சொல்லியபடி எல்லாஞ் சொல்லியே கொன்றார். இது மெய்ம்மை" என்றார்கள். ஆசிரியன் "சோமசுந்தரக் கடவுளுடைய திருவிளையாட்டே!" என்று சொல்லிக்கொண்டு, தன் மனைவியோடும் மாணாக்கர்களோடுந் திருக்கோயிலையடைந்து, சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "எம்பெருமானே! பிரமாவினாலும் அறியப்படாத உமது திருவிளையாடல் சிறிய ஏழையாகிய அடியனே னளவினதே" என்றான்.

குலோத்துங்க பாண்டியனும், மதுரை நகரத்துள்ளோரும், சிவபெருமானுடைய திருவிளையாடலை நோக்கிக் கண்ணீர் வெள்ளத் தாழ்ந்து, அவருடைய திருவடிகளை வணங்கிக், கீதம் பாடி, ஆனந்தக் கூத்தாடித் துதித்தார்கள் குலோத்துங்க பாண்டியன், "இவர் அடியவருக்கு எளியவர்; பரதேசி காவலர்" என்று சிவபெருமானுடைய திருவடிகளில் வீழ்ந்து துதித்து, வாளாசிரியனையும் அவன் மனைவியாகிய மாணிக்க மாலையையும் யானைமீதேற்றி நகர்வலஞ் செய்வித்தான். பின்பு தன் புத்திரனாகிய அனந்தகுண பாண்டியனுக்கு முடிசூட்டித், தன்னரசை அவன் இடத்தே ஒப்பித்தான்.

குலோத்துங்க பாண்டியன், நித்தப் பொருள் இதுவெனவும் அநித்தப்பொருள் இதுவெனவும் அறிந்து, அநித்தப் பொருளிலுள்ள பற்றை முற்றக் கடிந்து, ஐம்பொறி வழிச் செல்லாது அருள்வழிச் சென்று, தன்னைப் பந்தித்த மலசத்தியினின்று நீங்கி, இராகு உமிழ்ந்த சந்திரன்போல விளங்கிச், சிவபெருமானுடைய திருவடி நிழலைப் பிரியாத பேரின்ப மயமாகிய பரகதியை அடைந்தான்.

## (இருபத்தெட்டாவது)
## நாக மெய்த படலம்

அனந்தகுண பாண்டியன் விபூதி, உருத்திராட்சம், பஞ்சாட்சரமென்னும், மூன்றுமே மெய்ப்பொருள் என்று தெளிந்து, அவைகளில் அளவிறந்த பத்திமை பூண்டு, தன் தந்தை முதலிய முன்னையரசர்களினும் மிகச் சிறந்தவனாயினான். "மன்ன னெப்படி மன்னுயிரப்படி" ஆதலினாலே, பாண்டிநாடெங்குஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவவேடமே பரவிற்று. எண்ணாயிரஞ் சமணரும் அதனையறிந்து, மானத்தீச் சுடப் பொறாமை கொண்டு, பாண்டியனைக் கொல்லக் கருதி, ஒரு காத வளவினதாகிய ஒரு வேள்விச் சாலை அமைப்பித்து, அதில் ஒரு வேள்வி செய்தார்கள். செய்தலும், வேள்விக் குண்டத் தினின்றும் ஓரசுரன் வந்து தோன்றி, அச் சமணர்களை நோக்கி, "நீங்கள் எனக்கு விதிக்கும் பணியாது?" என்று வினாவினான். சமணர்கள், "நீ விரைந்து போய்ப் பாண்டி யனை மதுரையோடு எடுத்து விழுங்கிவிட்டு வா" என்று ஏவினார்கள்.

அதுகேட்ட அசுரன் ஆகாயத்தைத் தீண்டும் பெரிய உடலையும், விஷத்தைச் சொரிகின்ற பெரும் பற்களையும் வடவா முகாக்கினி போலச் சுவாலிக்கின்ற கண் களையும், மலைமுழை போலும் வாயையும் உடைய ஒரு பெரிய சருப்ப வடிவங்கொண்டு, சந்திர சூரியர்களும் இயமனும் ஆதிசேடனும் திக்குயானைகளும் அஞ்சி நடுநடுங்கும்படி, மதுரை நகரத்துக்கு மேற்குத் திக்கில் வந் தான். அப்பொழுது அதனைக் கண்டவர்கள் விரைந்தோடிப்போய், அனந்தகுண பாண்டி யனை வணங்கி, விண்ணப்பஞ் செய்தார்கள். அதுகேட்ட பாண்டியன் சிறிதும் அஞ்சாத வனாகி, "முன்னே யானையை விடுத்தவர் களே இதையும் விடுத்தார்கள் போலும். அதைப்போலவே இதையுங் கொல்வதற்கு எம்முடையவர் இருக்கின்றார்" என்று நினைந்து, திருக்கோயிலையடைந்து, சோமசுந்தரக் கட வுளை வணங்கி, "எம்பெருமானே! அடியேன் ஒருபோதும் உம்மை மறவாது வழிவழி அடிமை செய்யுமியல்பினேன். நீர் அருளிச் செய்த நூல்வழியே முறை செய்து வருவேன். இந்நகரமுழுவதையும் அழிக்கக் கருதிச் சமணர்கள் விடுத்த சருப்பம் வருகின்றது. அது உமது திருவருளினாலே சாதல் வேண்டு மெனக் கருதிய தமியேனுக்குக் கருணை செய்தருளும்" என்று விண்ணப்பஞ் செய்தான்.

அவ்வாறு விண்ணப்பஞ் செய்த பாண்டியன், சிவபெருமானிடத்தே அனுமதி பெற்று வணங்கி, அவருடைய திருவடிகளைச் சிந்தையிற் கொண்டு, புறத்து வந்து, அம்பும் வில்லும் எடுத்துக்கொண்டு, மதுரைத் திரு நகரத்தின் மேலை வாயிலையடைந்து, பெரு மலை போலுஞ் சர்ப்பத்தை எதிரே கண்டான். அப்பொழுது சர்ப்ப வடிவத்தையுடைய அவ் அசுரன் படத்தைப் பரப்பி, எட்டுத்திக்கினும் ஆகாயத்தினும் பேரிருள் செறித்துப், பல்லை யதுக்கிப், பெருமூச்செறிந்து, வாயைப் பிளந்து, அப் பட்டணம் முழுதையும் ஒருங்கே கௌவி விழுங்கும்படி சீறினான். பாண்டியன் இடி யேறும் அஞ்சும்படி ஆரவாரித்து, வில்லை வளைத்துப் பாணங்களைத் தொடுத்து விடுத் தான். விடுத்த பாணங்களெல்லாவற்றையும், அசுரன் துகள் படும்படி கறித்து, உமிழ்ந்தான். பாண்டியன் அது பொறாது, சிவபெரு மானுடைய திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டு ஓர்த்த சந்திர பாணத்தை விடுத்து, அப் பாம்பினுடைய உடம்பைத் துண்டஞ் செய்தான். அப் பாம்பு, இடிபோலார்த்து, இரத் தம் அருவிபோற் பெருக, உடம்பு புரள, இறக் கும்போது ஆலகால வெள்ளம்போல நஞ்சைக் கக்கிற்று. அந்த நஞ்சு மதுரைத் திருநகரம் எங்கும் இடையீடின்றிப் பரந்தது. அதனால் அந்நகரத்துள்ளாரெல்லாரும் நிலை தளர்ந்து, சரீரம் வெயர்த்து, இந்திரியங்களும் அந்தக் கரணங்களுந் தலை தடுமாறி, உரை குழறி, நாக்கு வரண்டு, கபமேலிட்டு, அறிவழிந்து மயங்கி, மூச்சொடுங்கிக் கிடந்தார்கள்.

பாண்டியன் விரைந்து போய்த், திருக் கோயிலையடைந்து, சிவபெருமானை வணங் கிச், "சருவான் மாக்களுக்கும் நாயகரே! அன்பர்களுக்கு எளியவரே! இந்நகரத்துக்கு

*ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையால் பயனில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் மகாராசாவே! தமியேன் உம்மிடத்திலே அடைக்கலம் புகுந்தேன், முன்னே கடலை வற்றுவித்தும், மேகங்களைத் தடுத்தும், யானையை எய்தும், இந் நகரத்தைக் காத்தருளினீர். இன்றும் விடத்தினால் வருந்தும் வருத்தத்தையும் நீக்கியருளும்" என்று விண்ணப்பஞ் செய்தான். அருட் கடலாகிய சிவபெருமான் தமது திருச்சடையிலுள்ள பால சந்திரனுடைய அமிர்தத்திலே சிறிது துளியைச் சிந்தியருளினார். அச் சிறு துளி, அந் நகரமெங்கும் பாலிற் பிரைபோலக் கலந்து, அதனை முன்போலவே மதுராநகரமாகச் சுத்தி செய்தது; அதனால் யாவரும் விடநீங்கி இன்பமுற்றார்கள். பாண்டியன் சிவபெருமானுக்கு அன்புருத்தானேயாகி, அரசு செய்து கொண்டிருந்தான்.

---

பள்ளிக்கூடத்தில் கல்வி கற்க ஆரம்பிக்கும்போதே மரியாதைப் பண்புகளையும், இறை நம்பிக்கையையும் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். மேலை நாடுகளில் ஆசிரியரைப் பெயர்கூறி அழைப்பது சாதாரணம். அதையே சில பிள்ளைகள் வீடுகளிலும் கடைப்பிடிக்கிறார்கள். பெற்றோரையும் பெயர் சொல்லி அழைக்கிறார்கள். காரணம் கேட்டால் "எங்க பிள்ளை எங்களை பிரெண்ட்ஸ் ஆக நினைத்து நடக்கிறான்" என்கின்றனர் பெற்றோர்கள். இப்படி இருந்தால் எப்படி நாம் அடுத்த தலைமுறையை பண்போடு உருவாக்க முடியும்? கஷ்டம் என்பதே தெரியாமல் குழந்தைகளை வளர்க்க வேண்டுமென்று பல பெற்றோர்கள் விரும்புகிறார்கள். மிகப்பெரிய தவறு அதுதான். தங்கள் சக்திக்கு மீறிய அளவில் ஒரு பொருளை ஆசைப்பட்டாலும், அதை எப்படி யாவது வாங்கிக் கொடுக்கத் துடிக்கிறார்கள் பெற்றோர்கள். மற்றப் பெற்றோருடன் தங்களை ஒப்பிட்டு அது ஒரு கௌரவப் பிரச்சினையாகவும் எடுத்துக்கொண்டு பிள்ளைகளின் எதிர்நீச்சல் போடும் திறனை அழித்துவிடுகிறார்கள். அத்தோடு படிப்புக்கும், சினிமாப்பாடல் போட்டிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பெற்றோர்கள் அதேயளவு வாழ்வியலைப் பற்றிப் போதிக்கிறார்களா? பிள்ளைகளின் மனதை வளம்படுத்த தியானப் பயிற்சி, அகிம்சையைக் கற்றுக்கொள்ள இறை நம்பிக்கை போன்றவற்றைக் கற்றுக்கொடுங்கள் என்றால் "அவர்களுக்கு நேரம் கிடைப்பதே அரிது" என்கின்றனர் பெற்றோர். இப்படி வளர்க்கப்படும் பிள்ளைகள்தான் வாழ்க்கையில் தவறான முடிவுகளுக்குப் போகிறார்கள் என்று கருத்துக்கணிப்பு கூறுகின்றது. உலகிலேயே கொடிகட்டிப் பறக்கும் தொழிலான மென்பொருள் நிறுவனங்களில் வேலை செய்வோர்கள்தான் மிகுந்த மன அழுத்தத்தில் வாழ்கிறார்கள் என்பது மருத்துவ விஞ்ஞானிகளின் கருத்துக் கணிப்பு. எனவே தங்கள் பிள்ளைகளும் கொடிகட்டிப் பறக்கவேண்டுமென்று நினைக்கும் பெற்றோர்கள் அவர்களின் படிப்புடன் வாழ்வியலையும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

மேலை நாடுகளிலுள்ள சமுதாய வாழ்க்கைமுறை கண்ரென்று சிரிப்பதைப் போன்றதாகும். ஆனால் அதன் அடியில் அழுகையும் புலம்பலும் மறைந்திருக்கின்றன. அதன் முடிவும் தேம்பி அழுவதாகவே முடியப்போகிறது.

*மகிழ்ச்சியாய் நீ வீணாக்கிய தருணங்களெல்லாம் வீணானவையல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவும் சிஷ்யனும்

- திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் -

அவர் ஒரு குருவானவர்; அவருக்கு ஒரு சிஷ்யன். அவன் தனக்குச் சிஷ்யனாகக் கிடைத்தான் என்று பெருமைப்படுவதா! அவனை மேலும் நெறிப்படுத்துவதா! சிஷ்யன் என்ற ஒருவன் கிடைத்தாலே குருவுக்கு பெரிய பொறுப்புதான்.

தனது சிஷ்யனைக் குருகுலவாசம் செய்யவைத்து, அவனை நல்லதோர் ஞானஸ் தன் ஆக்க முயன்று கொண்டிருந்தார் குரு. காலம் ஓடியது. ஓரளவு பக்குவமடைந்த தனது சிஷ்யனை தனியே வேறொரு ஊருக்கு அனுப்பி வைத்தார் அவர். அங்கு அனுபவமும் தியானப் பயிற்சியும் செய்து அவன் உயர் ஆத்ம ஞானம் பெற வேண்டும் என்பது அவரது நோக்கம். சிஷ்யனும் குருவின் வார்த்தைகளை சிரமேற்கொண்டு வேறு ஊருக்குப் புறப்பட்டுவிட்டான். அங்கே தனிமையில் அவனுக்கு தியானப் பயிற்சி.

காலம் தொடர்ந்து ஓடியது. தனது சிஷ்யன் எவ்வாறு இருக்கிறான் என அறிய ஆவல்கொண்ட குரு தனது சிஷ்யன் வாழ்ந்து வந்த ஊருக்குப் புறப்பட்டுச் சென்றார். ஆனால், மாறுவேடத்தில் சென்றார்.

அவர் அவனது ஊரை அடைந்த போது, அங்கு ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது. மாவிலை தோரணங்கள், மங்கல தீபங்கள், அலங்கார வளைவுகள், யானை, குதிரை ஊர்வலம், வாத்தியங்கள் ஒலிக்க இசை முழங்க, நடன மாதர் ஆடி வர, குயிலின் குரலுடையோர் பாடி வர, மன்னன், யானைமீது அம்பாரியில் உட்கார்ந்து உலா வந்துகொண்டிருந்தான். "மன்னன் ஊர்வலம் வருகின்றார்" என அங்கு ஊர் மக்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

சிஷ்யனைக் காணவந்த குரு சற்று ஓரமாக நின்று நடப்பவற்றை அவதானித்துக் கொண்டு நின்றார். தூரத்திலே ஒருவர் தனியே நின்று ஊர்வலத்தைப் பார்த்துக்கொண்டிருப் பதனையும் கண்டார் குரு. அவர் அருகே சென்றார். அங்கு நிற்பவர் வேறு யாருமல்ல. சாட்சாத் தன் சிஷ்யனேதான் என குரு கண்டு கொண்டார். குரு மாறுவேடத்தில் இருந்ததால் சிஷ்யன் குருவை அடையாளங்காண முடியவில்லை.

குரு தன் சிஷ்யனின் பக்குவ நிலையைச் சோதிக்க விரும்பினார். அவனருகே சென்று, இங்கு என்ன நடக்கிறது? என வினாவினார். "தெரியவில்லை! இந்த ஊர் ராஜா ஊர்வலம் வருகின்றார்" என்றான் சிஷ்யன். எங்கே ராஜாவைக் காணோமே! இது குருவின் கேள்வி. "அதோ மக்கள் மத்தியில் போகின்றாரே அவரேதான் ராஜா" இது சிஷ்யனின் பதில். "மக்கள் மத்தியிலா? மக்கள் மத்தியில் எவ்வளவோ பேர் போகின்றார்களே அவர்களில் ராஜா யார்?" இது குருவின் கேள்வி. ஆண்டவா! அதோ யானை மேலே அம்பாரி. அதில் உட்கார்ந்திருக்கிறாரே அவர்தான் ராஜா. அப்படியா? சிறிது நேரம் யோசித்தார் குரு. "யானை எது? அம்பாரி எது? அது புரியவில்லையே". இது குரு. சிஷ்யன் குருவானவரை ஏற இறக்கப் பார்த்தான். என்னய்யா இது! யானை தெரியாதா? அதோ

*செய்கை புரியாத மனிதனுக்கு தெய்வம் ஒருபோதும் உதவி செய்யாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரும்! கீழே இருப்பது யானை. மேலே இருப்பது அம்பாரி. அப்படியானால் கீழ் எது? மேல் எது? கேட்டார் குரு. அட ராமா! இதற்கு என்ன பதில் சொல்வேன்! யோசித்தான் சிஷ்யன். ஆனால், அவனும் சளைத்ததாக இல்லை.

தான் கீழே யானைமாதிரி குனிந்து நின்று கொண்டு, குருவை தன்மேல் இருத்திக் கொண்டு, "இப்போ பாருங்கள். நான்தான் கீழ். நீர்தான் மேல். புரிகிறதா?" என்றான் சிஷ்யன்.

குருவானவர் கேட்டார்: "நீ என்றால் யார்? நான் என்றால் யார்?" திகைத்துவிட்ட சிஷ்யன், "நீ என்றால் யார்? நான் என்றால் யார்? இதற்கு விடை தெரிந்தால் நான் ஏன் இங்கு வரவேண்டும். விடைகளை அறிந்து வரத்தான் எனது குருவானவர் என்னை இங்கு அனுப்பினார். நீங்களே இந்த வினாக்களுக்கு விடையையும் அளியுங்கள்" என்றான் சிஷ்யன்.

குரு தன்னை யார் எனத் தன் சிஷ்யனுக்கு வெளிப்படுத்தினார். "நீ வேறு, நான் வேறு அல்ல. இரண்டும் ஒன்றே. அதை நீ பூரணமாக உணர்ந்தபின் மீண்டும் என்னிடம் வா" என்று கூறிப் பயணமானார். சிஷ்யன் ஒரு புத்துணர்ச்சியோடு மீண்டும் தியான மண்டபம் நோக்கி விரைந்தான். என்ன நேயர்களே! முதலில் நாம் நம்மை அறிந்து கொள்வோம்! செய்வோமா?

---

ஆன்மா பிறப்பதாகவும் இறப்பதாகவும் கூறப்படுவதெல்லாம் மூடக்கருத்துக்கள். உடல் மட்டும் அழியுமே தவிர ஆன்மா பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை. நாம் சாகப்போவதாகப் பயப்படுவதெல்லாம் வெறும் மூடநம்பிக்கை. என்னால் இதைச் செய்ய முடியும் அதைச் செய்ய முடியாது என்று கூறுவதும் கூடப் பொருளற்றவையே. நம்மால் எதையும் செய்ய முடியும். அதற்கு ஒவ்வொரு மனிதனும் தன்னில் முதலில் நம்பிக்கை வைக்க வேண்டும். தனக்கு வெளியே உள்ள கடவுளை நம்பாதவனை எப்படி சில மதங்கள் நாஸ்திகன் என்று கூறுகின்றனவோ அதுபோலவே தன்னிடம் நம்பிக்கை இல்லாதவனை நாஸ்திகன் என்று வேதம் கூறுகிறது. நம் ஆன்மாவின் மகிமையின் நம்பிக்கையின்மையே நாத்திகம் என்று வேதம் கூறுகிறது. சந்தேகமின்றி இது பலருக்கு பயங்கரமான கருத்தாக இருக்கலாம். இது அடைய முடியாத குறிக்கோள் என்றும் நம்மில் பலரும் நினைக்கலாம். ஆனால் இதை ஒவ்வொரு மனிதனாலும் அடைய முடியும். இந்த இலட்சியத்தை அடைவதில் ஆண், பெண், சிறுவர், இனம், பால் போன்ற வேற்றுமை எதுவும் தடையாக இருக்க முடியாது. இதை அனைவரும் அடையலாம். ஏனெனில் இது ஏற்கனவே அறியப்பட்டது.

கடவுள் எப்போதும் நம்முள்ளே இருக்கிறார் என்பதை ஏன் எல்லோரும் நம்புவதில்லை என்று ஒரு ஞானியைக் கேட்டார்கள். அதற்கு ஞானியும் "எல்லாம் ஒரு பாதுகாப்புக்குத்தான். கடவுள் என்னுடன் இருக்கிறார் என்று நம்பினால் மனிதரால் எந்தக் குற்றமும் செய்யமுடியாது. ஒரு நல்லவன் தம்முடன் கூடவே இருக்கிறான் என்பதை மக்களால் சகித்துக்கொள்ள முடிவதில்லை. அதனால்த்தான் தமக்கு உள்ளேயுள்ள தெய்வங்களைத் தூக்கி சிலைகளாக வெளியே வைத்துவிட்டார்கள். இப்போ விரும்பியபடி குற்றங்களைச் செய்துவிட்டு பாவமன்னிப்பு என்று பிரார்த்தனையும் செய்கிறார்கள்" என்றார்.

*சிறிதளவு உள்ளவன் ஏழையல்ல. ஆசை அதிகம் உள்ளவனே ஏழை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த வாழ்வளிக்கும் ஐந்தெழுத்து மந்திரம்

– திரு வி. செல்வரத்தினம் அவர்கள் –

சிவவாக்கியார் இந்த ஆத்ம தியானத்தில் துன்பம் அறுத்து இன்பம் அடைய ஒரு வழி கூறுகிறார். "நமசிவாய" என்ற ஐந்தெழுத்தை ஓதினால், மனதில் இன்பம் அடையலாம். அதுவே அபூர்வ இன்பம் என்கிறார் அவர்.

"ஓம் நமசிவாயமே உணர்ந்து மெய்யுணர்ந்த பின்
ஓம் நமசிவாயமே உணர்ந்து மெய்தெளிந்த பின்
ஓம் நமசிவாயமே உணர்ந்து மெய்யுணர்ந்த பின்
ஓம் நமசிவாயமே உட்கலந்து நிற்குமே!"

"அஞ்சும் அஞ்சும் அஞ்சும் அஞ்சாம
அல்லல் செய்து நிற்பதும்
அஞ்சும் அஞ்சும் அஞ்சுமே அமர்ந்துளே இருப்பதும்
அஞ்சும் அஞ்சும் அனுரைசுமம் ஆதரிக்க வல்லீரே
அஞ்சும் அஞ்சும் உம்முளே அமர்ந்த சிவாயமே!"

திருமூலர் கூறுவதுபோல ஆசைகளை அறுக்க முயல்வோம். அதற்குத் துணை நிற்க "நமசிவாய" என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை நாடுவோம். நமசிவாய என்ற பஞ்சாட்சரம் ஆதி மந்திரம் என்று போற்றப்படுகிறது. இந்தத் திருவைந்தெழுத்து சைவ மக்களுக்கு உயிர் போன்றது. இந்த மந்திரத்தைத் தூய நெஞ்சோடும் பயபக்தியோடும் ஓதினால், மிகப்பெரிய நன்மையுண்டாகும். வேத மந்திரங்கள் போன்று மிகவும் சக்தி வாய்ந்தது. தீயவர்கள் கூட இந்த மந்திரத்தை ஓதினால் இறைவன் திருவருளுக்குப் பாத்திரமாவார்கள்.

முற்பிறப்பில் செய்த பாவ வினைகளை அகற்றும் மாமருந்து பஞ்சாட்சர மந்திரமாகும். எல்லா மந்திரங்களையும் பிரணவத்துடன் சேர்த்தே ஓத வேண்டும். ஆனால், பஞ்சாட்சர மந்திரம் ஒன்று மட்டுமே இவ்விதி இல்லாதது. இம் மந்திரத்தை பிரணவத்தைச் சேர்த்தும் ஓதலாம், சேராமலும் ஓதலாம். இரண்டிற்கும் பலன் ஒன்றேயாகும். படித்தவர்களும் சரி, படிக்காதவர்களும் சரி நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தைச் சுலபமாகப் பிழையின்றிச் சொல்ல முடியும். ஆகவே, இந்த நமசிவாய மந்திரத்தை தினமும் ஓதி இறைவனின் கருணையைப் பெறுவோம்.

மேலும், ஐந்தெழுத்து மிகவும் சக்தி வாய்ந்தது. எந்தப் பயங்கரப் பாதையில் போனாலும், இந்த மந்திரத்தை ஓதினால் எமக்கு ஒரு அபாயமும் ஏற்படாது. நமசிவாய

*எந்தச் செயல் செய்யும்போதும் திறமை என்ற ஒன்றை மட்டும் வளர்த்துக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரம் ஓதுவதற்கு நாக்கு நல்லபடியாக ஒத்துழைக்க வேண்டும். மனம் முழுமையாக இறைவனோடு ஒன்றுபட வேண்டும். தித்திக்கும் பஞ்சாட்சர மந்திரத்தை அன்புடனும் பயபக்தி உடனும் ஓதினால் தரித்திரம் உண்டாகாது. இம்மை, மறுமை, வீடு என்ற மூன்று நலன்களும் கிடைக்கும்.

பிரச்சினைகளுக்கும் சிக்கல்களுக்கும் துன்பங்களுக்கும் பேராசைதான் காரணம். எவனொருவன் பேராசையை ஒழிக்கிறானோ அவனுக்கு எந்தத் துன்பமும் துயரமும் ஏற்படாது. சிவாயநம என்று சிந்தித்திருப்பவர்களுக்குப் பேராசை என்ற பேய் வந்து சேராது. ஆகவே மனதை வாட்டும் துன்ப, துயரங்கள் மறைய சிவாயநம என்ற சிந்தனையில் மூழ்குங்கள்.

மாணிக்கவாசகர் ஐந்தெழுத்தினை எவ்வாறு சொல்வதை தந்திருக்கின்றார் என்பதையும் தம்மைத் துன்பக் கடலில் துயர்களின்றி என்றும் காப்பாற்ற வேண்டி எவ்வாறு மன்றாடிக் கூவி இறைவனை அழைக்கிறார் என்பதையும் அவர் பாடிய பாடல்கள் வாயிலாக நாம் அறியலாம்.

*"போற்றி ஓம் நமசிவாய புயங்கனே மயங்குகின்றேன்*
*போற்றி ஓம் நமசிவாய புகலிடம் பிறிது ஒன்றுமில்லை*
*போற்றி ஓம் நமசிவாய புறம் எனைப் போக்கல் கண்டாய்*
*போற்றி ஓம் நமசிவாய சயசய போற்றி! போற்றி!!"*

மாணிக்கவாசகர் போன்ற அருட்பெரியார்கள் எல்லோரும் நமசிவாய என்னும் மந்திரத்தைச் சொல்லிச் சொல்லியே இறைவனை அழைத்து இன்பம் கண்டிருக்கிறார்கள். எத்தனை தடவைகள் இந்த ஐந்தெழுத்து மந்திரத்தைச் சொன்னாலும், மாணிக்கவாசகருக்கு மனநிறைவு வராது. அதனால் தம்மை நாய் என்றும், பேய் என்றும் திட்டிக்கொள்கிறார். நமசிவாய என்று சொல்லும்போது, இறைவனுடன் இருப்பதாக அவரது மனம் சொல்லும் அம் மந்திரத்தைச் சொல்லாதபோது, இறைவனைப் பிரிந்திருப்பதாக அவரது மனம் சொல்லும்.

இப்பாடல் மூலம் அவர் கோவென்று கதறுகிறார்.

*மாயனே! மறிகடல் விடம் உண்ட*
*வானவா! மணிகண்டத்து எம் அமுதே!*
*நாயினேன் உனை நினையவும் மாட்டேன்*
*நமசிவாய என்று உன்னை அடி பணியாப்*
*பேயன் ஆகிலும் பெருநெறி காட்டாய்*
*பிறை குலாம் சடைப் பிஞ்ஞக னேயோ*
*சேயன் ஆகிநின்று அலறுவது அழகோ*
*திருப்பெருந்துறை மேவிய சிவனே!*

ஸ்ரீ பஞ்சாட்சரம் எனும் திருவைந்தெழுத்து சைவத்தின் உயிர் போன்றது. அடியவர்கள் எச் செயலையும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதியே செய்வார்கள்.

திலகவதியார் தன் தம்பியாருக்கு வயிற்று வலி வந்தபோது, அவருக்குத் திருநீறு கொடுத்துத் திருவைந்தெழுத்து ஓதி நோயை மாற்றினார். அதே அப்பர் சுவாமிகள் தமக்குத் துன்பங்கள் வந்தபோது, திருவைந்தெழுத்தை ஓதியே தன் துன்பங்களை அகற்றினார்.

*விழுவதெல்லாம் எழுவதற்குத்தானே தவிர அழுவதற்கு அல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்குத் துன்பம் ஏற்படும்போது அவற்றை அறுத்து இல்லாமல் செய்வதற்கு சிவவாக்கியார் பின்வருமாறு கூறுகிறார். நமசிவாய என்ற ஐந்தெழுத்தை ஓதினால், மனதில் துன்பம் நீங்கி இன்பம் அடையலாம். அதுவே அபூர்வமான இன்பம் ஆகும். இறைவன் நாமம் ஒன்றுதான் உயிரைக் காக்க வல்லது. அதுவே ஐந்தெழுத்துப் பெயராகிய நமசிவாய. இப் பெயரைச் சொல்லியே உயிரானது காம, வெகுளி மயக்கங்களைத் தவிர்த்துப் பிறவிக்கடலைக் கடந்து இன்பக் கரையை அடைய முடியும். இதனை மாணிக்கவாசகர் திருவாசகத்தில் மிக அழகாகக் கூறுகின்றார்.

*தனியனேன் பெரும் பிறவிப் பௌவத் தெவ்வத்*
*தடந்திரையால் எற்றுண்டு பற்றொன்றின்றிக்*
*கனியைநேர் துவர்வாயார் என்னுங் காலாற்*
*கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்*
*டினியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி*
*அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை*
*முனைவனே முதல் அந்த இல்லா மல்லற்*
*கரை காட்டி ஆட்கொண்டாய் மூர்க்கனேற்கே!*

சிவபெருமானைத் தினமும் காலையிலும் மாலையிலும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தால் பூஜிப்பவர்களுக்குச் சகலவிதமான சௌபாக்கியங் களையும் அவர் அளிப்பார்.

ஆயிரம் எழுத்தல்ல, நூறு எழுத்தல்ல, பத்து எழுத்தல்ல, ஐந்து எழுத்துத்தானே? அதை உச்சரிக்க ஏன் கஷ்டம்? தினமும் உச்சரியுங்கள். நமசிவாய என்ற மந்திரத்தை உச்சரித்தால் உங்களுக்குச் சகல பேறுகளும் கிடைக்கும்.

எமக்குக் கஷ்டங்கள், துன்பங்கள், ஏமாற்றங்கள் வரும்போது இறைவனுடைய திருவைந்தெழுத்து மந்திரத்தைத் தவறாது ஓதினால், அவை யாவும் பறந்தோடி விடும். மாணிக்கவாசகரைக் கண்டவர்கள், "நீங்கள் நல்ல தவம் செய்திருக்கிறீர்கள். அதுதான் இறைவனின் திருவாக்குப் பெற்றிருக்கிறீர்கள்" என்று சொல்வார்கள். அதற்கு மாணிக்கவாசகர், "நான் ஒரு தவமும் செய்யவில்லை. நான் செய்தது மிக எளிதானது. அதாவது, நமசிவாய எனும் மந்திரத்தை உச்சரித்துப் பேறு பெற்றேன். அப்போது தேனினும் அமுதத்தினும் இனி தாகத் தித்திக்கும் உணர்ச்சி பெற்றேன்" என்பார். "சிவபெருமான் தானாக ஓடோடி வந்து என்னுள்ளே குடிகொண்டு திருவருள் புரிந்ததால் எல்லாவற்றையும் ஒழித்தேன். பிறவிப்பிணி நீங்கியது" என்று பின்வரும் பாடல்மூலம் மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

*நானேயோ தவம் செய்தேன்? சிவாயநம எனப் பெற்றேன்*
*தேன்ஆய் இன் அமுதமும் ஆய் தித்திக்கும் சிவபெருமான்*
*தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்*
*ஊனாரும் உயிர் வாழ்க்கை ஒறுத்து அன்றே வெறுத்திடவே!*

சிவாயநம மந்திரத்தை ஓதுவதையே தவமாகக் கொண்டு ஓதினார் மாணிக்கவாசகர். திருவைந்தெழுத்தைப் பற்றி மேலே காட்டிய நான்கு பாடல்களும், திருவாசகத்தில் உள்ளவை.

*உன்னால் முடியும் என்று நம்பு. முயற்சிக்கும் அனைத்திலும் வெற்றியே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதனைத் தொடங்கும்போதும் நமசிவாய என்ற மந்திரத்தைக் கூறியே தொடங்க வேண்டும். அதனால்த்தான் திருவாசகத்தை மாணிக்க வாசகர் "நமசிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க" என்று தொடங்கியிருக்கிறார்.

திருப்பெருந்துறையில் இறைவன் குருவாக வந்து, சிவாயநம என்றே வாதவூரருக்கு உபதேசித்தார் என்பர். திருவாசகத்தில் ஐந்து திருவெழுத்தையும் ஐந்து இடங்களில் அழகுற அமைத்து மாணிக்கவாசகர் அஞ்சலி தந்திருக்கிறார் என்பதைக் கண்டு உள்ளம் களிக்கிறது.

ஓம் நமசிவாய மந்திரம் மகாசக்தி வாய்ந்த மந்திரம். மனதார உணர்ந்து அதை ஒரு நாளைக்கு பதினொரு தடவைகள் ஓதினால், அந்தநாள் முழுவதும் மகிழ்ச்சிகரமான நாளாக இருக்கும். நித்திரைக்கு முன் சொன்னால், இது நித்திரையில் பரவி நின்று உங்கள் சக்தியை வளர்க்கும். குளிக்கும்போது சொன்னால் புனித கங்கையில் நீராடிய புனித பலன் கிடைக்கும். உணவு உண்பதற்கு முன் சொன்னால், உங்கள் உணவு உடலைத் தூய்மையாக வைத்திருக்கும். தாய் குழந்தைக்குப் பால் கொடுக்கும்போது சொன்னால், அது குழந்தைக்கு ஞானப்பாலாக இருக்கும். ஏதாவது நல்ல விடயத்தைச் செய்வதற்கு முன் சொன்னால், அவ்விடயம் மிகவும் சிறந்த முறையில் நலம்பெறும். இப்படி எவ்வகையான வேலைகளைச் செய்யும் முன்பும் திருவைந்தெழுத்தைச் சொல்லிச் செய்தால், அவ் வேலைகள் யாவிலும் பூரண வெற்றி கிட்டும்.

---

இன்றைய காலகட்டத்தில் இறைவழிபாட்டைப் பற்றிய உண்மைகளைப் புரியாமல் பலபேர் வழிபாடு என்பதை ஒரு வியாபாரமாகக் கருதி நடந்துகொள்கிறார்கள். அதாவது இறைவனுக்கு அதைத் தருகிறேன் இதைத் தருகிறேன் என்றெல்லாம் வேண்டி தாங்கள் நினைத்து நடக்கவேண்டுமென்று பரஸ்பரம் வியாபாரம் செய்வதாகிவிட்டது வழிபாடு. தான தருமங்கள் செய்வதாக நினைத்து தப்பும் தவறுமாக ஏதாவது செய்துவிட்டு, தாங்கள் நினைத்தது நிறைவேறவில்லை என்றால் இறைவன்மீதும் கோபப்படுகிறார்கள். இதற்குக் காரணம் சரியான வழிகாட்டலும் இறைவனைப்பற்றிச் சரியான புரிதலும் இல்லாததுதான். ஒன்றை மட்டும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். எம்முடைய வேண்டுதல் நாம் கேட்ட மாத்திரத்திலே பலித்தது என்றால், இறைவன் எமது இறை நம்பிக்கையை மேலும் அதிகரிக்கிறார் என்று அர்த்தம். எங்கள் வேண்டுதல் நிறைவேறத் தாமதமானால், எங்களது பொறுமை உணர்வை இறைவன் அதிகரிக்கச் செய்கிறார் என்று அர்த்தம். அடுத்து வருவதுதான் மிக முக்கியமானது. அதாவது நாங்கள் நினைத்தது நடக்கவில்லை என்றால், அந்த விடயத்தை தன்னுடைய உதவியின்றி நம்மால் சமாளிக்க முடியுமென்று அவர் நம்புகிறார். எப்படி என்கிறீர்களா? எமது குழந்தைகள் கூட சில சமயம் தங்கள் பக்கத்திலிருக்கும் ஒரு பொருளை எடுப்பதற்கும் நம்மை அழைப்பார்கள். அப்போதெல்லாம் "உன்னால் எடுக்க முடியும்தானே, எதற்காக என்னை அழைக்கிறாய்" என்று கூறி பிள்ளையின் வேண்டுகோளை நாம் அலட்சியம் செய்து விடுவோமல்லவா? அதுதான் இறைவனது நிலையும்.

மந்திரத்தன்மை இல்லாத எழுத்தும், மருந்துக்குப் பயன்படாத வேரும், ஒன்றுக்கும் தகுதியில்லாத மனிதனும் உலகில் இல்லை. தகுதி உணர்ந்து அவற்றைப் பயன்படுத்துபவனே இறைவனை உணர்ந்தவன். அதனால் மனிதன் எதற்கும் அறிவைப் பயன்படுத்த வேண்டும்.

*எதிர்காலம் உள்ளங்கை ரேகையில் இல்லை. அது உன் உள்ளத்தில் உள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 43

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 பால்குடித்து வளர்ந்ததனால் பால்போலக் குணமிராது
தேன்குடித்து வளர்ந்ததனால் தேன்போலக் குரலிராது
வான்கொடுத்த நீர்குடித்து வையத்தில் வளர்ந்தாலும்
தான்குடிக்கும் நல்லறிவே குரலோடு குணந்தருமாம்.

02 இறப்போடு எல்லாமே முடிவதாக எண்ணிடாதீர்
இறப்பிற்குப் பின்னால்தான் சிறப்புண்டு அறிந்திடுவீர்
அருவமாய் இருந்துபின்னர் உருவமாகும் இறைபோல
உருவமாய் இருந்துபின்னர் அருவமாதல் இறப்பாகும்.

03 இருக்கின்ற போதில்நீர் இயற்றுகின்ற கருமம்தான்
இறப்பிற்குப் பின்னாலும் இறவாது இங்கிருக்கும்
பிறப்பிற்குப் போவதற்காய் இறக்கின்ற நிலைவருமுன்
இறவாது இங்கிருக்கச்சில நற்கருமம் ஆற்றிடுவீர்.

04 இறைவன் உமக்கென்று தருவதைநீர் ஏற்றிடுவீர்
நிறைவான திறமையொன்றும் உமக்கிருப்பின் ஏற்றிடுவீர்
மறைவாகச் சலுகையென்று உமக்கேதும் கிடைத்துவிட்டால்
மற்றவர்க்கு இலாததொன்றை நீரேற்றல் தவறாகும்.

05 உங்களை நீங்களே உணராத வரைக்கும்
திங்களைச் சூடியோனை நீருணர முடியாது
அங்கங்கள் எங்குமே அவனாட்சி உண்டென்று
தங்களை உணர்வோர்க்கே இறையுணர்வு தோன்றுமாம்

06 மனிதர்கள் முகம்பார்த்தே கருமங்கள் செய்வர்
இனிதான இறைவனோ மனம்பார்த்தே அதைச்செய்வான்
புனிதராய் மனிதரும் மனம்பார்க்க முற்பட்டால்
கனிவான மனத்திலிறை முகம்காட்டி நிற்பான்.

*தன்னில் தானே மகிழ்பவனை தீமையான ஆயுதங்கள் தொடுவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 இறைவனைத் தேடிநாம் செல்கின்ற பயணத்தை
நிறைவாக இறைவனைக் காண்பதில் முடித்திட
குறைவிலாச் செல்வமே கண்டால் கேட்பதென்ற
மறைவான எண்ணத்தை நீக்கினால் நிறைவேறும்.

08 வயதுகள் போவதால் இறப்பெம்மைத் தழுவுமென்று
மனத்தாலும் செயலாலும் விரக்தியுற்று நலியாதீர்
உயர்பிறப்பு ஒன்றிலே பிறப்பதற்காய் இறந்திடலாம்
இயன்றவரை இறப்புவரை நல்வழியே நடந்திடுவீர்.

09 இயலாமை உமைநன்றாய் இறுக்கமாகப் பற்றுதென்றால்
இணையில்லா இறையும்மை நெருங்குதென்றே அர்த்தமாகும்
இயலாமை வந்ததற்காய் இறைவன்மேல் வெறுப்புற்று
மேலான அவனருளைக் கைநழுவ விட்டிடாதீர்.

10 கெட்டவரும் கடவுள்மேல் நம்பிக்கை அற்றவரும்
தொட்டதெலாம் துலங்கிடவே வாழ்கின்றார் என்றிராதீர்
இட்டதை இறைவனிங்கே இயன்றவரை பறிக்கமாட்டான்
பட்டபின்னர் பரம்பரைக்கே பலாபலனை அவன்கொடுப்பான்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும்**
**மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்**
**பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர்**
**கீழே உள்ள முகவரியுடன்**
**தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர, வேறு யாராலும் தடுக்கமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| க. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1புட்டி பருப்பு |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 20000. 00 |
| இ. சிவராஜா | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| A. விக்னேஸ்வரன் | காரைநகர் | 1000. 00 |
| க. ஜெயப்பிரதாப் | கனடா | 1000. 00 |
| S. சிந்துப்பிரியா | லண்டன் | 2000. 00 |
| வி. ராசையா | வதிரி | 2000. 00 |
| ஸ்ரீ. வனிதா | புன்னாலைக்கட்டுவன் | 5000. 00 |
| பத்மாவதி (அக்ரி குலோஸ்) | ஊரிக்காடு | 10000. 00 |
| த. சரவணன் | தெகிவளை 25k பருப்பு, தேங்காய், | 25k அரிசி |
| வை. கணபதிப்பிள்ளை | புலோலி | 10000. 00 |
| ர. பொன்னையா | அச்சுவேலி | 2000. 00 |
| பா. செல்வகுமார் | பிரான்ஸ் | 10000. 00 |
| ச. குணபூசனியம்மா | வத்திராஜன் | 10000. 00 |
| திரு சண்முகநாதமுதலி மூலம் ப. அக்சரா | லண்டன் | 1500. 00 |
| G. அனுராஜ் | வவுனியா | 5000. 00 |
| திருமதி சு. விஜயகுமார் | இருபாலை | 10000. 00 |
| சு. சுரேந்திரரட்ணம் | இருபாலை | 5000. 00 |
| க. கமலாதேவி | அல்வாய் | 500. 00 |
| ரா. ஓவியா | யாழ்ப்பாணம் | 20000. 00 |
| வே. ஆயுஷ்மான் நினைவாக | அல்வாய் | 10000. 00 |
| K. பார்த்தீபன், K. துளசிகரன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| த. சிவசுப்பிரமணியம் | சங்கானை | 1000. 00 |
| அ. கவிசாந் | உடுப்பிட்டி | 5000. 00 |
| தெ. லதானி குடும்பம் | கனடா (கெருடாவில்) | 27000. 00 |
| க. சிவசங்கரநாதன் | சரசாலை | 500. 00 |
| பு. கவிராஜ் | கொழும்பு | 3000. 00 |
| S. தயானா | ஜேர்மனி | 1000. 00 |
| லோகேஸ்வரி நினைவாக | ஜேர்மனி | 1000. 00 |

*பொறுமையின் வழியே நீ முயற்சி செய்தால் இழந்தது எல்லாம் நிச்சயம் கிடைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| T. தீபா | ஜேர்மனி | 500. 00 |
| ஜெ. ரிஷிகேசன் | பருத்தித்துறை | 5000. 00 |
| வே. சபரீஸ் | மீசாலை | 500. 00 |
| S. கணேசதாஸ் | லண்டன் | 1000. 00 |
| S. செல்வராஜா | கனடா | 2000. 00 |
| பொன்னம்மா சின்னையா | கரணவாய் | 4500. 00 |
| யதுஷிகா | இணுவில் | 25k அரிசி |
| Dr பிரதீபன் | உரும்பராய் | 2000. 00 |
| இ. விக்னேஸ்வரன் | நாவலப்பிட்டி 1மூடை அரிசி | 5000. 00 |
| திரு சிவசோதிராஜா | கனடா | 100 டொலர் |
| T. சஞ்சீவன் | கல்வியங்காடு | 1மூடை நெல் |
| சு. ஞானேஸ்வரி | துன்னாலை | 5000. 00 |
| பொ. பேரின்பநாயகம் | திருநெல்வேலி | 5000. 00 |
| யா. அக்ஷயன் | திருநெல்வேலி | 1000. 00 |
| ஜே. தர்சியா | திக்கம் | 1மூடை அரிசி |
| ரஞ்சினி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| S. வள்ளியம்மை | கனடா | 10000. 00 |
| சு. நாகேந்திரராஜா | கனடா | 3000. 00 |
| சி. விஸ்ணுஷன் | அச்சுவேலி | 10000. 00 |
| வ. பாலச்சந்திரன் | நீர்வேலி | 500. 00 |
| நா. திலோஜன் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| அ. நிமலன் | புத்தூர் | 2000. 00 |
| மா. குமாரசிங்கம் | கனடா | 5000. 00 |
| த. சமிந்த | கொழும்பு | 10k அரிசி |
| உ. ஆதங்கி | அளவெட்டி 3புட்டி அரிசி | 2000. 00 |
| மு. கிருஷாந்தி | திருநெல்வேலி | 1000. 00 |
| ப. சிந்துஜா | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| S. செந்தில்வேல்ராஜ் | கனடா | 5000. 00 |
| S. பவானந்தம் | லண்டன் | 5000. 00 |
| இந்திரா ராமநாதன் | கனடா (நவிண்டில்) | 5000. 00 |
| நவேந்திரன் கலைச்செல்வி குடும்பம் | இணுவில் | 1000. 00 |
| வி. நடராசா | சரசாலை | 1000. 00 |
| விஸ்வநாதன் வடிவேலு (கனடா) | நாச்சிமார்கோவிலடி | 5000. 00 |
| பிரதீபன், அபிராமி, அனன்யா | லண்டன் | 10000. 00 |
| நிமல் கல்யாணி | | 3000. 00 |

(தொடரும்...

நம்பிக்கை குறையும்போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரபத்திர காளியம்மன் ஆலயம் பற்றி...

– திரு பா. முருகானந்தன் அவர்கள் –

ஸ்ரீ வீரபத்திர காளியம்மன் ஆலயம் அலைகடல்கள் தாலாட்டும் உடப்பு மத்தியில் அறுவாயில் அமைக்கப்பட்டுள்ள பாலம் அருகில் அமைந்துள்ளது. முன்பு எருக்கலைக் காடாக வளர்ந்து கிடந்த இக் கிராமத்தில் மக்களுக்கு ஏற்பட்ட கொடிய கொள்ளை நோய் "காலரா" பரவி பலர் உயிர் துறந்தனர். அவ்வேளையில் கொத்தக் கிழவன் என்னும் அம்பாள் அடியார் ஒருவர் காளி உருவேறி மக்களை ஊரைவிட்டுச் செல்லவேண்டாம் என்றும் காளியின் கருணையினால் மக்கள் காப்பாற்றப்படுவார்கள் என்றும் காளிகாதேவிக்கு பச்சை இலையால் குடில் அமைத்து மண் குடத்தில் கடல் நீர் ஊற்றி வேப்பிலை கும்பம் வைத்து கடல் நீரை எண்ணையாகக் கொண்டு விளக்கேற்றும்படி கூற மக்கள் அவ்விதமே செய்தனர்.

பின்னர் அவ் வேப்பிலை பூத்து காய்த்ததாகவும், கடல் நீரில் விளக்கெரிந்ததாகவும் வழிவழியாக மக்கள் கூறி வருகின்றனர். இன்றும் இவ்வாறே கடல் நீரில் கும்பம் வைத்து விளக்கு ஏற்றுவது சிறப்பம்சமாகும். புரட்டாதி மாதத்தில் கும்பம் வைத்து பத்து நாட்கள் விசேட பூசைகளுடன் செய்கின்றனர். 8ம் நாள் காவல்காரராக காப்பு கட்டியவருக்கும், பக்தர்களுக்கும் நேர்த்திகடன் செய்தலும் இரவு அர்த்த ராத்திரி கரகமும் கும்மி அடித்தலும், 9ம் நாள் பிரதான காப்பு கட்டிய பூசகரினால் அக்கினி சட்டி எடுத்தல் பிச்சைக்கரகம் எடுத்தல், (அன்னதானத்திற்குரிய பொருட்கள் சேர்த்தல்) 10ம் நாள் ஊர் காவல் செய்தல், பொங்கல் வைத்தல், மஞ்சள் நீராடல், விசேட பக்தர்களின் அரிச்சனை பூசைகள், அன்னதானம் வழங்குதல், குழந்தைகள் இல்லாதவர்களுக்கு காயம் எனும் மூலிகை வழங்கி உண்ணக் கொடுத்து வம்சம் தளைக்க அருள் கொடுப்பதும் சிறப்பம்சமாகும். பிற்பகல் கும்பம் கடலில் சொரிதலுடன் விழா நிறைவு பெறுகின்றது.

1878ஆம் ஆண்டு இக்கோயில் கல்லால் அமைக்கப்பட்டது. 1898ம் ஆண்டு அம்மன் விக்கிரகமும் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு பிரதிட்சை செய்யப்பட்டது. 1920ஆம் ஆண்டு புனருத்தாபனமும் 1922இல் கும்பாபிசேகமும் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1950, 1983, 1998, 2012, 2020களில் கும்பாபிசேகம் செய்யப்பட்டுள்ளது. கரையோரம் வாழும் மக்களை கரை சேர்க்கும் காளியாக அம்மன் போற்றப்படுகின்றாள்.

## ஸ்ரீ வீரபத்திர காளியம்மன் பாடல்

கரையோரம் வாழும் மக்களை
கரை சேர்க்கும் காளியம்மா
உடப்பங்கரை வாழும்
வீரபத்திர காளியம்மா!

(கரையோரம்)

அம்மை அப்பன் சேர்ந்த வடிவாய்
அருள் ஆட்சி புரிபவளே
அன்னையே உன்னை அன்புடனே
வணங்குகின்றேன் அருள் புரிவாய் அம்மா

(கரையோரம்)

*உனது ஒவ்வொரு தவறும் உன் எதிரியை உத்தமனாக்கிவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு கொள்ளை நோய் வாந்திபேதி
வந்திடவே நோய் தீர்க்க
கொத்தக் கிழவனாய்
வரம் தர பச்சை ஓலை குடில் அமைத்து
வழிபடவே எங்களை காத்தவளே அம்மா
(கரையோரம்)

வேள்வி விழாவில் கடல் நீரில்
விளக்கேற்றி வேப்பிலையில் கும்பமிட
விளக்கும் சுடர் விட்டு எரிய வேப்பிலையும்
கும்பத்திலே பூத்து காய்க்க செய்தாய் அம்மா
(கரையோரம்)

உன் விழா தனிலே பொங்கல் செய்தோம் அம்மா
குழந்தை பாக்கியம் தரும் காயம்
எனும் மூலிகை உண்ணத்தந்து
வம்சம் தளைக்கச் செய்தாய் அம்மா
(கரையோரம்)

---

மகாபாரதத்திலே சூதாட்டத்தில் தோல்வியுறச் செய்து, தர்மம் காட்டுக்கு விரட்டப்பட்டது. பன்னிரண்டு ஆண்டுகள் தர்மத்துக்கு வனவாசம். அத்துடன் யார் கண்ணிலும் படாமல் ஓராண்டு வசிக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தமும் தண்டனையில் சேர்ந்தது. தர்மமும் அதர்மமும் நேரடியாக மோதும் சூழலை மகாபாரதத்தில் காணலாம். அதர்மத்துக்குப் பின்பலமாக இருந்து உதவியவர் நூறுபேர். தர்மத்துக்கு துணையிருந்தவர்கள் ஐந்துபேர் மட்டுமே. கண்ணன் பார்வையாளனாக இருந்தாலும் துவண்டு விழும் தர்மத்துக்கு அவ்வப்போது முட்டுக்கொடுப்பான். மிகக் கடுமையான சோதனையில் தர்மம் தவித்தது. அதை உணர்ந்த கிருஷ்ணரும் அதைத் தடவிக்கொடுத்தார். அதர்மத்தின் தாக்கத்தால் தர்மம் நிலைகுலைந்தாலும் கடைசியில் தர்மம் வெல்லும் என்ற உண்மையை எடுத்துக்காட்ட மகாபாரதத்தை கருவியாகப் பயன்படுத்தினான் கண்ணன்.

உலகத்தில் நற்காரியங்களைப் போதிப்பவர்களுக்கு, உலகம் கூலி கொடுப்பதில் ஒரு வித்தியாசமான பாணியைத்தான் கடைப்பிடித்திருக்கிறது. இயேசுவுக்குச் சிலுவையைத் தந்தது. சாக்கிரட்டீசுக்கு விஷம் கொடுத்தது. மகாத்மா காந்தியின் உயிரைப் பறித்தது. என்னதான் சோதனை வந்தாலும் தர்மம் அழியாது. அப்படியான தர்மவான்களின் தலை நரைக்கலாம், உடல்கள் அழுகிப் போகலாம். ஆனாலும் அவர்களுடைய புகழ் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

*முதல் தவறு இரண்டாவது தவறுக்கு இருக்கையைத் தயார் செய்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமம் சமுதாயப் பணிகள் - 2020

– தொகுப்பு: சந்நிதியான் ஆச்சிரமம் –

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகள் பல திறப்பட்டவை. நித்திய அன்னப்பணியானது ஆச்சிரமத்தின் உயிர் மூச்சாக இருந்தபோதும், மாணவர்களின் கல்விப்பணி, சமுதாய மக்களிடையே ஏற்படுகின்ற பாதிப்புக்களுக்குமான நிவாரணப்பணி, இயற்கை அழிவுகளினால் ஏற்படும் அனர்த்தங்களுக்கான உடனடி உதவிப்பணி என விரிந்து பரந்து சென்றிருப்பதை ஞானச்சுடரின் வாசகர்களும், ஆச்சிரமத்தை நேசிக்கும் நல்ல உள்ளங்களும் நன்கறிவர். ஆனாலும் "மருத்துவப்பணி" மட்டும் தற்கால சூழ்நிலையினை அனுசரித்து தற்காலிகமாக நிறுத்தப் பட்டிருந்தபோதும், சூழ்நிலை மாற்றத்தினை அனுசரித்து மீண்டும் ஆரம்பிக்கப்படும். மலையகம் நோக்கிய ஆச்சிரமத்தின் பார்வையானது படிப்படியாக கிளை பரப்பி விரிந்து செல்கின்றது.

தனிக் குடும்பங்களினதும், கோவில்போன்ற பொது நிறுவனங்களினதும், படிப்பகங்கள் போன்ற சமூக அமைப்புக்களதும் உதவிகோரி வரும் விண்ணப்பங்களும் கோரிக்கைகளும் மிக அதிகம். அவற்றின் உண்மைத் தன்மைகளை நேரிலும், கிராம அலுவலர் போன்ற விபரமறிந்தோர் மூலமாகவும் ஆய்ந்தறிந்து உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

ஆச்சிரமப் பணிகளை நன்கறிந்து, நெஞ்சில் நிறுத்தி, உதவிகள் புரிந்துவரும் அன்பர்கள் இம் மண்ணிலும், புலத்திலும் பலபேர் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் முருகன் கருணை துணை நிற்க ஆச்சிரமம் பிரார்த்திக்கின்றது. கருமங்களைத் திட்டமிடும் ஆச்சிரம சுவாமிகளின் அயரா முயற்சியும் - சிந்தனையும் - செயற்பாடுகளும் ஆச்சிரம பணிகளைச் சுலபமாக்கி நடைமுறைப்படுத்தி வருகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக எந்நிதியும் தரும் சந்நிதி வேலவனின் திருவருட்கடாட்சமே சந்நிதியான் ஆச்சிரமத்தின் அனைத்துப் பணிகளுக்கும் ஊன்றுகோலாக உள்ளது. அவனை நாம் அனைவரும் கைகூப்பித் தொழுவோம்.

**மாதாந்த கொடுப்பனவுகள்**

(01) நாட்டின் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் வெவ்வேறு துறைகளிலும் கல்வி கற்று வரும் 160 மாணவர்களுக்கான உதவித்தொகை மாதம் தவறாது - அவரவர் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படுகிறது.

(02) வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்ட 90 குடும்பங்களுக்கு ஒவ்வொரு மாதத்தினதும் கடைசி வெள்ளியன்று மாலையில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

*அறிவும், ஒழுக்கமும் வண்டியின் இரு சக்கரங்கள் மாதிரி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்கும் மேலாக கடந்த ஆண்டினில் மேற்கொள்ளப்பட்ட சமுதாயப் பணிகள் தேதி வாரியாக கீழே தரப்பட்டுள்ளன.

***08.01.2020 புதன்:***

அம்பாறை இறக்காமம் திருவள்ளுவர் அறநெறிப் பாடசாலையின் 57 மாணவர் களுக்கான கற்றல் உபகரணங்களும், 35 புத்தகப் பைகளும் நேரில் சென்று வழங்கப்பட்டன.

***14.01.2020 செவ்வாய்:***

ஹெக்கராவ - நேகம என்னும் இடத்தில் உள்ள சேதமடைந்திருந்த பிள்ளையார் ஆலயம் புனரமைக்கப்பட்டபோது, சந்நிதியான் ஆச்சிரமத்தின் பொருட் செலவில் பிள்ளையார் மூலவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 10.10.2019இல் நடந்தேறிய கும்பாபிஷேகத்தின் பின்னர், ஒவ்வொரு பௌர்ணமி நாளிலும் ஆச்சிரம சுவாமிகள் நேரில் சென்று அபிஷேகம் செய்வித்து பூஜை நிகழ்வுகளிலும் கலந்துகொள்வதை வழமைப்படுத்தி உள்ளார்.

***21.01.2020 செவ்வாய்:***

திருகோணமலை - உப்புவெளி 3ஆம் கட்டை சோலை பைரவர் ஆலய பாதயாத்திரைக் குழுவினரின் வழிச் செலவுக்காக ரூபா 25,000. 00 வங்கியில் இடப்பட்டது.

***31.01.2020 வெள்ளி:***

(ஞானச்சுடர் வெளியீட்டு நாள்)

(01) உடுப்பிட்டியைச் சேர்ந்த திரு எஸ். தாமோதரம் என்பவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

(02) பொலநறுவை சாரதா அறநெறிப் பாடசாலையில் தரம் 11இல் கல்வி கற்று வரும் செல்வி சௌந்தரராஜன் நிதுஜா எனும் மாணவிக்கு மடிக்கணனி வழங்கப்பட்டது.

***12.02.2020 புதன்:***

(01) முள்ளியவளை மேற்கு கனிஷ்ட வித்தியாலயம்
(02) சுதந்திரபுரம் தமிழ் வித்தியாலயம்
(03) ஆனந்தபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
(04) விஸ்வமடு - புன்னை நீராவியடி அம்பிகை வித்தியாலயம்

மேற்படி 04 பாடசாலைகளுக்கு 04 லெட்சம் பெறுமதியான குடிநீர் சுத்திகரிப்பு சாதனமும் - அதன் செயற்பாட்டிற்குரிய உபகரணங்களும் அந்தந்தப் பாடசாலைகளில் பொருத்தப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டது. இந்தச் செயற்பாட்டுக்கான நிதியுதவியானது, சந்நிதியான் ஆச்சிரமத்துடன் திருமதி கஜனி அவர்களாலும், U.K.இல் உள்ள திரு பொ. கமலாகரன் அவர்களின் உறவினர்களாலும் வழங்கப்பட்டது.

*நம் எதிர்காலத்தை நாமே உருவாக்குகிறோம். அதை விதி என்கிறோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*15.02.2020 சனி:*

பண்டாரவளை, லியங்காவளை, ப/ பலகலஎல்ல தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 117 மாணவர்கள், பதுளை - ஹலிஎல, ப/ உணுகல தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 112 மாணவர்களுக்குமாக ரூபா 105000. 00 (ஒரு லெட்சத்து ஐயாயிரம் ரூபா) பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அந்தந்த பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டது.

*06.03.2020 வெள்ளி:*

(01) அல்வாய் யா/ அம்பாள் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தீபராஜ் பிரபாஜினி எனும் மாணவிக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

(02) தொண்டைமானாறு - கெருடாவில் கிராமத்தில் வசித்துவரும் சுகிந்தன் ஜெயசாந்தி என்பவரின் தீப்பிடித்த வீட்டின் திருத்த வேலைகளுக்காக ரூபா 25,000. 00 வழங்கப்பட்டது.

*20.05.2020 புதன்:*

பருத்தித்துறை மந்திகை அரசினர் வைத்தியசாலை விடுதிகளுக்காக 10 மெத்தைகள் வழங்கப்பட்டன.

*08.06.2020 திங்கள்:*

மட்டக்களப்பு - சித்தாண்டி - இலுக்குபொத்தானையில் அமைந்துள்ள வேலோடு மலை முருகன் ஆலயத்தினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ரூபா 1,95,000. 00 (ஒரு லெட்சத்து தொண்ணூற்றையாயிரம் ரூபா) பெறுமதியான பிள்ளையார், முருகன் - வள்ளி - தெய்வானை விக்கிரகங்கள் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டது.

*03.07.2020 வெள்ளி:*

தொண்டைமானாறு - வல்லை வீதியில் வசிக்கும் திருமதி சந்திரிகா ஜென்சன்ராஜ் என்பவருக்கு, அவரது வீடு திருத்த வேலைகளுக்காக ரூபா 20,000. 00 வழங்கப்பட்டது.

*13.07.2020 திங்கள்:*

வவுனியா - கணேசபுரம் - கள்ளியமுறிப்பு வீதியில் வசித்துவரும் மாரி இராசையா என்பவருக்கு மூன்று சில்லு சைக்கிள் வண்டி நேரில் சென்று வழங்கப்பட்டது.

*24.07.2020 வெள்ளி:*

அச்சுவேலி - பத்தமேனியில் வசிக்கும் க. பரமேஸ்வரன் என்பவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

*முட்டாளைச் சமாளிக்க சுருக்கமான வழி மௌனமாக இருப்பதுதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*26.07.2020 ஞாயிறு:*

கிளிநொச்சி தேவைகளுக்குட்பட்டோர் வலையமைப்பினால் மலையாளபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள ஊனமுற்றோர் இல்லத்திற்கு ரூபா 75,000. 00 பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

வன்னேரிக்குளம் யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோருக்கு 1மூடை சீனி, 25kg பயறு வழங்கப்பட்டது.

*12.08.2020 புதன்:*

மட்டக்களப்பு தமிழ் பத்ததிப் பாடசாலையின் கட்டிட நிர்மாணத்திற்கென ரூபா 1,00,000. 00 (ஒரு லெட்சம்) வழங்கப்பட்டது.

அம்பாறை மாவட்டம், பாணமை கிராமத்தில் வசித்துவரும் தமிழ்க் குடும்பங்களின் வாழ்வாதார உதவியாக ரூபா 75,000. 00 வழங்கப்பட்டது.

*14.08.2020 வெள்ளி:*

யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய க.பொ.த. உயர்தர மாணவர் மன்ற விழாவிற்காக ரூபா 10,000. 00 வழங்கப்பட்டது.

*30.09.2020 புதன்:*

மன்னார் மாவட்டம், நானாட்டான் - அருகங்குன்று எனும் கிராமத்தில் வசித்துவரும் மக்களின் குடிநீர் கருதி குழாய் கிணறு அமைப்பதற்காக ரூபா 1,00,000. 00 (ஒரு லெட்சம்) நேரில் சென்று வழங்கப்பட்டது.

*08.12.2020 செவ்வாய்:*

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கொடிகாமம், நாவலடி கிராம மக்கள் 350 பேருக்கு அவர்களது இடைத்தங்கல் நிலையத்தில் வைத்து சமைத்த உணவுப் பொதிகள், ஆச்சிரம சுவாமிகளால் நேரில் சென்று வழங்கப்பட்டது.

*12.12.2020 சனி:*

குமுளமுனை, கரியநாகபடுவான் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள வெள்ளத் தினால் பாதிக்கப்பட்ட 45 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் நேரில் சென்று வழங்கப்பட்டது.

*16.12.2020 புதன்:*

முல்லைத்தீவு கல்வி வலயத்திலுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் விசேட சித்திபெற்ற 20 மாணவர்களுக்குக்கு ரூபா 2,50,000. 00 (ரூபா இரண்டு லெட்சத்து ஐம்பதாயிரம்) பெறுமதியான கற்றல் உபகரணங்களுடன் பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன. இந்தப் பரிசளிப்பு நிகழ்வானது, முல்லைத்தீவு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் திருமதி புவனராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

*ஆசையும் ஏக்கமும் செல்வத்தைச் சேர்க்காது. உழைப்பே செல்வத்தைத் தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீமானைப் போலிருந்து செகத்தினிலே வாழ்ந்திடலாம்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

ஆயிலிய நட்சத்திரம், மாதாமாதம் வரும்போது தவத்திரு யோகர் சுவாமிகளை உலகமானது கரங்குவித்து வழிபாடாற்றுகின்றது. இலங்கையிலும் அது சிறப்பாக அனுட்டிக்கப்படுகிறது. அவர் அடியவர்களுக்கு வரமீந்த கொழும்புத்துறை, சிவதொண்டன் நிலையம் மற்றும் செங்கலடி, திருகோணமலை, கிளிநொச்சி, நல்லூர், கொழும்பு, மாத்தளை, பேராதனை, கம்பளை, நாவலப்பிட்டி, மாவிட்டபுரம், சுன்னாகம், கீரிமலை ஆகிய இடங்களில் இவரைத் தரிசித்தபோது ஆயிரம் ஆயிரம் அடியார்கள் சீமான்களாகப் பேறு பெற்றனர்.

சிவனொளிபாத மலையிலே சூரியோதயக் காட்சியினைக் கண்டது முதல், சிவத்தோடு ஒன்றித்து, சிவப் பிரம்மத்தின் திருவருள் சுரக்கப் பெற்றார். தன்பாட்டிலேயே தனக்குள்ளிருக்கும் இறைவனோடு பேசத் தொடங்கினார். இவருக்குள் ஏதோவொரு தெய்வீக ஒளி பிரவாகிப்பதை உணர்ந்த இவரது தந்தையார் அம்பலவாணர் அவர்கள் இவரைத் தான் கடமைபுரிந்த மஸ்கெலியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கே அனுப்பி வைத்தார்.

## கடவுள் மனிதன்

இரணைமடுக் குளக் கட்டுமானப்பணி துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை, அதற்குப் பொறுப்பாக இருந்த பொறியியலாளரான பிறவுண் என்ற ஆங்கிலேயர் இவரது ஆங்கிலப் புலமையின் தேர்ச்சியைக் கண்டு தொழிலாளர்களிடையே சக வாழ்வினைத் தோற்றுவித்தார். அதுமட்டுமல்ல, கடமைகளுக்கப்பால் பிரார்த்தனையிலும், தியானத்திலும் ஈடுபட்டுக்கொள்வதை அவதானித்த பிறவுண் இவரையே ஒரு “கடவுள் மனிதன்” என அழைக்கலானார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கணக்கு வழக்கு எல்லா விடயங்களிலும் யோகநாதன் சித்திபெற்றதனால், இவருக்கு வீடு செல்வதற்கு விசேட அனுமதி வழங்கப்பட்டது. அவ்வேளைகளில் யோகநாதன் மாவிட்டபுரம், நல்லூர், கொழும்புத்துறை ஆகிய இடங்களுக்கு அடிக்கடி சென்று வருவதனை ஒரு ஒழுங்கு முறையாகக் கடைப்பிடித்து வந்தார். இதன் பிரகாரம் யோகரிடத்தே ஒரு உள்ளொளி பெருகுவதை பிறவுண் அவதானித்தார். “நீ ஒரு கடவுள் மனிதன்” என்றார்.

## ஆரடா நீ

தன்னுடைய வேலைகளில் நாட்டம் மெல்ல மெல்லக் குறையக் குறைய, நல்லூரில் நாட்டமும் நம்பிக்கையும், ஈர்ப்பும் அதிகரித்தது. கொழும்புத்துறை திருஞானசம்பந்தர், இராமலிங்கம் என்பவர்களோடு யோகநாதன், செல்லப்பரைத் தரிசிப்பதற்காக நல்லூர் தேரடிக்குச் சென்றனர். யோகநாதரைக் கண்ட செல்லப்பர் சீறிப் பாய்ந்தவராய்,

ஆரடா நீ!
தேரடா உள்!!
தீரடா பற்று!!! என்றார்.

*மனிதனின் இயற்கையான குணம் சிறப்பாகச் சிந்திப்பதாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கேட்ட யோகர் வியப்போடு மலைத்து நின்றார். நல்லதொரு சீடன் கிடைத்துவிட்ட காரணத்தினால் யோகரை உள்வாங்கினார்; ஆசீர்வதித்தார். அருகில் அமர்த்தினார். ஆற அமர நோக்கிப் பார்வையால் வசீகரப்படுத்தினார்; வாலாயப்படுத்தினார்.

"உன்னைத்தான் பார்த்திருந்தேன்
உனக்கே பட்டஞ் சூட்டப் போகின்றேன்.
வா! வா!"

என்று அருகிலமரச் செய்து, அருள் கலந்த அறிவுரைகளை அகம் மலரவும் புளகாங்கிதம் எய்தவும் தேனென உரைத்தார்.

யோகரிடம் ஏதாவதொரு மின்சாரம் பாய்ந்தாற்போல ஒரு ஒளிக்கற்றை ஊடுருவியது. ஒவ்வொரு மூச்சும் ஒவ்வொரு பாடலாகப் பிரவாகித்தது. அவை ஒவ்வொன்றும் எக்காலத்துக்கும் பொருந்துவனவாய் நற்சிந்தனையாய் மிளிர்கின்றன.

"ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரில்
பேசாதன வெல்லாம் பேசினான் - கூசாமல்
நின்றேன் நீ யாரடா வென்றே யதட்டினான்
அன்றே யான் பெற்றே னருள்"

"தன்னை யறியத் தவமுஞற்றும் மாதவரை
அன்னையைப் போல ஆதரிக்கும் ஆறுமுகன் சந்நிதியில்
தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தேரடாவுள் ளென்றான்" சிரித்து"

## குருநாதன்

எங்கள் குருநாதனான எழில்நல்லை வாசன், இங்கும் அங்கும் எங்கும் பிரகாசமானவன்! மங்களகரமான வாக்கியப் பிரசாதனாக, மாறாத மௌனனாக, தியானப் பிரவேசனாக என்னுள்ளே வாசஞ் செய்கின்ற மாட்சி அலாதியானதாக யோகர் பாடுகின்றார். வஞ்சம் பொறாமை கோபம் வைத்திடும் மாந்தர்க்கும் அஞ்சாதே என்று அருளை ஈந்திடும் சுதந்திரன்! அப்பேற்பட்ட குருநாதனான செல்லப்பனின் கஞ்ச மலர்ப் ப(ா)தத்தைக் கனவிலும் மறவாதிருப்போர்க்குப் பஞ்சாமிர்தம்போல் நெஞ்சில் பண்புடன் இனிப்பவனாகின்றான்.

## இரும்பு பொன்னாகியது

குருநாதனைக் கண்டு அவரது கர்ச்சனையும், அதட்டலும் யோகரின் மேனியில் பட்டபோது, யோகர் தெளிவுபெற்று, யோகர் சுவாமிகளானார். நாளடைவில் மெய்ப்பொருளான ஞானம் கைவரப்பெற்று அஞ்ஞானம் தீர்ந்து அகவொளி பாயும் சிவனொளி கொண்டார். இரும்பாயிருந்த தேகம் பொன்னாக மாறி கரும்பாகி யாவரையும் கவர்ந்தது. இத்தகு நிலையினை ஞானமுறுக்கு என்பர். தனது உடல் மொழியினால் திடமான நெஞ்சையும் உடனாகிக் கனியவும் பணியவும் வைத்திட வல்லவராகத் திகழ்ந்தார். பொன்னாக்கிய நான்கு மகாவாக்கியங்கள் அற்புதமே!

*யாருடைய குறைகளை எண்ணிவிட முடியுமோ அவரே உண்மையில் உயர்ந்த மனிதர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குரு பணிவும் பாட்டும்**

சுவாமிகள் குருவாக்கைத் தட்டாது, அவர் உபதேசித்த நான்கு மகா வாக்கியங்களையும் தாரக மந்திரமாகக் கொண்டு இந்த மண்ணுக்கு வரமீந்தார். தானும் வரமானார். இதோ அந்த முனி சொன்ன மொழி நான்கு:-

ஒரு பொல்லாப்பும் இல்லை
முழுதும் உண்மை
நாமறியோம்! ஆரறிவார்?
எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்.

இந்த மகாவாக்கியங்களைச் சீடனான யோகர்சுவாமிகளின் செவியில் கொட்டியபின் செல்லப்பா சுவாமிகள் வெறுங் கோதாயினர்.

இதேபோல, விவேகானந்தருக்கும் இராமகிருஷ்ணர் உபதேசங்களைக் கொட்டிய பின்னர் மிகவும் வறியவரைப் போலாகினார். இதுவும் ஒருவிதமான,

கொடுப்பதும் கொள்வதும்
கொய்தலும் கொழித்தலும்
எடுப்பதும் விடுவதும்
ஏற்பதும் நோற்பதுமாகும்!

இரண்டற்ற ஒன்றான அத்துவித உண்மைகளாக, நானே அவன். அவனே நான். ஒன்றில் இருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது. நாம் அனைவரும் சிவத்தின் அம்சம். அதை நாம் அடிக்கடி மறந்து போகின்றோம். உன்னை இறைவனுக்கு ஒப்புக்கொடுப்பாயானால், உனக்கு எந்நாளும் இன்பமேயன்றித் துன்பமில்லை. வண்டுகள் பூவைக் கிண்டித் தேனை உண்டு ஒன்றுமறியாமல் கிடப்பதுபோல, பக்தனும் சித்தமாகிய பூவைச் சிவத்தியானத்தால் கிண்டி ஆங்குவரும் ஆனந்தத்தேனை உண்டு, நன்மை தீமை, இன்ப துன்பமெதுவுமின்றி பேரானந்த வாழ்வில் திளைக்கின்றான்.

"பணிதலைக் கொள்ளல் பாரினி லின்பம்
பணிபயன் கருதாது ஆற்றிடலின்பம்
பணி முயன்றாற்றி முற்றுறலின்பம்
பணியெலாஞ் சிவபணி யாக்கிடலின்பம்"

யாவரும் சமமென வுணர்ந்திட லின்பம்
யாவரும் சகோதர ரென்பது மின்பம்
யாவரும் நலனுற வுழைத்திட லின்பம்
யாவரும் ஒன்றென ஒன்றிட லின்பமே.

எங்கும் மாதவர் மாமறை முழக்கம்
எங்குஞ் சான்றோர் அறவுரை முழக்கம்
எங்குந் தொண்டர் சுதந்திர முழக்கெனில்
பொங்கும் இன்பம் புவிமிசைச் சிறந்தே.

அந்த நாளிலேயே அதாவது 1948 மலர் 12 இல் சுவாமிகள் பாடியுள்ளார்.

*இடைவிடாத முயற்சியும், எப்போதும் மலர்ந்த முகமும் அறிவின் அறிகுறிகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேரடி

நல்லூர்த் தேரடியிலேதான் இவ்வுலகின் பேரின்பம் நிறைந்திருக்கின்றது. அதிலே ஒரு ஈர்ப்புச்சக்தி எல்லோரையும் கவர்ந்து இழுக்கின்றது. செல்லப்பரும் யோகரும் முருகனோடு கலந்து இருந்து விளையாடிய அற்புத பீடம் அது. எனவேதான் அடியார்கள் தேரடியில் இருந்து வரம் பெறுவதுண்டு.

ஆரறிவாரென அடிக்கடி ஓதும்
பேரறிவாளன் பேர் செல்லப்பன்
பாரறியாத பயித்தியக்காரன்
தேரடிப் படியில் தினமுமிருப்பான்.

தேரடியில் இருக்கும் சுகத்திற்கு ஈடிணை எதுவுமில்லை. நலமறியமாட்டாமல் நான் என்று சொல்லிப் பலபேசும் பாவீகாள்! இந்நிலவுலகில் நல்லூரெனும் பதியை நாடித் தெரிசித்தால் பல்லூழி வாழலாம் பாரீர்!

## வில்லங்கம் சுகமாகும்

வில்லங்கம் வருவது சுகத்திற்கேயாகும். சண்டையும் சமாதானமும், கூடுதலும் பிரிதலும், இன்பமும் துன்பமும், ஆணும் பெண்ணும், பிறப்பும் இறப்பும் யாவுமே உயிருக்கு வேண்டிய உணவுகளே! அது உணர்வுகளுமாகும்.

தானே வளர்த்த பசுமாடு சுவாமிகளைக் கண்டு துள்ளிக் குதித்து விளையாடியபோது சுவாமிகள் நோதல்பட்டார். வைத்தியமனையிலே அனுமதிக்கப்பட்டார். அன்பர் திருநாவுக்கரசர் கண்ணும் கருத்துமாக சுவாமிகளைப் பராமரித்தார்.

இது ஆண்டவன் தந்த வரப்பிரசாதம்! நோவும் எனக்கல்ல! நோயும் எனக்கல்ல! இரண்டுமே இந்த நிலையில்லா உடலுக்கேயாகும்.

நீ உடம்பன்று.
நீ மனமன்று.
நீ புத்தியன்று
நீ சித்தமன்று
நீ ஆத்மா.
ஆத்மா ஒருநாளும் அழிவதில்லை
ஆத்மா என்பது அவனே
அவனே நான். நானே அவன்.

ஆனால் நீ கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. அதாவது நீ தருமநெறியில் பிசகாதே. சிவன் சொத்தாக ஒவ்வொரு உயிரையும் போற்றி நடந்துகொள். எனவே உனக்கு எதிரியென்று எவரும் முன்வரமாட்டார்கள். இப்போ நீ ஒரு தூய ஆத்மா. சீவன் சிவனென்னும் தெளிவு உண்டாகும்.

---

**புத்தர் ஞானம் பெற்றபோது யாரோ அவரிடம் கேட்டார்கள். "உங்களுக்கு என்ன கிடைத்தது?" என்று. புத்தர் சிரித்தபடி சொன்னார்: "நான் எதையும் பெறவில்லை. நிறையவே இழந்தேன். என்னுடைய எல்லா அறியாமைகளையும், மாயைகளையும், கனவுகளையும் இழந்துவிட்டேன்" என்று.**

*தன் துன்பத்திலும் பிறர் நலனை நினைப்பவரே நல்லோர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவாயிரம் ஆண்டுகள் உயிர் வாழ முடியும்.

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

திருமந்திரம் அருளிச்செய்த திருமூல தேவ நாயனார், திருவாவடுதுறைத் திருத் தலத்தின் மேலை வீதியில் உள்ள தலவிருட்ச மாகிய படர் அரச மரத்தின் கீழ் அமர்ந்து, மூவாயிரம் ஆண்டுகள் அங்கு நிட்டைகூடி, தவநிலைபெற்று, ஆண்டுக்கொரு திருமந்திர மாக மூவாயிரம் திருமந்திரங்கள் பாடியருளி உலகினர்க்கு அளித்துள்ளார். இத் தெய்வீக நிகழ்வு சிவபெருமானின் திருவருளால் நிகழ்ந் தமை உணரத்தக்கது. இவ்வாறு தாம் மூவா யிரம் ஆண்டுகள் எவ்விதம் உயிர் வாழ்ந்தார் என்பதை விளக்குமுகமாக அவர் அருளிய திருமந்திரங்கள் அதன் அகச் சான்றாக விளங்கு கின்றன. அவர் காட்டிய வழியை மேற்கொள் வோர் தமது ஆயுள்காலம் நீடிக்கப்பெற்று நீண்டகாலம் வாழ்வர் என்பதை இறை வாக் காக இங்கு கூறமுடியும்.

"காயமே இது பொய்"- எனக் கூறும் பல சித்தர்கள்போல திருமூலரும் "உடம் பினை முன்னர் இழுக்கென்று"- நினைத்திருந்த திருமூலர், பின்னர் உடம்பினுள் இருக்கும் இறைவனை உணர்ந்தபின் "உடம்பை வளர்த் தேன் உயிர் வளர்த்தேனே" என்றுள்ளார். அத்துடன், "உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டதாகவும்" கூறியுள்ளார். ஆலயமாக உள்ள இந்த ஊன் உடம்பு பொலிவுற இருந் தாற்தான், உள்ளத்தில் இறைவன் கோயில் கொள்வான். சாதாரண மக்களும் இவ்வுலகில் நீடு நல்வாழ்வு பெறத் திருமூலர் கூறியுள்ள உபாயங்கள் பலவாம். திருமூலர் தாம் மூவா யிரம் ஆண்டு காலம் வாழ்ந்துகாட்டியுள்ளார். அவர் அருளிய திருமந்திரங்கள் நிரம்பிய அனுபவக் கருத்துக்களைக் கொண்டு விளங்கு கின்றன.

"பிராணாயாமம்" என்பது பிராண னைக் கட்டுப்படுத்துதல் என்பதாம். யோக நெறியின் சிறப்பான ஓர் உறுப்பாகப் பிராணா யாமம் கூறப்பட்டுள்ளது. பிராணாயாமம் என் பது பிராணவாயுவை மூக்குத் துவாரமாகிய இடப்பக்க வழியே உள் எடுத்து, பின்னர் அவ்வாயுவை உள்ளே கும்பகப்படுத்தி, பின்னர் அதனை வல மூக்குத் துவார வழியே வெளிவிடும் ஓர் சுவாசச் செயற்பாடாகும். எமது சாதாரண மூச்சின் செயற்பாடு தினமும் நடைபெற்ற வண்ணமுள்ளது. இதனைச் "சரவோட்டம்" என்பர். அதைவிட, சுவாசத்தின் ஒழுங்குபடுத்தப்பட்ட, நெறிப்படுத்தப்பட்ட ஓர் சுவாச முறையே "பிராணாயாமம்" ஆகும். மூச்சினை இட மூக்கு வழியே உள் எடுப் பதை "பூரகம்" என்னும் தத்துவ பதத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் சுவாசம் உடலின் உள் அடங்குவதை "கும்பகம்" என்னும் தத்துவப் பதம் குறிக்கும். அவற்றைப் போல சுவாசம் வெளிவிடும் செயலை "இரே சகம்" என தத்துவப்பதம் குறித்துள்ளது. நேர ஒழுங்கில் பூரகம் செய்ய எடுக்கும் நேரம் பதினாறு மாத்திரை பிரமாணமாகும். மாத்திரை என்பது கைநொடிப்பொழுது ஆகும். கும்பகம்

*அன்பின் வழியாகச் செய்யும் ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் பிரமாண அளவு நேரம் அறுபத்துநான்கு மாத்திரையளவு ஆகும். இரேசம் செய்யும் மாத்திரை அளவு முப்பத்திரண்டு மாத்திரையாகும். இவ்வளவுகள் நிர்ணயிக்கப்பட்டவை. எனவே இவற்றில் மாறுபாடு செய்தல கூடாது. இம் மூன்று செயல்களும் ஒருமுறை இந்த அளவுகளில் அமைவது ஒரு முழுநிலைப் பிராணாயாமம் ஆகும். இடநாசித் துவாரம் இடை கலை என்றும், வலது நாசித் துவாரம் பிங்கலை எனவும் வழங்கப்படும். இவை இரண்டு நாடிகளையும்விட "சுழுமுனை" என்னும் நடுநாடி என்பது, எமது முள்ளந்தண்டின் நடுப்பகுதி வழியே உச்சந்தலை வரை செல்கின்றது. இது நமது தலையின் உட்பகுதியில் இரு பிரிவு களாகப் பிரிந்து மூளையைச் சுற்றிவர அமைந்து தேவைக்கேற்றபடி செயல்படுகின்றமை இயல்பாகும். பிராணாயாமம் செய்யும்போது பொருத்தமான ஏதாவதொரு இருக்கை நிலை (ஆசனம்) யில் அமர்ந்து செய்தல் வேண்டும். இச் செயல்களை ஓர் குருவின் துணையோடு செய்தல் பொருத்தமுடையது.

பிராணாயாமம் செய்வோர் வாயுவை உள் இழுத்து தன் வசப்படுத்தல் வேண்டும். அதனால் உடல் பளிங்குபோன்று தூய்மையாக மாசு இன்றி அது முதுமையடைந்தாலும் இளமையுடன் உடல் விளங்கும்.

வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங் கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்.
-திருமந்திரம்.

இடதுபக்க நாசித் துவாரம் வழியே பூரகம் செய்தல் சிறப்புண்டாகும். அவ்வாறு செய்யில் உடம்பிற்கு ஒருபோதும் அழிவில்லை. இவ்வாறு பிழையின்றிச் செய்தால் எமது ஆயுள் நீடிக்கும்.

எங்கே இருக்கினும் பூரி இடத்திலே
அங்கே அது செய்யில் ஆக்கைக்கு அழிவில்லை.
-திருமந்திரம்.

உணவுக் குறைவால் அண்டமாகிய எமது தலையின் பகுதிகள் சுருக்கமடைந்து தளர்ந்து தோற்றமளித்தாலும் கன்னங்கள் குழி விழுந்தாலும், அதனால் உடலுக்கு அழிவு வந்துவிடாது. எமது அண்டகோசமான கரு உற்பத்திக்கான செயற்பாடுகள் நடைபெறாமல் இருப்பது எமது உடல் தளர்வடையாமலும் அழிவடையாமலும் இருப்பதற்கான காரணங்களில் ஒன்றாகின்றது.

"அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை"
-திருமந்திரம்.

எமது உடம்பு (காயம்) சித்தியடைந்து ஆயுள்நீடிக்கவும் பல வழிகள் உள்ளன. நமது உடம்பில் விளங்கும் சிவசக்தியோடு பிராணன் சேர்ந்திருப்பின், அதாவது அச் சத்தியை அடைக்கலம் என இருப்பார்க்கு இந்த உலகம் அறியும்படியாக அத்தகையோரின் நரை திரை மாறி அவர் இளமை பெற்றுத் திகழ்வார். இது சிவபெருமான் கூறிய ஆணை மொழியாகும். எனவே நிச்சயம் அது நடைபெறும் என்பது திண்ணம். இதன் மந்திரம் வருமாறு.

*மனிதர்களுக்கு எந்தப் பொருளின் மதிப்பும் அது இல்லாதபோதுதான் தெரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீல நிறனுடை நேரிழை யாளொடும்
சாலவும் புல்லிச் சதம் என்று இருப்பார்க்கு
ஞாலம் அறிய நரை திரை மாறிடும்
பாலனும் ஆவர் பராநந்தி ஆணையே.

-திருமந்திரம்.

நாம் தியானம் செய்தல் வேண்டும். தியானத்தால் எமது உடல் பாதுகாக்கப்படும். அட்டாங்க யோகநெறியில் தியானம் ஓர் உறுப்பாகும். அவ்வாறு தியானம் செய்யும்போது எமது கண்பார்வைகள் இரண்டும் நடு மூக்கில் பொருந்தி வைத்திருத்தல் வேண்டும். அதனால் உடல் உளச் சோர்வுகள் ஏற்பட இடமில்லை. அதனால் உடம்புக்கு அழிவில்லை. நடு மூக்கு என்பது மூக்குத் துவாரங்கள் உள்ள பகுதி. இச் செயல் ஓர் முத்திரை (யோக முத்திரை)யாகும். அதன் பெயர் சாம்பவி முத்திரை என்பது.

இடைகலை, பிங்கலை ஆகிய இரு வழிகளில் இருகால்கள் கொண்டு மேல் ஓடும் குதிரையாகிய பிராணனை சிரசின் மேல் அசையாது நிறுத்தி அங்கு ஊறும் அமுதத்தைப் புசிக்கவல்லமையுடையவராயின், நீரில் ஆயிரம் ஆண்டுகளும், நிலத்தில் ஆயிரம் ஆண்டுகளும் நீவிர் சமாதி இருப்பினும், அவ்வுடலுக்கு அழிவு ஏற்படாது. இதை எம் இறைவனாகிய சிவபெருமானின் ஆணையாகக் கூறுகின்றேன் என்றுள்ளார் திருமூலர். உடம்பை ஆக்கியுள்ள நிலம், நீர் முதலிய பஞ்சபூதங்களும் இவ்வமுதம் புசித்தமையால் தன் நிலையில் ஒடுங்கி வலிமை கெட்டுவிடும். அவ்விதம் அவை தனித்தனியே வலிமை கெடுவதற்கு பல்லாண்டுகாலம் செல்லும். அதனால் உமது உடலும் பல்லாண்டு காலம் வலிமையுடன் திகழும் எனவும் கருத்துரைப்பார் உளர். எவ்வாறாயினும், உடல் நிலைப்பதற்குரிய ஆதார வழிகள் இவை என்பதை உணர்தல் வேண்டும்.

ஈராறு கால் கொண்டு எழுந்த புரவியை
பேராமற் கட்டிப் பெரிதுண்ண வல்லீரேல்
நீராயிரமும் நிலமாயி ரத்தாண்டும்
பேராது காயம் பிரான்நந்தி ஆணையே.

-திருமந்திரம்.

பிராணனை இடைகலை, பிங்கலை வழியே உள் எடுத்து கும்பகம் செய்யும் வழி தெரிவார்க்கு, அவர்கள் வாழ்வில் கூற்றுவனாகிய இயம தர்மராசன் உயிர் எடுக்க வரும் செயல் இல்லாது போய்விடும். அத்தகையோர் அவ்வாறு கூற்றுவன் வரும்போதும், அவனை எட்டி உதைத்துவிடும் வலிமை பெற்றவர்களாகத் திகழ்வர்.

காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியது வாமே.

-திருமந்திரம்.

உடம்பு அழிவடையும்போது, அதற்குள் இருந்த உயிரும் நீங்கும். உடல் வலிமை இருந்தால்த்தான் அதனால் ஞானம் பெறும் தகுதியைப் பெறும். ஆகவே உடம்பினைப் பேணுதல் வேண்டும். அதனால் உடம்பை வளர்க்கும் உபாயங்களை அறிந்து அதனைக்

*தேடிப் பெறவேண்டியது புகழ், நாடி வரவேண்டியது மரியாதை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்து, அதனால் உயிரையும் காத்தேன். உடம்பின் பயன் ஞானம் பெறுதல். எனவே உயிர உடம்பில் உள்ளபோதே ஞானத்தைப் பெற்று விடுதல் வேண்டும். அவ்வாறு பெறாவிடில் உயிரும் உடம்பினை விட்டுப் பிரிந்துவிடும். உடம்பு உள்ளபோதே உயிர் தனித்து இயங்கும் தகுதியைப் பெறும். அதுவே உயிர் வளர்த்தலாகும்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த் தேனே.

-திருமந்திரம்.

உடம்பில் மூன்று முடிச்சுக்கள் உண்டு. அவை மூலாதாரம், சுவாதிட்டானம் ஆகிய பிரம்மக் கிரந்தி மணிபூரகம், அநாகதமாகிய விஷ்ணுக் கிரந்தி, விசுத்தி, ஆக்ஞை ஆகிய உருத்திரக் கிரந்தி என்பன. இம் மூன்று முடிச்சுக்களும், சூரியகலை, சந்திரகலை ஆகிய இரு நாடிகளும் பாம்புபோல் பின்னிக் கிடக்கின்றன. உடல் இயக்கம் பெற பன்னிரண்டு அங்குலத்தால் உணர்த்தப்பெற்ற பிராணன் ஆகும். கீழ் முகமாகச் செல்லும் சந்திர சூரியர் களாகிய இரு கண் பார்வைகளையும் ஒன்றாக்கி, கீழ் நோக்காது மேல் நோக்கி இருந்தால் பிராணாலயம் பெற்று உடம்பு அழியாது. குருவின் உபதேசம் இதற்குத் துணை புரியலாம். இதன் திருமந்திரம் வருமாறு. இரண்டு தமிழில் "உ" என்பது, எட்டு என்பது தமிழில் "அ" என்பது.

மூன்று மடக்குடைப் பாம்பிரண் டெட்டுள
ஏன்ற இயந்திரம் பன்னிரண் டங்குலம்
நான்றவிம் முட்டை மிரண்டையும் கட்டியிட
டூன்றி யிருக்க உடம்பழி யாதே.

-திருமந்திரம்.

திருமூலர் தம் வரலாறு கூறும்போது பின்வருமாறு கூறியுள்ளார்.

இருந்தேன் இக் காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப் பகல் அற்ற இடத்தே.

-திருமந்திரம்.

திருமூலர் தாம் இராப்பகல் அற்ற இடத்தே இருந்ததாகக் கூறியுள்ளார். அந்த இடம் எங்குள்ளது? எப்படிப்பட்டது என்பதையும் நாம் காண்போம். இரவு, பகல் என்பன அறியாமையும், அறிவுமாம். இங்கும் இவ்வுடம்பிலே பல்லாண்டுகள் இருந்தேன். சிவஞான பிரகாசத்தில் இருந்தேன். அறியாமையும், அறிவும் கருவி கரணங்களின் நீக்கத்தாலும், தொடக்கினாலும் வருவன. இவை அற்ற இடம் என்றும் ஒரு பெற்றியாய் விளங்கும் பேரறிவாம். அதனால் அங்கு துன்பம் என்பது இன்றி இன்பம் மட்டுமே உள்ளது என்னும் பொருளில் அமைந்துள்ளது. பல்லாண்டுகள் வாழ்வது எங்ஙனமாகும் என்பது கூறப்பட்டுள்ளது. இருக்கும் இடத்தில் இருந்துகொண்டால் எல்லாம் நன்மையாய் முடியும் என்பதை விளக்கியுள்ளது. "எண்ணிலி கோடி" என்பது கணக்கற்ற ஆண்டுகள் என்பது "பல்லாண்டுகள்" என விரிக்கப்பட்டுள்ளது. எனவே மனிதன் பல்லாண்டுகள் உயிர் வாழ முடியும் என்பதை உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர் கூறியுள்ள அடுத்துவரும் திருமந்திரம் மனிதனுக்குக் "காலன் என்ற சொல் கனவிலும் இல்லை" என்பதை விளக்கியுள்ளது. "காலன்" என்பது எமதர்மராசனைக் குறிக்கும். எனவே யாருக்கு காலன் வரமாட்டான் என்பதை பின்வருமாறு விளக்கியுள்ளார்.

மூல நாடி முகட்டல குச்சியுள்
நாலு வாசல் நடுவுள் இருப்பிர்காள்
மேலை வாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனவிலும் இல்லையே.
-திருமந்திரம்.

சிவனை நாடித் தலையின் உச்சியில் உள்ள சகசிர தளத்தில் நான்கு வகை அறிவும் பொருந்தும்படி இருப்பவர்களே, சகசிர தளத்தின் மேலே அகண்டத்தைக் கண்ட பின்பு, அவர்களுக்கு காலன் என்ற சொல் கனவிலும் இல்லை என்பது விளக்கப்பட்டுள்ளது. நால்வகை அறிவுகளான; கண்ணறிவு, காதறிவு, மூக்கறிவு, நாக்கறிவு என்பன.

## நல்லூரான் செம்மணி வளைவுக்கு வாழ்த்து சொல்லி மகிழ்கின்றோம்

"நல்லூரான்" செம்மணி வளைவு
நற்றமிழ் பதியிலெழுந்த வாசல் கதவு
எல்லோரின் விருப்புக்கு வடிவம் கொடுத்தெழுந்தது
எழிலார் பதியமர்ந்த நல்லைக்கந்தன் திருவருளோடு
வல்லமைச் செழிப்போடு கந்தபுராண விழுமியம் திகழ
வாஞ்சைக்குரிய நல்லூரான் வளைவு செம்மணியில் நிமிர்ந்தது
நல்லன மலியும் புனித நெறியின் மாண்புடன்
நயங்கள் பெருக்கு நிமிர்ந்து நல்லூரான் வளைவு
எல்லை காண அழகோடு எங்கள் தேசத்தில் நிமிர்ந்தது
யாழ்ப்பாண கந்தபுராண கலாசார நெறிதனை
நயம்பட தாங்கி எழுந்தது நல்லூரான் வளைவு
வாழ்வாங்கு வாழும் நெறிகளின் இலக்கணத்தை
வளமுடன் தாங்கி வடபுலத்திலெழுந்தது வளைவு
புகுந்தவர் வரவைப் பதியும் புத்தகமாய் விரிந்தது
பொங்கல் திருநாளில் வாசல் திறந்தது வாழி!
-மதுரகவி-

*வெற்றி என்பது நிரந்தரமல்ல. தோல்வி என்பது இறுதியானதுமல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயற்ற வாழ்வு

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

பிறத்தலும் பிறந்தாற் பிணிப்பட வாய்ந்து அசைந்துடலம்
இறக்குமானுளதே இழித்தேன் பிறப்பினை நான்.

அப்பர் பெருமான்.

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பது தமிழ் தரும் எச்சரிக்கை. சிவப்பு விளக்கு. மனிதப் பிறவி மேலானது. வளத்தோடு வாழ்வமைந்தாற்றான் நோய் நொடியின்றி வாழலாம். வறுமையும் ஒரு நோய்தான். பசிப்பிணி தீர்க்கும் மருத்துவராகப் பல கொடைவள்ளல்கள் வாழ்ந்தனர். தமிழர் மத்தியில் காலம் மாறிவிட்டது. விஞ்ஞானத் தின் மானுட, மருத்துவ இயல் மனிதனது உயிர்கொல்லிக் கிருமிகள் பற்றியும். நோய்த் துறைகளின் பாதிப்பதில் இருந்து மீட்டெடுக் கும் வழிவகை பற்றியும் வெகு முயற்சிகளை மேற்கொள்கிறது. நோய்த்தடுப்பு, பாதுகாப்பு, வைத்தியம், மருந்து போன்றவற்றில் அக்கறை கொண்டுள்ள உலக சுகாதார ஸ்தாபனங்கள் மனித சமுதாயத்தின் சுக வாழ்வை, ஆரோக் கியத்தை, சுகாதாரத்தைப் பேண ஆவன செய்யமுயல்கின்றன. புதிய புதிய நோய்கள் தலைதூக்கத்தான் செய்கிறது. அண்மையில் உயிர்கொல்லியாய் வந்த சார்ஸ் நோயின் கொடுமை யாவரும் அறிந்ததே. கான்சர், எய்ட்ஸ் நோய்களில் இருந்து மனிதம் தப்ப முடியவில்லை. மருந்துகளும் கண்டுபிடிக்கப் படவில்லை. இவைபோன்ற பல தீராத நோய் கட்கும், மரண அவதிக்கும் மனிதம் முகம் கொடுக்கவேண்டியுள்ளது. பெரிய மகான்களும் புற்றுநோய்க்கு இரையாகி உள்ளனர். ஆல யம் பேணிய சிவராசசேகரன் மக்களின் நோயை மாற்ற மருத்துவர்களையும் அங்கே நியமித்தான். இன்றைய ஆலயங்கள் அபி ஷேகம், ஓமம், யாகம், அர்ச்சனை, சடங்கு, திருவிழா என சமயிகளைக் கவர்கின்றன. பாபா வைத்தியசாலை அமைத்து மக்கள் தொண்டு புரிந்தார். செல்வச்சந்நிதியில் டாக்டர்களால் கைவிட்ட நோயாளர் பலர் வந்து, இருந்து நோய்களை மாற்றியுள்ளனர். இன்று நம்பிக் கைகள் குலைந்து போயின. இந்த நோய் விவகாரம் பற்றி பாடாத அநுபூதிச் செல்வர் களே இல்லை. அப்பர் தந்த பாட்டொன்று நோயின் பிடிப்பைப் பற்றிப் பேசுகிறது.

திருவே என்செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க
உருவே என் உறவே என் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே என்கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையாவண்ணம்
ஆவடுதண்டுறையும் அமரர் ஏறே.

எதையும் ஏற்றுக்கொள்ளும்போது மனம் இலகுவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் என்று கூறாமல் வல்வினைநோய், அருவாய வல்வினைநோய் என நோய்க்குப் பல அழுத்தம் கொடுக்கிறார். சரீரத்துக்கு வரும் பிணியோடு உயிருக்கும் வரும் நோயையும் பற்றி எம்மைச் சிந்திக்க வைக்கிறது இப்பாடல். இன்றும் பல துன்பங்கள் - உடல் நோய்களால் நாம் வாடி வருந்துகிறோம். அப்பருக்குப் பின் வந்த அருணகிரியார் நோயின் தாக்கத்திலின்றும் விடுதலை பெறவும், மரணத்தின் பிடியினின்றும் விடுபடவும் முருகனை வேண்டுகிறார்.

*ஈளை சுரங்குளிர் வாதமெனும் பல*
*நோய்கள் வளைந்தற இளையாதே*
*ஈடு படுஞ்சிறு கூடு புகுந்திடு*
*காடு பயின்றுயி ரிழவாதே*
*மூளை யெலும்புகள் நாடிநரம்புகள்*
*வேறு படுந்தழல் முழுகாதே*
*மூல மெனுஞ்சிவ யோக பதந்தனில்*
*வாழ்வு பெறும்படி மொழிவாயே.*

*திருப்புகழ் 794.*

தொய்வு, சுரம் (காய்ச்சல்) குளிர், (வாதம்) வாய்வு மிகுதலாய, பிணிவகை, என்னும் பல நோய்கள் சூழ்ந்து மிகஇளைப்பு அடையாமல் வலிமையை இழந்து துன்புறும் சிறிய கூடாகிய இந்த உடலிற் புகுந்து, இறுதியில் இடுகாடு, சுடுகாட்டிற் சேரும்படி இவ்வுயிரை இழக்காமல் மூளை, எலும்புகள், நாடிகள், நரம்புகள் இவையெலாம் வேறுபட்டொழியத் தீயில் முழுகிவேகாமல் மூலப் பொருளான சிவயோக பதவியில் நான் வாழ்வு பெறும்படி உபதேசித்து அருளுக.

*பாகை வளம்பதி மேவி வளஞ்செறி*
*தோகை விரும்பிய பெருமாளே.*

பாகை ஒரு தலம், தோகை- மயில், வள்ளி, மேவி, இருந்து. வளம்- வனப்பு, செழிப்பு.

நோயும் தூரத்த, வெம்வறுமையும் விரட்ட, நாம் படும் இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை. துறவியோ, ஞானியோ சமுதாயத்திலேதான் தங்கியிருப்பர். செல்வம் நிலையாதது, வாழ்க்கை நிலையாதது. எனினும் ஒருவரைப் பின்தொடர்ந்து ஐயா பிச்சையென்று இரக்காமலும், நோயினால் அவத்தைப்படாமலும் அருள்பாலிப்பாயென இறைவனிடம் இரக்கிறார் தாயுமான சுவாமிகள்.

*எறிதி ரைக்கடல் நிகர்த்த செல்வம் மிக*
*அல்லல் என்றுஒருவர் பின்செலாது*
*இல்லை என்னும் உரைபேசி பாது, உலகில்*
*எவரும் ஆம்என மதிக்கவே*
*நெறியின் வைகிவளர் செல்வமும் உதவி*
*நோய்கள் அற்றசுக வாழ்க்கையாய்,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமம் ஆதிநிலை நின்று ஞானநெறி
நிஷ்டை கூடவும் எந் நாளுமே
அறிவில் நின்று, குருவாய் உணர்த்தியதும்
அன்றி, மோன குரு ஆகியே
அகிலம் மீதுவர வந்த சீரருளை
ஐய ஐயஇனி என்சொல்கேன்?
சிறியன் ஏழைநமது அடிமை என்று உனது
திரு உளத்தினில் இருந்ததோ?
தெரிவ தற்கு அரிய பிரமமே அமல
சிற்சுகோதய விலாசமே!

சிற்சுகோதய விலாசம் 7.

கடல்போற் பரந்த செல்வம் நிலையற்றதுதான். எனினும் மற்றவரைத் தொடர்ந்து இரக்காமல் நான் வாழும்படிக்கான பொருள் வசதியையும் எனக்குக் கொடுத்து நோய்பிணியற்ற சுக வாழ்வையும் தருவாயென, இறைவனிடம் வேண்டி நிற்கிறார் தாயுமானார். இராமலிங்க சுவாமிகள் நான் மற்றவர்களை இரக்காமலும் என்னிடம் யாரும் வந்தால் இல்லையென்று சொல்லாமல் இருக்கின்ற நிலையை தருவாயென முருகப்பெருமானிடம் வேண்டுகிறார்.

ஈ என்று நான் ஒருவர் இடம்நின்று கேளாத
இயல்பும் என்னிடம் ஒருவர்ஈ
திடுஎன்ற போதவர்க் கிலைஎன்று சொல்லாமல்
இடுகின்ற திறமும் இறையாம்
நீ என்றும் எனைவிடா நிலையும்நான் என்றும் உன்
நினைவிடா நெறியும் அயலார்
நிதிஒன்றும் நயவாத மனமும்மெய்ந் நிலைநின்று
நெகிழாத திடமும் உலகில்
சீஎன்று பேய்என்று நாயென்று பிறர்தமைத்
தீங்குசொல் லாத தெளிவும்
திரம்ஒன்று வாய்மையும் தூய்மையும் தந்துநின்
திருவடிக் காளாக்குவாய்
தாய்என்று சென்னையில் கந்தகோட் டத்துவளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

தெய்வமணிமாலை 4.

நாம் ஒரு திவ்ய மனோதர்மமும், தூய்மையான வாழ்வும், ஆழமான இறைபற்றும், ஒழுக்கசீலங்களும் கொண்டு வாழ்வைப் புனிதமாக்க வேண்டுமாயின் என்னென்ன தேவையெனப் பேசுகிறார் அருட்சோதி வள்ளலார்.

திட்டமிட்டு செயற்பட்டால் தடைக்கல் நம் பாதையில் படிக்கல் ஆகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும் உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணியே
சண்முகத் தெய்வமணியே.

தெய்வமணிமாலை 3.

நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும் என்பது வள்ளலாரின் விண்ணப்பம். பணம் மிகுந்தவர் சர்க்கரை நோயினால் சாப்பிடமுடியாமல் தர்மசங்கடப்படுகிறார்கள். இன்று பல கொடிய நோய்கள் மனித குலத்தைத் தாக்கி உயிர்கொல்லியாகின்றன. எனவே நாம் கொடுமை செய்யாதிருப்போம். கொள்கை உள்ளவர்களாய் வாழ்வோம். தொண்டு பேணுவோம். தர்மம் செய்வோம். மக்கள் சேவையே மகாதேவன் சேவையென்று சமுகநலம் பேணுவோம். பெற்றோரைப் பராபரிப்போம். இன்று எம் மண்ணில் மலிந்திருக்கும் அபலைகளின் துயர் தீர்த்துச் சைவ பரிபாலனம் செய்வோமாக.

## காந்த சக்தி பன்னிரெண்டும் கொண்ட ஆறுமுகம்

செல்வச் சந்நிதி வேல்இருக்க எமக்கென்ன பயம்
கல்லும் கனிந்திடக் கந்தனருள் சுரக்கும் மெய்மை இடம்
வல்லை வெளிதாண்டித் தொல்லை தவிர்த்திடப் போகும்மனம்
வல்ல செயலையும் சுலபமதாக்கிக் காக்கும் தலம்
எண்ணிலடங்காத பக்த கோடிகள் வந்து உருகும் இடம்
ஏழை எளியோர்கள் தங்கி மகிழ்ந்து உலாவரும் தலம்
கண்ணின் இமையாகிக் கந்தனருள் நின்று காக்கும் இடம்
காந்த சக்தி போலக் கண்கள் பன்னிரெண்டு கொண்டு இருக்கும் ஆறுமுகம்.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

திறமை உள்ளவரின் முன்னேற்றத்தை யாராலும் தடுக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகந்தையை அழித்த முருகன்

– ஆர்.வீ. கந்தசுவாமி அவர்கள் –

ஒரு சமயம், தானே சகல சராசரங்களையும் படைப்பவன் ஆதலால் தானே பெரியவன் என்னும் அகம்பாவம் பிரம்மாவிற்கு ஏற்பட்டது.

கைலாயம் வந்து கைலையங்கிரி நாதனை வணங்கி விடைபெற்றுத் திரும்பினார். முருகன் சிறியவன்தானே என நினைத்து முருகனை வணங்காமல் மரியாதை செலுத்தாமல் புறப்பட்டார்.

இதைக் கண்ணுற்று நவ வீரர்கள் உடன் நின்றிருந்த முருகன், நான்முகத்தோடு நிற்பவரே! உமது தொழில் என்ன? என வினாவினார். இது உங்களுக்குத் தெரியாதா? நான்தான் படைத்தல் தொழில் புரியும் பிரம்ம தேவன் என்று பதில் அளித்தார் பிரம்மா.

அண்ட சராசரங்களையும் படைக்கும் தங்களுக்கு பிரணவத்தின் பொருள் தெரிந்திருக்க வேண்டும் அல்லவா? அதை விளக்கமாகக் கூறவேண்டும் எனப் போலியான பணிவுடன் வேண்டினார், முருகப் பெருமான்.

தனக்குத் தெரிந்தவற்றைப் பிறருக்கு எடுத்துக்கூற முடியாத பிரமன் கவலை அடைந்தார். "ஓம்" என்னும் பிரணவத்தின் பொருளை எடுத்துக்கூற முடியாத நீ படைத்த அனைத்தும் சிறப்பாக விளங்க முடியுமா? என முருகன் கூறியபடி பிரம்மாவின் தலையில் ஓங்கிக் குட்டினார்.

தன்னுடைய நவ வீரர்களை அழைத்துக் கந்தகிரியில் உள்ள சிறையில் பிரமனை அடைக்குமாறு உத்தரவிட்டார். நவ வீரர்கள் பிரம்மனைச் சிறையில் பூட்டி காவல் வைத்தனர்.

முருகன் சிருஷ்டிக்கும் தொழிலை மேற்கொண்டார். இவற்றைக் கேள்வியுற்ற மகா விஷ்ணு கைலையங்கிரி சென்று சிவபிரானிடம் நடந்தவற்றை விபரமாக எடுத்துரைத்து பிரம்மாவை விடுதலை செய்யுமாறு விண்ணப்பம் செய்தார்.

ஈசன் நந்தியிடம் பிரம்மனை விடுதலை செய்து அழைத்து வரும்படி சொன்னார். நந்தி முருகனிடம் சென்று சிவபெருமான் இட்ட கட்டளையைக் கூறினார். முருகன் நந்திமேல் கடும் கோபமுற்று இன்னும் சிறிது நேரம் நீ இங்கு நின்றால் உன்னையும் சிறையில் அடைப்பேன் எனக் கூறினார்.

நந்தி கவலை அடைந்து கைலைநாதனிடம் வந்து முருகனின் சினத்தைக் கூறினார். சிவபெருமானும், விஷ்ணுவும், தேவர்கள் பின் தொடர கந்தகிரிக்குச் சென்று பிரம்மாவை சிறையில் இருந்து மீட்டுவரும்படி உத்தரவிட்டார். வீரர்கள் சிவன் கட்டளையை நிறைவேற்றினர்.

பிரம்மா உன் தேகம் இளைத்து விட்டது என்று சிவன் கூறினார். "ஈசனே முருகனால் என் அகந்தை அழிந்தது, சிறைச் சாலையை நான் தவச்சாலையாகக் கருதினேன்" என்று கூறினார் பிரம்மன்.

அவரவர் தொழிலை அவரவர்தான் செய்ய வேண்டும். நீ போய் உன் படைத்தல் தொழிலை கவனி என ஆசீர்வதித்து அனுப்பினார் சிவன்.

பின்பு முருகனை இரு கைகளால் அணைத்து தன் மடிமீது இருத்தி சுப்பிரமணியா (சு- குறைவற்ற) (பிரம்மா- பிரம்மனுக்கு

*விலை கொடுத்தாலும் பெறமுடியாத ஒரே பொருள் அனுபவம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான) (ணயிர்- அறிவு) அந்தப் பிரண வத்தின் பொருளை அறிவாயா? அதை எனக் குக் கூறுவாயா எனக் கேட்டுக்கொண்டார்.

முருகன் கலகலவெனச் சிரித்தபடி தந்தையே தாங்கள் தாயாருக்கு ரகசியமாகத் தானே பிரணவத்தின் பொருளை உபதேசித் தீர்கள். பகிரங்கமாக யாவரும் கேட்கும்படி சொல்லுவது முறையில்லையே. எப்போதும் வயதில் சிறியவராயிருப்பினும் உபதேசிப்பவர் ஆசான், கேட்பவர் மாணாக்கர், இல்லையா? எனக் கூறினார்.

தன்னைவிட மகன் அறிவாளியாக இருப்பதைக் கண்டு சிவனார் உள்ளம் பூரித்தது. முருகனை ஓர் ஆசனத்தில் அமர்த்தி அதன் அருகில் தான் தரையில் உட்கார்ந்து, கைகட்டி, வாய் பொத்தி தலை குனிந்து, குழந்தாய், தற்போது என் செவியில் பிரண வத்தின் பொருளை உரைக்கத் தடை ஏதும் உண்டா என ஈசன் கேட்டார். முருகன் தந்தை யின் காதில் பிரணவத்தின் பொருளை எடுத்து உரைத்தார்.

சுவாமிக்கே நாதனான முருகனை சுவாமிநாதன் எனப் பெயரிட்டுத் தேவர்கள் போற்றினர். சிவபெருமான் கைலை திரும் பினார்.

அகஸ்திய முனிவர் கந்தகிரி வந்து தனக்கும் பிரணவப் பொருளை உரைக்கும்படி வேண்டினார். முருகனும் அவருக்கு உபதேசம் செய்தார்.

நாமும் முருகனை வணங்கி நல் அறிவு பெறுவோமாக.

*சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்*
*வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை விளங்குவள்ளி*
*காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்*
*சார்ந்துணைப் போது மறவாதவர்க் கொரு தாழ்வில்லையே.*

---

## கோவிலுக்குச் செல்வது ஏன்?

ஒருமுறை சுவாமி விவேகானந்தர் ஆன்மிக சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்தார். அப்போது ஒருவர் குறுக்கிட்டு, "ஆண்டவனை அடைய நாம் ஏன் கோவிலுக்குச் செல்ல வேண்டும். அங்கு போகாமலேயே ஆண்டவனை அடைய முடியாதா?" என்று கேட்டார்.

விவேகானந்தர் அவரிடம், கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா?" என்று கேட்டார். அவர் ஓடிப்போய், ஒரு செம்பில் தண்ணீர் கொண்டு வந்தார். சுவாமி அவரிடம், "நான் தண்ணீர்தானே கேட்டேன். எதற்கு இந்தச் செம்பு?" என்றார்.

கேள்வி கேட்டவர் குழம்பிப்போய், "செம்பில்லாமல் எப்படி தண்ணீர் கொண்டுவர முடியும்?" என்று கேட்டார்.

சுவாமி அவரிடம், "ஆம் சகோதரனே! தண்ணீர் கொண்டுவர செம்பு தேவைப்படுவது போல, ஆண்டவனை உணர்ந்து மகிழ ஓர் இடம் வேண்டும். அதுதான் ஆலயம். அதனால்த்தான் கோவிலுக்குப் போகச் சொல்கிறேன்" என்றார்.

*மனம்விட்டு பேசுவதைவிட சிறந்த அறிவு வேறு இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர உலகத்தில் வாழ்க்கை

- திரு பு. கதிரித்தம்பி அவர்கள் -

விஞ்ஞானம் தற்காலத்தில் கடுகதி வேகத்தில் வளர்ச்சியடைந்து செல்லுகின்ற தென்பது உண்மை. எங்கும் எவையிலும் விஞ்ஞானம் இடம்பிடித்துக்கொண்டிருக்கிறது. அதிவேகமாய் செல்லும் விஞ்ஞானத்திற்கு ஈடுசெய்ய முடியாது மனிதன் காற்றாய்ப் பறந்து கருமம் ஆற்றுகின்றான். இதனால் விபத்துக்களும், முரண்பாடுகளும், ஒழுக்கக் கேடுகளும் தோன்றுகின்றன. நாடொறும் இவற்றை மனிதன் கண்டுகொண்டிருக்கின்றான். இவற்றை நீக்குவதற்கு ஒரு வழி சமயநெறி யைப் பின்பற்றுதல் ஆகும். இரண்டாவது வழி தெய்வ மொழியான பழமொழிகளைக் கடைப்பிடித்து, அதன்வழி ஒழுகுதலாகும்.

விஞ்ஞானம் இயல்பான மனித வாழ்க் கையை மாற்றி, விஞ்ஞான நெறியில் நடக்கத் தூண்டுகின்றது. சமய நெறியைக் கடைப் பிடித்து வாழ்ந்த ஆதிமனிதன் நெறி தற்கால நிலைக்கு ஒவ்வாது என மனதை மாற்றச் செய்கின்றது. காலையில் எழுந்து காலைக் கடன் முடித்து கடவுள் வழிபாட்டில் ஈடுபட்ட பண்டைய மனிதன் சுகவாழ்வு உடைய வனாகவும், சந்தோஷமாக குடும்பக் கருமங் களை ஆற்றினான். அதுமட்டுமன்றி அயல வருடன் ஒற்றுமையாக வாழ்ந்தான். நன்கு உழைத்து உண்ணவேண்டும். பிறர் பொருளை எடுக்கக்கூடாது. தன்னாலியன்ற உதவியை பிறருக்குச் செய்ய வேண்டுமென்ற மனப் பான்மையுடன் வாழ்ந்தான். இதனால் நாட்டில் குழப்பங்களோ, பிரச்சினைகளோ தோன்ற வில்லை. மனிதன் சந்தோசமாக உண்டு, உறங்கி நிம்மதியாக வாழ்ந்தான். களவுகளோ, கொள்ளைகளோ எங்கும் நிகழவில்லை. இதனால் மனிதன் இறை வழிபாட்டில் ஈடுபட்டு தருமகாரியங்கள் செய்யத் தலைப்பட்டான். மக்கள் கல்விகற்க வேண்டுமென்ற எண்ணத் தினால் பாடசாலைகளை நிறுவினான். பாமர மக்களும் கல்வி அறிவைப்பெற நூனிலையங் களை அமைத்தான். அன்னசாலைகளை அமைத்து வறியவர்களுக்கு உணவு வழங் கினான். இதனால் நாட்டில் அமைதி, சாந்தம் நிலவியது. விஞ்ஞானம் வளர்ச்சியடைந்ததும் மனிதன் மனதில் மாற்றம் ஏற்படத் தொடங் கியது. விஞ்ஞானத்தினால் மனிதன் எதையும் செய்யலாம் என்ற கரு தோன்றியது. வெளி நாடு சென்று உழைக்கலாம் என்ற தூண் டுதல் ஏற்பட வெளிநாடு செல்லத் தலைப் பட்டான். சென்ற மனிதன் வெளிநாட்டில் பண வசதியுடன் வாழலாமென்பதையும் அறிந்து கொண்டான். பணவரவைக் கண்ட வெளிநாட்டு மனிதன் உறவினரையும் அங்கு அழைத்தான். வெளிநாடு சென்ற மனிதன் கலை கலாசாரங் களை மறந்து பணம் தேடுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தான். அவசரமாக உழைக்க வேண்டும். ஏராளம் பணம் சம்பாதிக்க வேண்டு மென்ற எண்ணம் அவன் மனதில் தோன்றியது. இதனால் அம் மனிதன் இரவு பகலாக பல இடங்களில் வேலை செய்தான். பணமும் அதிகம் வந்தது. விஞ்ஞான வளர்ச்சியால் இவை ஏற்பட்டனவென எண்ணினான்.

*தன்னம்பிக்கையே உலகில் மிகச் சிறந்த ஆயுதம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டில் வீடு வாங்கி தமது சொந்தநாடு இதுதானென எண்ணி வாழத் தலைப்பட்டான். ஆனால் ஒழுக்கத்தையோ, சமயநெறியையோ அவனால் கடைப்பிடிக்க முடியவில்லை. அவன் அங்கு அவசர உலகத்தில் அவசர மாக உழைத்து, மனைவி மக்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

தமது சொந்த நாட்டில் வாழுகின்ற மக்கள் விஞ்ஞான வளர்ச்சியால் காற்றாகப் பறந்து உழைக்கவேண்டியுள்ளது. தமது சமுதாயத்துடன் நிகரான வாழ்க்கையைக் கடைப்பிடிப்பதற்கு பணத்தேவை அதிகம் ஏற் படுகின்றது. பணத்தைத் தேடுவதற்காக கடின உழைப்பைச் செய்யவேண்டுமென்ற எண்ணம் மனதில் தோன்ற உறங்காது உழைக்கின் றான். உழைப்பதற்கு நல்ல திடமான சரீரம் வேண்டும். சத்துள்ள அறுசுவை உணவை உண்ணவேண்டுமென நினைக்கின்றான். ஆனால் மனைவியும் தானும் கூடி உழைத் தால் கூடிய பணம் வரும். அவற்றைக்கொண்டு வாழலாம் என எண்ணினாலும், சமைப்பதற்கு நேரம் இன்மையால் கடையில் உணவு வாங்கி உண்ணும் நிலை ஏற்படுகின்றது. விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது. ஆனால் மனி தன் வீட்டில் இருந்து சமைத்தோ, சத்துள்ள உணவுகளை உண்பதற்கோ வசதியுமில்லை நேரமும் இல்லை.

விஞ்ஞானம் வளர்ச்சியடைந்தாலும் மனிதன் அவசர உலகத்தில் அவசர வாழ்க் கையைக் கடத்தவேண்டிய நிலை உள்ளது. இதற்கு மனதை ஒருவழி நிற்கப் பழக்கிக் கொள்ள வேண்டும். குரங்கு மனம் ஒருவழி நிற்க, இறைவன் அருள் கிட்டவேண்டும். மன அமைதிபெற கடவுளைத் தியானம் செய்ய வேண்டும். மனம் ஒருவழிப்படும்போது நல்ல சிந்தனைகள் மனதில் உதயமாகும். செய்யத் தகுமோ, செய்யத்தகாதோ என்ற ஆறறிவு மிளிரும். இதனால் நல்ல காரியங்கள் செய்ய மனம் தூண்டும். நல்ல காரியங்களினால் நற்பெயர் ஏற்பட இறைபக்தி அதிகமாகும். இறையருளால் பெரியோரைக் கனம்பண்ண வேண்டும். தாய் தந்தையர் கண்கண்ட தெய் வம். எல்லோரும் நம் மக்கள் என்ற பரந்த மனப்பான்மை ஏற்படும். நம் குலமும் நாடும் செழிப்புற வளர வேண்டும். இன்பம் சூழ வேண்டும். எல்லோரும் வாழவேண்டுமென்ற பொது உணர்வு ஏற்படும்.

அவசர உலகத்தில் மனிதன் அவசர வாழ்க்கையை அமைக்கவேண்டிய கட்டாயத் தில் உள்ளான். இதற்கு சிறந்த வழி கலியுக வரதன் செல்வச்சந்நிதியான் ஆலயம் சென்று நீரோடையில் மூழ்கி வினை நீங்க, கோவிலை மூன்று முறையோ, ஐந்து முறையோ வலஞ் செய்ய வேண்டும். செல்வச்சந்நிதியான் விபூதி பூச நோய்கள் அகன்றுவிடும். வடமேற்குத் திசையில் இருக்கும் பூவரசு மரத்தின்கீழ் இருந்து முருகன் புகழைப் பாடுங்கள். அங்கு முருகன் நீங்கள் பாடும் பாடலுக்கு ஆடுவான். காவடிக்காரர்களுடன் சேர்ந்து தானும் ஆடு கின்ற முருகன் உங்கள் உள்ளம் உருகும் பாடலைக் கேட்டுச் சும்மா இருப்பானா? எந் நிதியும் தருகின்ற செல்வச்சந்நிதியான் நிம்மதி யையும் அடியார்களாகிய உங்களுக்குத் தருவான். அவனடி தினமும் வணங்கி திரு வருள் பெற்று, சந்நிதியான் ஆச்சிரமத்தில் அன்னம் பாலித்து வீடு செல்லுங்கள். செல்வச் சந்நிதியான் உங்கள் வளங்களையும் வாழ் வையும் பெருகச் செய்வான். மனதில் சந் தோசம் குடிகொள்ளும். எல்லோரும் இன்ப மாக வாழவேண்டும் என்ற மனத்தூய்மை ஏற்படும்.

*எதிர்ப்பு இல்லையென்றால் வாழ்வில் ஏற்றமே இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

**– திருமதி இந்திரா திருநீலகண்டன்** அவர்கள் –

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற தெய்வப்புலவர் வள்ளுவனாரின் குறளுக்கிணங்க மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து சென்ற நம் முன்னோர் சீரிய வாழ்க்கையை எவ்வாறு வாழ்ந்திருக்கிறார்கள் என்பது "கர்ம யோக விளக்கம்" என்னும் நூலின் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. இந்து மதம் கூறியபடி மானிட வாழ்வு அமைந்திருந்தால் உலகம் அழகான பூங்காவாக பூத்துக்குலுங்கியிருக்கும் என்பதும் தெளிவாகின்றது. அதன்படி சுவாமி சித்பவானந்தரின் "கர்ம யோக விளக்கம்" என்னும் நூலில் படித்துச் சுவைத்தவையை "ஞானச்சுடர்" மூலம் பகிர்வதில் மனமகிழ்வு அடைகின்றேன். இதன்படி மானிட வாழ்க்கையின் நெறிமுறைகளை நன்குணர்ந்து இறைவனுக்கும் மனச்சாட்சிக்கும் மட்டும் கட்டுப்பட்டு அன்புக்கும் உண்மைக்கும் நேர்மைக்கும் மதிப்பளித்து நம் முன்னோர் கூற்றுப்படி நம் வாழ்வு அமையுமேயானால் "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே!"

"வாழ்க்கையை நான்கு ஆச்ரமங்களாகப் பிரித்து வைத்தது பண்டைக் காலத்திய ஏற்பாடு. நாளடைவில் இந்த நான்கு ஆச்ரமங்கள் இரண்டு ஆச்ரமங்களாகக் குறுகிப் போய்விட்டன. கிரஹஸ்த ஆச்ரமம், சன்னியாச ஆச்ரமம் ஆகிய இரண்டைத்தான் இக்காலத்தில் நாம் காண்கிறோம். வானப்பிரஸ்த ஆச்ரமம் சன்னியாச ஆச்ரமத்தில் ஒடுங்கிப்போய் விட்டது. பிரம்மசரிய ஆச்ரமம் மறைந்து போய்விட்டது. இதுவே இக்காலத்தில் நாம் காணும் நிலமையாகும். இவ்விரண்டு ஆச்ரமங்களுள்ளும் இல்வாழ்வான் இணைந்து கொள்கின்றான். சமூகத்தில் ஓர் அங்கத்தினனாக தனக்கு ஏற்பட்டுள்ள கடமைகளை அவன் நிறைவேற்றி வருகின்றான். மற்றவன் துறவியாய் விடுகின்றான். தன்னுடைய ஆற்றல் முழுவதையும் சமய வளர்ச்சிக்கென்றே அவன் பயன்படுத்துகின்றான். கடவுள் வழிபாடும், சமயத்தைப் பரப்புதலும் துறவறத்தானுடைய கடமைகள் ஆகின்றன. இந்து மதத்தில் அமைந்துள்ள சாஸ்திரங்கள் பலவற்றுள் மஹா நிர்வாண தந்திரம் என்பது ஒன்று. கிரஹஸ்த ஆச்ரமத்துக்கு ஏற்பட்டுள்ள கடமைகளை அது விஸ்தாரமாக விளக்குகிறது. அதை ஆராய்ந்து பார்க்குமிடத்து கிரஹஸ்த ஆச்ரம வாழ்க்கை எவ்வளவு கடினமானது என்பது விளங்கும். கிரஹஸ்த ஆச்ரமத்துக்கு ஏற்பட்டுள்ள கடமைகளை எல்லாம் முறையாக நிறைவேற்றுபவர்கள் மிகச் சிலரே என்பதும் வெளியாகும். அவைகளை ஆராய்ந்து பார்ப்போம்:-

குடும்ப வாழ்வு வாழுகின்ற ஒருவன் கடவுள் பற்று மிக உடையவனாக வேண்டும். கடவுளைப் பற்றிய ஞானத்தைப் பெறுவதே அவன் வாழ்க்கையில் கொண்டுள்ள குறிக்கோள் ஆகவேண்டும். பரம்பொருளைப் பற்றிய ஞானத்தைத் தன்னுடைய லட்சியமாக வைத்துக்கொண்டு ஓயாது வினையாற்றுதலும், தன்னுடைய கடமைகளை நிறைவேற்றுவதும்

*ஆயிரம் பேரிடம் யோசனை கேள். ஆனால் முடிவை நீ மட்டும் எடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரஹஸ்த ஆச்ரம தர்மமாகும். எக் கருமத்தைச் செய்து எத்தகைய அரும்பெரும் காரியங்களைச் சாதித்துவிட்டாலும் அக் கர்ம பலன்களையெல்லாம் தன்னுடையவை என்று சொந்தம் பாராட்டாது கடவுளுக்கே அர்ப்பணமாக ஒப்படைத்து விடுவது கிரஹஸ்த ஆச்ரம தர்மமாகும்.

இவ்வுலகில் மனிதனால் சாதிக்கப் பெறுபவைகளுள் மிகமிகக் கடினமானது யாது? என்னும் கேள்வி எழலாம். மனிதன் பெருவினையாற்றி உயர்ந்த காரியங்களைச் சாதிக்க கடமைப்பட்டிருக்கின்றான். ஆனால் அத்தகைய வினைகளின் விளைவு தனக்குச் சொந்தமல்ல என்று விட்டுவிடுவது மிகக் கடினமானது. தன்னால் இயன்ற முறைகளில் எல்லாம் கொடுத்து ஒருவன் மற்றவர்களுக்கு உதவிபுரிய வேண்டும். தான் புரிந்த உதவிக்குக் கைம்மாறாக மற்ற மனிதன் நன்றி காட்டுகின்றானா? இல்லையா என்கின்ற எண்ணம் ஒருபொழுதும் இல்வாழ்பவன் உள்ளத்தில் உதிக்கலாகாது. நல்வினைகளையே ஓயாது ஆற்றி அவைகளை வெற்றிகரமாக நிறைவேற்றி ஆக வேண்டும். ஆயினும் அத்தகைய உழைப்பின் விளைவாக இல்லறத்தான் ஒருவனுக்குப் பேரும் புகழும் வருகின்றனவா அல்லது அவனுடைய செயலைக் கண்ணெடுத்துப் பார்த்துப் பாராட்டுபவர் யாரும் இல்லையா என்கின்ற எண்ணம் அவனிடத்து உதிக்கலாகாது. இங்ஙனம் கைம்மாறு கருதாது தன் கடமையை நிறைவேற்றுவதே இவ் உலகில் மிகக் கடினமானதாகும். உலகத்தவர் புகழ்ந்து பாராட்டுகின்றபொழுது ஒன்றுக்கும் உதவாத பயங்கொள்ளியும் துணிவு மிக நிறைந்தவன் ஆகிவிடுகின்றான். சமுதாயம் முழுவதும் ஒன்றுகூடி ஆதரிப்பதையும் புகழ்ந்து பாராட்டுவதையும் செய்துவிடுங்கால் அறிவிலியாகிய கயவன் ஒருவனும் வீரச் செயலைச் செய்ய முன்வந்து விடுகின்றான். ஆனால் அல்லும் பகலும் நல்லறத்தையே நிறைவேற்றிக் கொண்டிருப்பதற்கிடையில் உலகத்தவர் தனது சீரிய செயல்களைப் பாராட்டுகின்றார்களா என்று கனவிலும் கருதாது தனது கடமையிலே கண்ணும் கருத்துமாய் இருப்பவனைக் காண்பது அரிதிலும் அரிது. உலகத்தவரது வெகுமதியையும் பாராட்டுதலையும் நினையாதிருப்பது தியாகங்களுள் மிக உயர்ந்த தியாகமாகும். தன் வாழ்க்கைக்குத் தேவையாய் இருக்கின்ற செல்வத்தைச் சேகரிப்பது இல்வாழ்பவனுடைய பெருங் கடமையாகிறது. ஆனால் அவன் பொய்யேதும் பகராது பொருள் சம்பாதிக்க வேண்டும். மற்றவர்களை ஏமாற்றுவதும் பொருந்தாது. பிறர் பொருளைக் களவாடுகின்ற பாங்கில் அவன் செல்வம் சேகரிக்கலாகாது. தான் உயிர் வாழ்ந்திருப்பது ஆண்டவனுக்கும் ஆருயிர்களுக்கும் பணிவிடை செய்வதற்கென்றே என்பதை இல்வாழ்பவன் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது மறுக்கமுடியாத பேருண்மை. தாய் தந்தையரை கடவுள் சொருபமாகவும், கடவுளின் பிரதிநிதிகளாகவும் கிரஹஸ்தன் ஒருவன் யாண்டும் கருதிவரவேண்டும். பெற்றோரைத் திருப்தியடையப் பண்ணுதற் பொருட்டு இல்வாழ்பவன் யாண்டும் உழைத்து வர வேண்டும் தாய் ஒருத்தி தன் மைந்தனுடைய பணிவிடையை ஏற்று மகிழ்ச்சியடைந்திருப்பாளாகில், அங்ஙனமே தந்தையும் தன் மைந்தனுடைய பணிவிடைகளை ஏற்று மகிழ்ந்திருப்பானாகில் அத்தகைய மைந்தனிடத்துக் கடவுளே மகிழ்வடைந்தவர் ஆகின்றார். தாய் தந்தையர் முன்னிலையில் கடும் சொற்கள் சொல்லாத மைந்தனே மேலான மைந்தன்

*தேடல்கள் இல்லாத வாழ்க்கையும் இல்லை. தேவைகள் இல்லாத நாட்களும் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகின்றான். தாய் தந்தையர் முன்னிலையில் மகன் ஒருவன் கேலி செய்வது போன்ற சொற்களைப் பேசலாகாது. பெற்றோர் முன்னிலையில் பதைபதைப்பே வடிவெடுத்த வனாகப் புதல்வன் இருக்கலாகாது. தன் தாய் தந்தையருடைய முன்னிலையில் சினத் தையோ, சீற்றத்தையோ ஒருபொழுதும் வெளிப்படுத்தலாகாது. அவர்கள் முன்னிலை யில் மைந்தன் ஒருவன் வீழ்ந்து வணங்க வேண்டும். அவர்கள் பார்வையில் இருக்கும் போது மகன் அமர்ந்துகொண்டிருப்பது பொருந் தாது. வணக்கத்துடன் நின்று கொண்டிருப் பதே நன் மகனுடைய கடமையாகிறது. அமர்ந்திருக்கும்படி பெற்றோர்கள் அவனுக்கு ஆணையிடுவதற்கு முன்பு அவன் உட்கார லாகாது.

அன்னபானத்தையும் உடைகளையும் வேண்டியளவு சேகரிப்பது இல்லறத்தானுடைய கடமை. தன்னுடைய தாய் தந்தையர்களுக்கு அவன் முதலில் உணவை அன்புடன் வழங்க வேண்டும். பின்பு தன் குழந்தைகளுக்கு அவன் முறையாக உணவூட்ட வேண்டும். அடுத்தபடி யாக ஏழை எளியவர்களுக்குத் தேவையாய் இருக்கும் உணவை அவன் எடுத்து வழங்க வேண்டும். அதன் பின்பே தானும் தன் மனைவி யும் உணவு அருந்தவேண்டும். இதற்கு மாறாக நடந்துகொள்ளும் குடும்பஸ்தன் ஒருவன் பாவம் செய்பவன் ஆகிறான். தனது உடல் வாழ்க்கைக்கு முதல் காரணமாய் இருப்பவர்கள் தாயும் தந்தையுமாதலால் அவர் களுக்கு நலன் செய்தல் பொருட்டு ஆயிரக் கணக்கான துன்பங்களில் துய்த்துக்கிடக்கவும் குடும்பஸ்தன் ஒருவன் ஆயத்தமாய் இருக்க வேண்டும்.

இல்லறத்தான் ஒருவன் தன் மனை விக்குச் செய்யும் கடமையும் மிகப் பெரிய தாகும். இல்லாளைத் திட்டுவதும் திரஸ்கரிப் பதும் ஒவ்வாது. தன்னை ஈன்றெடுத்த தாய்க்கு ஒப்பாக தன்னை மணந்துகொண்ட மனைவியை இல்வாழ்பவன் யாண்டும் கருதவேண்டும். தனக்கு மாளாத துன்பங்கள் பல வந்து வாய்த் திருக்கலாம், மீளவொண்ணாத இடைஞ்சல் கள் பல நேர்ந்திருக்கலாம்; அத்தகைய நெருக் கடிகளுக்கிடையிலும் தன் மனைவியிடத்து சினந்துகொள்ளுதல் இல்வாழ்பவன் ஒருவனுக் குப் பொருந்தாது.

தன் வாழ்க்கைத் துணை ஒருத்தி நீங்கலாக ஏனைய மாதர்களனைவரும் குடும் பஸ்தன் ஒருவனுக்கு மாதாவுக்கு ஒப்பாகின் றான். பிறன் மனைவியை வெறும் மனதால் விழைந்தாலும் அம் மனிதன் கீழான காழ் நரகில் வீழ்பவன் ஆகின்றான்.

மாதர் முன்னிலையில் மிக மரியாதை யாக நடந்துகொள்ளக் குடும்பஸ்தன் ஒருவன் கடமைப்பட்டிருக்கின்றான். பொருந்தாத புன் மொழிகளை அவர்கள் முன்னிலையில் அவன் பேசலாகாது. தன்னையே புகழ்ந்து பேசுகின்ற பேச்சும் மாதர் முன்னிலையில் அவனுடைய வாயினின்று வரலாகாது. நான் இதைச் சாதித் திருக்கிறேன், அதைச் சாதிக்கிறேன் என் கின்ற பேச்சுக்களெல்லாம் பொருந்தாத பேச்சுக்களாகும்.

இல்வாழ்பவன் ஒருவன் செல்வத்தைக் கொண்டும், ஆடைகளைக் கொண்டும், அன் பைக் கொண்டும், அமிர்தம் போன்ற இன்சொற் களைக் கொண்டும் தன் மனைவியை மகிழ் வுறச் செய்தல் வேண்டும். மனைவிக்கு மனக் கிலேசம் உண்டாகின்ற செயல் எதையும் அவன் புரியலாகாது. கற்புடைய மனைவி ஒருத்தியின் முழு மனதோடு கூடிய அன்பைப் பெறவல்ல கணவனே வாழ்க்கைப் பயனை இனிது அடையப்பெற்றவன் ஆகின்றான். அத்தகையவனுக்கே அறத்தாறு நன்கு அமை யப்பெற்றது ஆகிறது. மானுடப் பிறவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுதற்குரிய நலன் அனைத்தையும் அவனே அடையப்பெற்றவன் ஆகிறான்.

தன் மகவுகட்கு இல்லறத்தான் ஒருவன் செய்யக்கிடக்கும் கடமைகள் பல உள. அவையாவன:- வயது நான்கு பூர்த்தியாகும் வரையில் சிசு ஒன்றை அன்போடு ஆதரித்து வளர்த்து வரவேண்டும். பிறகு வயது பதினாறு பூர்த்தியாகும் வரையில் அவ் இளைஞனுக்கு நல்ல முறையில் கல்வியை வழங்குதல் வேண்டும். அவனுக்கு ஆண்டுகள் இருபது பூர்த்தியாகும்பொழுது ஏதேனும் ஒரு தொழில்புரியத் தகுதியுடையவனாக அவன் பயிற்சி பெறுதல் அவசியமாகிறது. அதன் பிறகு தந்தை ஆனவன் மைந்தனை தனக்குச் சமமானவனாக அன்புடன் கருதுதல் வேண்டும். புதல்வி ஒருத்தியை இதே பாங்கில் ஆதரித்துவர பிதா கடமைப்பட்டிருக்கிறான். பெண் ஒருத்திக்குப் பொருந்திய கல்வியை முறையான பாங்கில் வழங்குதல் வேண்டும். பின்பு அவளைத் தக்கான் ஒருவனுக்கு மணம் புரிந்து கொடுத்தல் வேண்டும். பெண் ஒருத்திக்கு உரிய நகைகள், செல்வம் ஆகியவைகளை ஸ்ரீதனமாக வழங்கத் தந்தை கடமைப்பட்டிருக்கிறான்.

இல்லறத்தான் ஒருவன் தன் உடன் பிறந்த சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் ஆற்றவேண்டிய கடமைகள் சில உள. அதற்கு அடுத்தபடியாக அந்த சகோதரர்கள், சகோதரிகளுடைய சந்ததிகளுக்கும் சில கடமைகளை நிறைவேற்றி வைக்க வேண்டும். பொருளாதாரத் துறையில் அவர்கள் பின்னணியில் இருப்பார்களானால் அவர்களுக்கேற்ற பொருளுதவியைச் செய்வதும் இல்வாழ்பவனுடைய கடமையாகிறது. அதற்கப்பாலும் அவனுடைய பொறுப்புக்கள் சில இருக்கின்றன. தனக்கு உற்றார் உறவினர்களாய் இருப்பவர்களுக்கும், தனது நண்பர்களுக்கும், தனது வேலையாட்களுக்கும் பொருந்திய பாங்குகளில் பொருளுதவி செய்ய வேண்டும். இதற்கு மேலும் கிரஹஸ்தன் ஒருவனுடைய கடமை விரிவடைந்துகொண்டு போகிறது. தான் வசிக்கும் கிராமத்திலுள்ள மற்ற மக்களுக்கும் ஏழைகளுக்கும் தக்கவிதத்தில் அவன் துணைபுரிதல் வேண்டும். இதைத் தவிர அம் மனிதனுடைய உதவியை நாடி வேறுசில மனிதர்களும் அவனிடம் வருவார்கள். இயலுகின்ற அளவுக்கும் பொருந்துகின்ற அளவுக்கும் அத்தகையவர்களுக்கும் உதவி புரிய அவன் கடமைப்பட்டிருக்கிறான். போதிய அளவு தன்னிடம் செல்வம் இருக்கின்ற பொழுது இல்வாழ்பவன் ஒருவன் உற்றார் உறவினருக்கும், ஏழை எளியவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உதவிபுரிய மறுத்துவிடுவானாகில் அவன் மானுடனாகக் கருதப்படமாட்டான். அத்தகையவன் விலங்கு இனத்தைச் சேர்ந்தவன் ஆகிவிடுவான். (தொடரும்...

தூய பிரார்த்தனைகளையும், தூய விருப்பங்களையும், தூய செயல்களையும், தூய எண்ணங்களையும், தூய நோக்கங்களையும் இறைவன் நிறைவேற்றுவது நிச்சயம். ஆனால், பிரார்த்தனை செய்த உடனேயே பலன் கைமேல் வந்துவிடவேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். பொறுமையுடன் பிரார்த்தனையைத் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கவேண்டும் ஓர் ஆன்மிக சாதனை என்ற வகையில் பிரார்த்தனை சாதகர்களின் வாழ்க்கையில் தலையாய முக்கியத்துவம் பெறுகிறது. இதில் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும் என்பதும் முக்கிய இடம்பெறுகிறது. ஆனால் இந்த உண்மையைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் காத்திருக்கும் பொறுமை இல்லாதவர்கள், சிறிது காலத்தில் பிரார்த்தனை செய்வதையே கைவிட்டுவிடுவதுண்டு. இது அல்ல சரியான முறை. ஆன்மிக சாதனைகளைச் செய்துகொண்டே இருந்தால் இறைவன் அருளால் சித்தி அடையலாம்.

*உன் மனம் வலிக்கும்போது சிரி. பிறர் மனம் வலிக்கும்போது சிரிக்கவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர் -39)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

மனித இனத்தின் விழுமிய சொத்தாக இந்து மதம் மதிக்கப்பட வேண்டும். அமைப்பு ரீதியில் மட்டுமே அக்கறைகொண்டு செயற்படுகின்ற பிற மதங்கள் அப்படி மதிக்கும் என்று எதிர்பார்க்கவும் முடியாது. இன்றைக்கு தோன்றி உள்ள நெருக்கடி இதுதான். இந்து மதத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி என்று இதைச் சொல்வதைவிட இந்துக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி என்று இதைச் சொல்லுவதே பொருத்தமானதாக இருக்கும். ஏனெனில் இந்துக்கள் இல்லாமல் இந்துமதம் இல்லை. இந்து மதம் இல்லாமல் இந்துக்களும் இல்லை.

இந்துக்களின் சொந்த பூமியான இந்தியாவில் அவர்கள் தங்கள் மதத்தைப் பாதுகாத்துக்கொள்ள எண்ணுவதை, மற்ற மதங்களின்மீது அவர்களுக்கு உள்ள வெறுப்பாக எவரும் சித்தரிக்க முடியாது.

பிற மதங்களுக்கும் இந்து மதத்துக்கும் உள்ள வரலாற்று ரீதியான, பூகோள ரீதியான வேறுபாட்டினையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

பிற மதங்கள் ஒரு குறிப்பிட்ட நாட்டில் மட்டும் இருக்கவில்லை. மதப் பிரசாரத்தினால் பல்வேறு நாடுகளில் பரவி இருக்கின்றன. இந்துக்கள் தங்கள் மதத்தை ஏனைய நாடுகளுக்குப் பிரசாரம் செய்ய எண்ணவில்லை. ஏனெனில் சிந்தனைச் சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு மதம், மத மாற்றத்தில் கவனம் செலுத்த முடியாது.

தமிழர்களின் கலாசாரம் என்பது இந்து கலாசாரத்திலிருந்து பிரிக்க முடியாதது. மதசார்பின்மை என்பது, இந்துக்களை இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்குவதாக இருந்துவிடக்கூடாது. ஏனைய மதத்தினரின் உரிமைகள் வழிபாட்டுச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்தான். இந்துக்கள் தங்கள் மத உரிமைகளை இழக்கும்போது தான் அது பாதுகாக்கப்படும் என்கிற வாதம் ஏற்கக்கூடியது அல்ல.

இந்து மதம் அமைப்பு ரீதியாக பலம் பெற்று இருக்கவில்லை என்பது உண்மையே. அதனால் இந்துக்களின் ஒற்றுமை சேதாரப்பட்டு இருப்பதும் உண்மையே. இந்து சமுதாயத்தின் இந்தப் பலவீனம், ஜனநாயகத்தில் அவர்களின் நியாயமான கோரிக்கைகளைப் புறக்கணிக்கும் வாய்ப்பாக ஆகிவிடுமானால், அதைப்பற்றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய தருணம் இந்துக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. என்பதில் சந்தேகமில்லை.

இந்து மதம் உன்னதமான மதமாக இருக்கலாம். உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்ட மதமாக இருக்கலாம். ஆனால் இந்துக்கள், இந்து அமைப்புக்கள் ஒரு சமுதாயமாக உருப்பெறாத வரையில் இந்துக் கோட்பாடுகளை, உன்னதத்தை அவர்களால் ஒரு போதும் காப்பாற்ற முடியாது.

இந்துவும் ஒரு மனிதன்தான். அவனிடமும் மனித பலவீனங்கள் இருக்கவே செய்யும். அவன் ரத்தத்தில் இந்து மதவெறி ஓடாமல் இருக்கலாம். இந்து கலாசாரப் பெருமை அவனுடைய ரத்தத்தில் இரண்டறக் கலந்து இருக்கிறது. அந்தக் கலாசாரம் பாதிக்கப்பட்டு

*உன்மீது உனக்கு நம்பிக்கை இல்லையென்றால் கடவுள் நேரில் வந்தாலும் பயனில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமோ என்கிற அச்சம் அவனுக்கு ஏற்படு கின்றபோது அவனும் சில பலகீனங்களுக்கு ஆட்படுவது இயற்கையே.

எல்லோரும் மகாத்மா காந்தியாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. ஓர் இந்து, இந்து தர்மப்படி அகிம்சையைக் கடைப்பிடிக்கும் சூழ்நிலையினை உருவாக்கித் தரவேண்டிய பொறுப்பிலும் அதிகாரத்திலும் உள்ளவர்கள் தங்களுடைய கடமைகளைப் புறக்கணித்துவிட்டு, இந்துவுக்கு உபதேசம் செய்வது பயனளிக்காது.

இமயமலைச் சாரலிலே நம்முடைய முனிவர்கள் தவம் இயற்றி பிரபஞ்ச இரகசியங்களைக் கண்டறிந்து சொன்னார்கள். குமரி முனையிலே நம்முடைய மகான்கள் தவம் இயற்றி, இந்து மதத்தின் பெருமைகளை உலகிற்கு உணர்த்தினார்கள்.

இந்து கலாசாரத்தில் மூழ்கி உள்ள நமக்கு, இந்து கலாசாரத்தை அலட்சியப் படுத்தவோ, புறக்கணிக்கவோ மேற்கொள்ளப் படும் முயற்சிகள் அனைத்தையும் நாம் அனைவரும் முழு மூச்சுடன் எதிர்க்க வேண்டும். இந்துக்களின் பெருந்தன்மையும் மனிதாபிமானமும் ஏமாளித்தனம் என்கிற முத்திரைக்கு ஆளாக முடியாது. இந்துக்களின் மனிதநேயம் உலகறிந்த ஒன்று.

இன்று தமது நாட்டில் பல இடங்களில் இந்துக்களுக்கு ஏற்பட்டுவரும் அவமதிப்பை அனைவரும் அறிவோம். இவற்றுக்கு எதிராக சிலர் போராடி வருகிறார்கள். அவர்களுக்கு இறைவன் பூரண பலத்தைக் கொடுப்பான். இதில் சந்தேகம் இல்லை. ஏனெனில் இந்து மகான்கள் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்துக்கள் கண்ட ஆன்மீகம் காலத்தை வென்று நிற்கக்கூடியது.

சமய வாழ்வு என்ற தலைப்பில் கடந்த 39 மாதங்களாக எனது சில கருத்துக்களை எழுதி வந்திருக்கிறேன். சமய வாழ்வை சில தலைப்புக்களில் கொண்டுவர முடியாது. ஒவ்வொரு விடயமாக சிலவற்றை எழுதியுள்ளேன். இந்து மதம் வாழ்வியல் மதம் என்பதால், எந்த விடயத்தோடும் இன்னொரு விடயம் தொடர்புகொண்டதாகவே இருக்கிறது. அப்படிச் சிந்திக்கும்போது ஒரு கட்டுரையில் சொல்லப் பட்ட விடயம் இன்னொரு கட்டுரையில் இடம் பெறுவது தவிர்க்கமுடியாதது ஆயிற்று. கூடுமானவரை திரும்பிச் சொல்லும்போது தேவையான அளவுக்கு சுருக்கத்தைக் கையாண்டு இருக்கிறேன்.

இந்து மதம் ஏனைய மதங்களைப் போல கோட்பாடுகளின் தொகுப்பு அல்ல. வெறும் உபதேசங்களை மட்டும் கொண்டதும் அல்ல. அறிவின் பரப்பளவு முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்ட, சிந்தனைவளம் கொண்ட வரலாற்றுப் பொக்கிசம் இந்துமதம்.

வேறு எந்த மதத்தையும் குறைத்து மதிப்பிடுவது எனது நோக்கம் அல்ல. ஒரு மதம் உண்மையானது என்றால் எல்லா மதங்களும் உண்மையானவைதான் என சுவாமி விவேகானந்தர் கூறி இருக்கிறார்.

ஆகவே எனது கட்டுரைகள் மற்ற மதங்களைக் குறைத்து மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டதல்ல. சிற்சில இடங்களில் மத மாற்றங்களுக்கு எதிராக எனது கருத்தைப் பதிவு செய்துள்ளேன்.

நமது நாட்டு இந்துக்கள், இந்து அமைப்புக்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டிய காலம் இது என்பதனை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்தக் கட்டுரைத் தொடரை வாசித்துக் கருத்துக்கள் கூறியவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**"நான் ஒரு இந்து; இந்துவாகவே வாழ விரும்புகிறேன்"**

மீண்டும் புதிய கட்டுரைத் தொடரில் உங்களைச் சந்திக்கின்றேன். (முற்றும்)

*கனவு என்பது தூக்கத்தில் காண்பது அல்ல. உங்களைத் தூங்கவிடாமல் செய்வது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு முறுகண்டிப் பிள்ளையாரின் சுயம்புவும் அற்புதமும்

– திரு வே. சேனாதிராசா அவர்கள் –

வடமாகாணம் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டி வீதியில் (A9) கிளிநொச்சிக்கும் மாங்குளத்திற்குமிடையே எழுந்தருளி இருக்கும் முறுகண்டிப் பிள்ளையாரை அறியாதவர்கள் எவரும் இருக்க முடியாது. இப் பாதையூடாகப் பயணம் செய்பவர்கள் இன மத பேதமின்றி சகலரும் தமது வாகனங்களை விட்டு இறங்கி வணங்கித்தான் செல்வார்கள். அவ்வளவு மகத்துவம் வாய்ந்தவர் இப் பிள்ளையார்.

திரு முறுகண்டிப் பிள்ளையாரின் வரலாறு பற்றி ஆராயவேண்டுமென்ற ஆர்வ மிகுதியால் தற்காலம் கனடாவில் வசிப்பவரும் முன்பு இலங்கை மின்சார சபையில் திட்டப் பொறியியலாளருமாக கடமையாற்றியவருமான திருமதி T.A. தனுஜா அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ள விபரம் பின்வருமாறு.

1885ஆம் ஆண்டு சண்டிலிப்பாயைச் சேர்ந்த வைத்திலிங்கம் என்பவர் முறுகண்டிப் பகுதியில் P.W.D. ஓவசியராகக் கடமையாற்றி வந்தார். இவர் ஒரு தீவிர விநாயகர் பக்தராவர். தினமும் கடமை முடிந்து விநாயகரை வழிபட்டுவிட்டுத்தான் உணவருந்துவார். இவ்வாறு வழிபட்டு வருகையில் ஒரு நாள் விநாயகர் அவரது கனவில் தோன்றி முறுகண்டியில் P.W.Dஆல் வெட்டப்படும் ஒரு கிணற்றில் பிள்ளையார் சிலை காணப்படும். அதனை A9 பாதையின் அருகிலுள்ள பாலை மரத்தின் கீழ் பிரதிஷ்டைபண்ணி வழிபடுமாறு கூறியருளினார். அதே சமயம் இவரது வேலையாட்கள் கிணற்றை கிண்டியபொழுது அங்கு ஒரு விநாயகர் சிலை தென்பட்டது. உடனடியாக ஓவசியர் வைத்திலிங்கம் அதனை எடுத்து கனவில் கண்ட பாலை மரத்தின்கீழ் பிரதிஷ்டை செய்ததோடு இல்லாமல் இரவோடு இரவாக விநாயகருக்கு ஒரு கொட்டிலும் அமைத்தார். மறுநாள் அவரது மேலதிகாரியான வெள்ளைக்காரத் துரை புதிதாக ஒரு கொட்டில் இருப்பதையும் அதனுள் ஒரு சிலை இருப்பதையும் கண்டு மிகவும் கோபமுற்றார். உடனடியாகக் கொட்டிலையும் பிடுங்கி பாலை மரத்தையும் தறிப்பதற்கு உத்தரவிட்டார். வெள்ளைக்காரத் துரையின் கட்டளைக்கு அடிபணிந்த ஊழியர் ஒருவர் பாலை மரத்தில் கோடரியால் ஒரு கொத்து கொத்தினார். என்ன ஆச்சரியம்! பாலை மரத்திலிருந்து இரத்தம் குபீரிட்டுப் பாய்ந்தது. இதனைக் கண்ட வெள்ளைக்காரத் துரை செயலற்றுப் போனார். உடனடியாக விநாயகரை வீழ்ந்து வணங்கி இக் கோயிலுக்கு அதனைச் சூழவுள்ள நிலத்தை 1ஆம் எலிசபெத் மகாராணியாரின் அனுசரணையுடன் ஓவசியர் வைத்திலிங்கத்திற்கு நன்கொடையாக வழங்கினார். அன்று தொடக்கம் ஓவசியர் வைத்திலிங்கம் அவர்களே முறுகண்டிப் பிள்ளையாரை பராமரித்து வந்தார். அதன் பின்பு சின்னக்குட்டி என அழைக்கப்படும் கனகசபை என்னும் வைத்திலிங்கத்தின் மகனால் பராமரிக்கப்பட்டு வந்தது.

*தளராத இதயம் உள்ளவனுக்கு இவ்வுலகில் முடியாதது என்று எதுவும் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1941ஆம் ஆண்டு சின்னக்குட்டியின் பெறா மகன் செல்லப்பாவினாலும், அவருக் குப் பின் அவருடைய பிள்ளைகளாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேற்குறித்த செல்லப்பாவின் மூத்த மகளும் மருமகன் திருநாவுக்கரசுவும் தற்போது வதிரி, இரும்பு மதவடி என்னும் கிராமத்தில் வசித்து வருவ தோடு திரு முறுகண்டிப் பிள்ளையாரையும் பராமரித்து வருகிறார்கள்.

திரு முறுகண்டிப் பிள்ளையாரின் அற் புதங்கள் கணக்கில் அடங்காதவை. அடியவர் களை ஆபத்திலிருந்து காப்பாற்றி பாதுகாத்து வருகின்றார்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

---

மகாபாரதத்தில் கர்ணன் கிருஷ்ணரைக் கேட்டான், "என் தாயார் நான் பிறந்த நேரத்தில் என்னை ஆற்றில் விட்டுவிட்டார். முறைதவறிப் பிறந்த குழந்தை என்றார்கள் இது என் தவறா? நான் சத்திரியன் அல்ல என்று கூறி துரோணாச்சாரியார் எனக்குக் கல்வியைக் கற்றுத் தரவில்லை. இது என் தவறா? பரசுராமர் எனக்குக் கற்றுக்கொடுத்தார். ஆனால் சத்திரியன் எனக்கூறி நான் படித்த எல்லாவற்றையும் மறக்க எனக்குச் சாபம் கொடுத்தார் இது என் தவறா? ஒரு பசு தற்செயலாக என் அம்புமூலம் தாக்கப்பட்டது. அதன் உரிமையாளர் என்னுடைய தவறுக்காக என்னைச் சபித்தார். திரௌபதியின் சுயம்வரத்திலே நான் தேரோட்டியின் மகன் என்பதற்காக அவமானப்படுத்தப்பட்டேன். குந்திகூட இறுதியாக தன் மற்ற மகன்களைக் காப்பாற்ற மட்டுமே என்னைத் தேடி வந்தார். இப்படிச் சுற்றி இருப்பவர்கள் அனைவராலும் வஞ்சிக்கப்பட்டபோது துரியோதனனின் அன்புமூலமாகவே எனக்கு எல்லாம் கிடைத்தது. ஆகையால் அவன் பக்கம் நான் நிற்பது எப்படி தவறாகும்" எனக் கேட்டான். அதற்குக் கிருஷ்ணன் பதிலாக, "கர்ணா நீயாவது பரவாயில்லை. ஆனால், நான் ஒரு சிறையில் பிறந்தேன். என் பிறப்புக்கு முன்பே மரணம் காத்திருந்தது. நான் பிறந்த இரவு அன்றே என் பெற்றோரிடமிருந்து நான் பிரிக்கப்பட்டேன். நீ சிறுவயதிலிருந்து, வாள், இரதங்கள், குதிரைகள், வில், அம்புகள் ஆகியவற்றின் இரைச்சலைக் கேள்விப்பட்டிருப்பாய். ஆனால் நானோ மாடு, கொட்டில், சாணம், வைக்கோல் இவைகளுக்கிடையே வளர்ந்தேன். நடக்க ஆரம்பிக்கும் முன்னே என்னைக் கொல்லப் பல முயற்சிகள் நடந்தன. நல்ல கல்வி இல்லை, இராணுவப் பயிற்சி இல்லை. ஆனால் எல்லோரும் நான்தான் நடக்கும் பிரச்சினை களுக்கெல்லாம் காரணம் என்கிறார்கள். நீங்கள் ஆசிரியர்களால் மதிக்கப்படுகின்றபோது நான் எந்தக் கல்வியையும் பெறவில்லை. நான் 16 வயதில்தான் ரிஷி சாண்திபனியின் குருகுலத்தில் சேர்ந்தேன். நீங்கள் விரும்பிய ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டீர்கள். ஆனால் நானோ நான் விரும்பிய பெண்ணை திருமணம் செய்யாமல் என்னை நேசித்த பெண்களை மேலும் கொடியவர்களிடம் இருந்து காப்பாற்றிய பெண்களைத் திருமணம் செய்துகொண்டேன். ஜராசந்தனிடமிருந்து என் மக்களைக் காப்பாற்றுவதற்காக, யமுனா நதிக்கரையிலிருந்து கடலிலிருந்து தூரத்திலிருந்து என்னுடைய முழு சமூகத்தையும் நகர்த்த வேண்டியிருந்தது. நான் ஓடிப்போன ஒரு கோழை. துரியோதனன் போரில் வெற்றி பெற்றால், உனக்கு நிறைய பொருள், நாடு, சேனை, கௌரவம் கிடைக்கும். ஆனால் பஞ்ச பாண்டவருடன் சேர்ந்து யுத்தம் செய்தால் எனக்கு என்ன கிடைக்கும்? கண்ணன்தான் இந்தப் போருக்கு காரணம் என்ற குற்றச்சாட்டு மட்டுமே மிஞ்சும். கர்ணா ஒன்றை நினைவில் கொள். ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையின் சவால்கள் உள்ளன. வாழ்க்கை எப்போதுமே இலகுவாகவும் எளிதாகவும் இருப்பதில்லை. ஆனால் மனச்சாட்சிப்படி தர்மத்தின்பால் நிற்பதே சரியானதாகும். எத்தனைமுறை நாம் ஏமாற்றப்பட்டோம், எத்தனை முறை நாம் அவமானப்படுத்தப்பட்டோம், எத்தனை முறை வீழ்ச்சி அடைகிறோம் என்பது முக்கியமானதல்ல. அந்த நேரத்தில் நாம் எப்படி மீண்டு எழுந்தோம் என்பதே முக்கியமானது. நம் வாழ்க்கையில் நடக்கும் தவறுகள் நம்மைத் தவறான பாதையில் போவதற்காக உரிமையைக் கொடுக்கவில்லை. எப்போதும் நினைவில் கொள் வாழ்க்கை என்பது ஒரு பாதை. சில நேரங்களில் கரடுமுரடாக இருக்கலாம். அதைக் கடப்பது நம் காலணிகளால் அல்ல. நாம் எடுத்து வைக்கும் அடிகள் மூலமே.

*லட்சியம் இருக்கும் இடத்தில் அலட்சியம் இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காம யாத்திரை
# -எனது அனுபவம்- (தொடர்ச்சி...

-செல்வி சி. நிலா அவர்கள்-

தெய்வானை அம்மன் ஆலய அன்னதானச் செயற்பாட்டில் ஐயாவும் கலந்து அன்ன தானத்திற்கு வரும் அடியவர்களுக்கெல்லாம் தன்னால் ஆன வரையில் உணவுகளை வழங்கி எமக்கும் உணவுகளை வழங்கி தாமும் அன்னதானத்தில் பங்குபற்றியபின், எமது குழுவின ரிடம் மதிய உணவுச் செயற்பாடு முடிந்துவிட்டது. அனைவரும் நாம் தங்கியுள்ள விடுதிக் குச் சென்று இரவு உற்சவம் காண்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டும். வரும் போது சுவாமிக்கு அர்ச்சனை செய்பவர்கள் அர்ச்சனைக்குரிய பொருட்களை வாங்கிவந்து அர்ச்சனையைச் செய்யுங்கள். அத்துடன் இன்று இரவு உற்சவத்தை வெளியே உள்ள மேடை யில் அமர்ந்திருந்து பார்க்கலாம் என்று கூறி எம்மை விடுதிக்கு அழைத்துச் சென்றார்.



நானும் விடுதிக்குச் சென்று கை கால் முகம் கழுவி எனது சோர்வைப் போக்கி கடைகளில் வாங்கும் பொருட்களையும் இன்றே வாங்கி விடுங்கள். நாளைக்கு நேரம் வராது என்று ஐயா கூறியதற்கமைவாக எம்மோடு வந்திருந்த லோஜி அக்காவுடனும் நானும் கடைக் குச் சென்று வீட்டில் உள்ளவருக்கு கொடுக்கக்கூடிய தொதல் மற்றும் சிறு சிறு பொருட்களை வாங்குவதில் ஈடுபட்டோம். களைப்பாக இருக்கிறது விடுதிக்குச் சென்று ஓய்வெடுக்க வேண் டும் என்று கூறியவர்கள் கடைக்குச் சென்று பொருட்களை வாங்குங்கள் என்று ஐயா கூறியதும்

அவசரமாக தவறு செய்வதைவிட தாமதமாக சரிவரச் செய்வது மேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புது உற்சாகத்துடன் அனைவரும் பொருட்களை வாங்க கடைவீதிக்கு வந்துவிட்டார்கள். தத்தமக்கு வேண்டிய பொருட்களை வாங்குவதில் ஈடுபட்டதோடு தாங்கள் வாங்கிய பொருட்களை மற்றவர்களுக்கும் காட்டி பொருட்களின் பெறுமதிக்கேற்ற வகையில் பேரம் பேசி பல கடைகளில் ஏறி இறங்கி பொருட்களை வாங்குவதில் ஈடுபட்டனர். நானும் எனது பங்கிற்குத் தேவையான பொருட்களை வாங்கினேன். ஒரு கட்டத்தில் எதை வாங்குவது என்று திகைத்து விட்டேன். ஏனென்றால் ஒவ்வொரு கடைகளிலும் வகை வகையான பொருட்கள் எல்லாவற்றையும் வாங்கவேண்டும் என்ற அவா. ஆனாலும் நிதி நிலமைக்குத் தக்கபடி பொருட்களை வாங்கினேன்.

அதன்பின்பு விடுதிக்குச் சென்று வாங்கிய பொருட்களை வைத்துவிட்டு ஆலய உற்சவம் காண்பதற்கு அனைவரும் ஆயத்தமானோம். ஐயா கூறியபடி ஆலயத்தில் அர்ச்சனை



செய்பவர்கள் ஆலய சுற்றாடலுக்குள் நுழைய மற்ற அனைவரும் வெளியே உள்ள மேடையில் அமர்ந்திருந்தோம். ஆலய உற்சவம் ஆரம்பமாயிற்று. ஐயாவும் எம்மோடு வந்து இணைந்து கொண்டார். நான் ஐயாவைப் பார்த்து இன்று உள்ளே போகவில்லையா? என்று கேட்க ஐயாவும் உள்ளே என்னைக் கண்டால் நேற்றைய மாதிரி கூட்டிச்சென்று முருகனுக்குச் செய்யும் செயற்பாட்டில் ஈடுபட வைப்பார்கள். அச் செயற்பாட்டால் சிறுசிறு சங்கடங்கள் இருக்கின்றது. என்னால் செய்யப்படும் அலுவல்களை செய்வதற்கு அன்ன தானப்பணியில் ஈடுபடும் அன்பர்கள் பலபேருக்கு ஆசை இருக்கலாம். நான் போனால் எல்லாக் காரியங்களையும் என்னைச் செய்யச் சொல்வார்கள். மற்றவர்கள் மனம் வேதனைப்படும். அத்துடன் என்னை யாரென்று மற்றவர்களுக்கு தெரியாத வகையில் செயலாற்ற வேண்டும். அதற்காகத்தான் இன்று வெளியே வந்திருக்கின்றேன் என்று கூறியதுடன் மேடையில் ஒரு பக்கமாக ஐயாவும் அமர்ந்து கொண்டார். மேடையில் ஐயா அமர்ந்திருக்கும் செய்தியைத் தெய்வானை அம்மன் ஆலயத்தில் இடம்பெறும்

*ஒரு காரியம் நிறைவேறும்வரை அவற்றைப்பற்றி அறிவாளி வெளியில் சொல்லமாட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிக்கு உதவியாளராக கடமையாற்றும் அருள் அண்ணன், மாத்தளை சண் ஐயாவிடம் கூற, அவரும் ஐயாவிடம் வந்து "வாருங்கள் சுவாமி! நாம் போய் இருந்த மேடையின் மறு பக்கம் உள்ள கதிர்காம நிலமையினைச் சந்திப்போம்" என்று கூறி ஐயாவையும் எங்களை யும் கூட்டிச் சென்றார். அவரும் நாங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்திருக்கின்றோம் என்ற தோடு செல்வச்சந்நிதியில் இருந்து வந்திருக்கின்றதை சண் ஐயா அவருக்கு எடுத்துக் கூறியதோடு ஐயாவை அறிமுகப்படுத்த விழைந்தார். ஆனால் அதற்கு முன்பாக ஐயா அவரைத் தெரியும் என்றதோடு செல்வச்சந்நிதிக்கு வந்தபோது சந்நிதியான் ஆச்சிரமத்துக் கும் வந்து இருக்கின்றார் என்று கூற, அவரும் சுவாமிகளை இனங்கண்டு இன்முகத்துடன்





மனிதன் தோல்வியின் மூலமே புத்திசாலி ஆகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்றார். அதன்பின் அவருடன் அமர்ந்து சந்நிதி - கதிர்காமத்துக்குரிய தொடர்புகளை வெளிப்படுத்தி ஐயா தமிழில் சொல்ல சண் ஐயா சிங்கள மொழியில் நிலமை அவர்களுக்கு புரிய வைத்தார். அதன்பின் சுவாமி வீதிஉலா தொடங்க அவருடன் இருந்து வீதியுலாவைப் பார்த்தோம். ஐயாவுடன் வந்திருந்த எங்களைவிட மற்றவர்கள் மேடையில் இருந்து நடைபெற்ற நிகழ்வுகளைப் பார்த்தார்கள்.

இரவு உணவை முடித்தகையோடு, ஐயா எம்மிடம் வந்து நாளை மலைக்கு ஏறவேண்டும். அங்கேயும் அவல் குழைத்து படைக்க வேண்டும். மலைக்கு கொண்டு போகின்ற பொருட்களைச் சரிபார்த்து எடுத்து வையுங்கோ. அதிகாலை நான்கு மணிக்கு எல்லோரும் எழுந்து உடுத்த உடுப்போடு ஆலயத்திற்குச் சென்று மாணிக்க கங்கையில் நீராடி ஈர உடையுடன் ஆலயத்தில் இடம்பெறும் பூசை வழிபாட்டில் பங்குபற்றி அப்படியே மலை ஏறுவதற்கு உரிய ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும். மலை அடிவாரம் வரை எமது பேருந்தில் செல்லலாம். பின்பு எல்லோரும் மலை ஏறி சுவாமி தரிசனம் செய்ய வேண்டும். அதிகாலை நான்கு மணிக்கு எல்லோரும் போகவேண்டும் என்று கூறிவிட்டு ஐயா போய்விட்டார்.



என் வயதையொத்த அனைவருக்கும் நாளை மலை ஏறி வழிபடுவதையிட்டு ஒரே சந்தோசம். ஏனெனில் கதிர்காமம் வருவோமா? மலை ஏறுவோமா? என்றிருந்த எனக்கு இப் பாக்கியம் சந்நிதி வேலவனது அருளாலும் ஐயாவின் ஆசியோடும் கிடைத்தது என் பூர்வ புண்ணிய பலன் என்றே கூறவேண்டும். இதைத் தொடர்ந்து வருடம் தவறாமல் பல தடவை கதிர்காமம் சென்றிருந்தாலும் நான் முதன் முதலாக கதிர்காமம் சென்று முருகனைத் தரிசித்த போது இருந்த உள்ளுணர்வு மூலம் ஏற்பட்ட பரவசநிலை சொல்லுந்தரமன்று.

என் நிலை இப்படியிருக்க என்னோடு வந்த வயது முதிர்ந்தவர்கள் எங்களால் மலை ஏற முடியுமோ, முடியாதோ என்று தெரியவில்லை. ஐயா வரச் சொல்லிவிட்டார். கட்டாயம் போய்த்தான் ஆகவேண்டும். அவ்வளவு உயரத்துக்கு ஏற முடியாது. ஏற இயலாவிட்டாலும் மலை அடிவாரத்துக்குச் சென்று தேங்காய் உடைத்து கற்பூரம் கொளுத்தி அடிவாரத்தில் இருப்போம். ஏறுபவர்கள் ஏறிப்போய்விட்டு வரட்டும் என்ற எண்ணத்துடன் ஒரு சிலர்; எப்படியாவது ஏற வேண்டும் என்ற மனத் தைரியத்துடன் ஒரு சிலர்; ஆனால் எல்லோருக்கும் மலை ஏறி உச்சியில் அமர்ந்திருக்கும் முருகனைத் தரிசிக்க வேண்டும் என்ற முனைப்பு மட்டும் பெரிதாக அவர்களது உரையாடலில் தெரிந்தது. (தொடரும்...

வாழ நினைப்பவனுக்கு வானம்கூட வாயிற்படிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னதானக் கந்தனாய் செல்வச்சந்நிதி வந்தான்

சந்நிதி வேலனின் நாமம் உரைக்களம்
சிந்தை நிறைந்து மகிழ்விக்க - விந்தைதனை
காட்டும் கருணா கரனைக் கணப்பொழுதும்
பாட்டிசைத்து வாழ்த்துவோம்வா ரீர்.

பிறப்பிறப் பென்றுமில்லாக் கூர்வேல் குமரா
இறப்புளார்முன் இன்முகனாய்த் தோன்றி - அறம்நிறை
தெய்வ நினைவுடையார் துன்புறா நற்கதிபெற்
றுய்யவழி காட்டி விடு.

சூரனைக் கொன்றொழித்த செம்மல் அறுமுகன்
வீரமதைக் காட்டி வலம்வரும் - தீரன்
நமையெல்லாம் காத்திடும் நாயகன் நீதான்
உமையன்றி யாரிங் குளர்.

பசித்திருப்போர்க் கன்னம் பகிர அடியார்
புசிக்க நிறைவாய் மகிழும் - வசிகரா
காலைப் பிடித்துன்மேற் காதல் புரியவுன்
வேலை வெளியே காட்டு.

திருப்பரங்குன் றத்தில்தெய் வானைமணம் பூண்டு
திருச்செந்தூ ரில்காட்சி தந்தெம் - அருளாளன்
வேலதனைச் சந்நிதியில் வேதாந்தன் கைபிடிக்கும்
கோலமதைப் பார்களி கூர்ந்து.

பழனியில் ஆண்டியாய் தோன்றி அருள்வான்
பழமுதிர்ச் சோலைப் பதுமன் - அழகனாய்
நல்லூரில் காண்பானாம் அன்னதானக் கந்தனாய்
செல்வச் சந்நிதி வந்து.

திருப்பரங் குன்றமதில் வள்ளியுடன் கூடி
திருத்தணி கையில்தெய்வ யானையுடன் - ஒருங்கே
அவதாரம் செய்வான் சுவாமி மலையில்
சிவகுரு நாத னாய்.

- சூ. சாந்தநாதன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: QD/78/NEWS/2020

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org